அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



# ஆண்டறிக்கை

2017

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# ஆண்டறிக்கை 2017

அரிமரச் சந்தைக்கான உண்மையான தலைமைத்துவம்

# எமது நாளைய தினம்

## நோக்கு

நம்பிக்கைமிகு, உயர் தரமிக்க அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளை வழங்குவதில் நாட்டின் தலைவராகத் திகழ்தல்

## பணி

காலத்திற்குக் காலம் பெற்றுக் கொண்ட அறிவு, தேர்ச்சி ஆகியவற்றைப் பயன்படுத்தி எமது வாடிக்கையாளர்களுக்கு அரிமரம் மற்றும் மரத்தாலான பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் இலங்கையின் தேசிய மற்றும் சுற்றாடல் சார் தேவைகளுக்குப் பங்களித்தல்



நாட்டில்
நம்பிக்கைமிகு, உயர் தரமிக்க
அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளை
வழங்கும் ஏகத் தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஆகும்.
நாம் எப்போதும் கூட்டுத்தாபனத்தின் பேண்தகு நீடித்த அபிவிருத்தியிலும்
வாடிக்கையாளர்களின் தெரிவுகளுக்குப் பூரணமாகப் பொருந்தக்கூடிய
உற்பத்திகளை விநியோகிப்பதிலும் கண்ணும் கருத்துமாக உள்ளோம்.
49 வருட கால அனுபவம் மற்றும் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய கட்டமைப்பு
கூட்டுத்தாபனத்தின் வெற்றிக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் வழிகோலும்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஆரம்பமும் இன்றும் | 5 |
| நிதிசார் முக்கிய பதிவுகள் | 6 - 7 |
| நிறுவனத் தகவல்கள் | 8 |
| முகாமைத்துவக் குழு | 9 - 11 |
| தலைவரின் செய்தி | 14 - 16 |
| விருதுகள் மற்றும் பாராட்டுக்கள் | 17 |
| பொது முகாமையாளரின் மீளாய்வு | 18 - 19 |
| எமது பொறுப்புக்கள் மற்றும் வர்த்தகப் பெறுமானங்கள் | 20 - 21 |
| பணிப்பாளர் சபை | 22 - 23 |
| சிரேட்ட முகாமைத்துவக் குழு | 24 - 25 |
| பணிப்பாளர் சபை மீளாய்வு | 28 - 32 |
| எமது அடைவு | 33 - 37 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியின் அறிக்கை | 38 |
| வர்த்தகப் பொழிப்பு | 39 - 41 |
| ஒரு தசாப்தத்திற்கான கண்ணோட்டம் | 44 |
| தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பு | 45 |
| கூட்டுத்தாபன சமூகப் பொறுப்பு | 48 - 49 |
| இடர்நேர்வு முகாமைத்துவம் | 50 - 53 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 56 - 73 |
| வருடாந்த கணக்குகள் | 74 - 97 |
| நிதிசார் கலைச் சொற்கள் | 98 |


# ஆரம்பம்...

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 1968 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட அரசாங்கத்திற்குரிய வர்த்தக நிறுவனமொன்றாகும். அது காணி, நீர்ப்பாசன மற்றும் மின்வலு அமைச்சரினால் 1957இன் இல 49ஐக் கொண்ட அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் மற்றும் அதன் பின்னர் 1982.02.05 ஆந் திகதிய இல 178/10ஐக் கொண்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2009.06.26ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் மேலும் திருத்தப்பட்டு கூட்டிணைக்கப்பட்டது. கூட்டுத்தாபனத்தின் ஆரம்ப மூலதனம் 2.5 மில்லியன் ரூபாவாகும்.

# இன்று நாம்...

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகம் பத்தரமுல்லை, "சம்பத்பாயா" வளாகத்தில் அமைந்துள்ளதுடன், இது கூட்டுத்தாபனத்தின் மையமாகவும் அதன் உப பிரிவுகள் நாடளாவிய ரீதியிலும் அமைந்துள்ளன. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அதன் வருமானத்தினை முக்கியமாக மர உற்பத்தி மற்றும் விற்பனை மூலம் ஈட்டுகின்றது. பேண்தகு வன அறுவடையினை அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் வன பாதுகாப்புத் திணைக்களத்துடன் இணைந்து பேண்தகு வன நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைய செயற்படுத்துகின்றது.

அதி உயர் தரத்தில் மர உற்பத்திகளையும் சிறந்த சேவையினையும் வழங்குவதற்கு நாம் எப்போதும் முயற்சிக்கின்றோம். கடந்த 49 வருட காலமாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரம் மற்றும் மர உற்பத்தித் துறையில் மிக உயர் மட்டத்தினை அடைந்துள்ளது. அவ வருடங்கள் பூராகவும் நாம் அதி உயர்தர உற்பத்திகளுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோலாகப் பெயர் பெற்றோம்.

# நிதிசார் முக்கிய பதிவுகள்

| திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கானது | | 2017 | 2016 | வித்தியாசம் % |
|---|---|---|---|---|
| **ஈட்டல் தொடர்பான முக்கிய தரவுகள் மற்றும் வீதங்கள்** | | | | |
| வருவாய் | ரூ. '000 | 4,253,774 | 4,213,956 | 1% |
| திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் இலாபம் | ரூ. '000 | 966,804 | 659,732 | 47% |
| திறைசேரிக்கு செலுத்திய வரி | ரூ. '000 | 100,000 | 175,000 | -43% |
| வருமான வரி | ரூ. '000 | 301,063 | 398,053 | -24% |
| வருடத்திற்கான தேறிய இலாபம் | ரூ. '000 | 242,328 | 35,276 | 587% |
| உரிமைப்பங்கு மீதான ஈட்டல்கள் | % | 5.7 | 0.9 | 548% |
| சொத்துக்கள் மீதான ஈட்டல்கள் | % | 3.8 | 0.7 | 486% |
| | | | | |
| **ஐந்தொகை முக்கிய தரவுகள் மற்றும் வீதங்கள்** | | | | |
| மொத்த சொத்துக்கள் | ரூ. '000 | 6,317,702 | 5,384,826 | 17% |
| மொத்த உரிமைப் பங்கு | ரூ. '000 | 4,230,694 | 3,988,297 | 6% |
| மொத்த படுகடன்கள் | ரூ. '000 | 2,087,008 | 1,396,460 | 49% |
| கடன்/உரிமைப் பங்குகள் | % | 49 | 35 | 41% |
| கடன்/மொத்த சொத்துக்கள் | % | 33 | 26 | 27% |
| | | | | |
| **ஏனைய தகவல்கள்** | | | | |
| மொத்த ஊழியர்கள் | எண். | 2,083 | 2,125 | -2% |
| ஊழியர் ஒருவரின் வருவாய் | ரூ. '000 | 2,042 | 1,983 | 3% |
| ஊழியர் ஒருவருக்கான இலாபம் | ரூ. '000 | 464 | 310 | 49% |

விற்பனைப் புரள்வு (மி.ரூ.)




வருடத்திற்கான விபரமான வருமானம் (மி.ரூ.)




மொத்த சொத்துக்கள் (மி.ரூ.)




ஊரிமையாண்மை மீதான வருவாய்




திறைசேரி மற்றும் வருமான வரிக்கு முன்னர் இலாபம் (மி.ரூ.)



# நிறுவனத் தகவல்கள் - 2017

| | | |
|---|---|---|
| கௌரவ திரு. மைத்ரீபால சிறிசேன | - | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் |
| திரு. டீ.எம்.ஏ.எல்.பி. ஜயரத்ன | - | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர் |
| திரு. அனுர திசாநாயக்க | - | செயலாளர்,மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு |

### பணிப்பாளர் சபை - 2017

| | | |
|---|---|---|
| திரு பி. திசாநாயக்கா | - | தலைவர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |
| திரு எச்.வை.ரீ. பவரகுமார | - | செயற்படு பணிப்பாளர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |
| திரு டீ. விஜேசிறிவர்தன | - | பணிப்பாளர் - திறைசேரிப் பிரதிநிதி |
| திரு எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க | - | பணிப்பாளர் -வனப் பாதுகாப்பு ஜெனரால் |
| திரு. எம்.வீ. கருணாரத்ன | - | பணிப்பாளர் |
| திரு. பி. பன்சலவத்த | - | பணிப்பாளர் |
| திரு. ஏ.எம்.சீ. பெரேரா | - | பணிப்பாளர் |
| திரு எச்.பி.எஸ். நவரத்ன | - | பொது முகாமையாளர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி

| | | |
|---|---|---|
| திரு டீ. விஜேசிறிவர்தன | - | கமிட்டி தலைவர் |
| திரு எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க | - | கமிட்டி உறுப்பினர் |
| திரு. எம்.வீ. கருணாரத்ன | - | கமிட்டி உறுப்பினர் |

### கணக்காய்வு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் திணைக்களம்
306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை.

### பிரதான அலுவலகம் (பதிவுசெய்யப்பட்ட முகவரி)

82, "சம்பத்பாய" ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை, இலங்கை.

### பிரதான வங்கியாளர்

இலங்கை வங்கி

### நிதி ஆண்டு

ஜனவரி 01ஆந் திகதி முதல் டிசம்பர் 31ஆந் திகதி வரை

| | | |
|---|---|---|
| தொலைபேசி | : | +94 11 2 866 600-5 |
| தொலைநகல் | : | +94 11 2 866 623 |
| இணையத்தளம் | : | www.timco.lk |



# முகாமைத்துவக் குழு - 2017

| | | |
|---|---|---|
| பொது முகாமையாளர் (பதில்) | எச்.பி.எஸ். நவரத்ன | M.Sc. (Forestry), PgD in Forestry for Rural Mgt. (Netherland), B.Sc. |
| **பி. பொது முகாமையாளர்கள்** | | |
| பி.பொ.மு. (ஆய்வு,பயிற்சி,அபிவிருத்தி) | கலாநிதி என்.ருவன்பத்திரண | PhD (Forestry) M.Sc. (Forestry), B.Sc. |
| பி.பொ.மு. (உள்ளகக் கணக்காய்வு) | டப்ளியூ.டப்ளியூ.எம்.ஜே. குரே | FCA |
| பி.பொ.மு. (நிதி) | ஜீ.டீ.எஸ். குமாரசிங்க | MBA, B.Sc(Acct.Fin.Mgr), ACA, ACMA |
| பி.போ.மு.- (இயக்குதல்) | எச்.பீ.எஸ். நவரத்ன | M.Sc (Forestry), PgDip in Forestry for Rural Mgt (Netherland), B.Sc. |
| பி.பொ.மு.- (சந்தைப்படுத்தல்) | ஜீ. குணவங்ஷ | BA. (Sp), Dip in Forestry |
| பி.பொ.மு.- (மானிட வள) | எம்.ஏ.சீ.என். சமரசிங்க | MPM, B.Sc (Business studies) Ad.Dip in Mgt. and Admin. |
| **உதவிப் பொது முகாமையாளர்கள்** | | |
| உ.பொ.மு. - (வலய) | எம்.சீ. தேவேந்திர | M.Sc.(Forestry), B.Sc. |
| பதில் உ.பொ.மு.- (சந்தைப்படுத்தல்) | டப்ளியு.பீ. சமந்த | M.Sc.(Forestry), B.Sc., National Dip. in Teaching |
| பதில் உ.பொ.மு.- (பொறியியல், உற்பத்தி) | ஜீ.டீ திசர கமகே | B.Sc. |
| **முகாமையாளர்கள்** | | |
| முகாமையாளர் - (நிர்வாகம்) | ஏ.ஜீ.எச். குலரத்ன | M.LRHRM, PgD.LRHRM, PQHRM, Dip.in Mgt, Dip. in Forestry, Dip.in English, AMCIPM, ACPM |
| முகாமையாளர் - (நிதி) | பி.டீ.ஏ.எம்.டீ. விக்கிரமசிங்க | Dip. (F.A) |
| முகாமையாளர் - (நிதி) | பி.ரீ.என். போவத்த | |
| முகாமையாளர் - (நிதி) | கே.டீ.கே.சீ. டி சில்வா | |
| முகாமையாளர் - (நிதி) | எச்.ஜீ.ஆர். விஜேநாயக்க | |
| முகாமையாளர் - (உள்ளகக் கணக்காய்வு) | எச்.எம்.எஸ். மாதவ | B.Com (Sp) |
| முகாமையாளர் - (இயந்திரப் பொறியியல்) | ஏ.கே.லசித்த எட்மண்ட் | B.Sc.(Engineering) |
| முகாமையாளர் - (கொள்வனவு, கப்பலேற்றல்) | அருண டி சில்வா | |

| | | |
|---|---|---|
| முகாமையாளர் - (தகவல் தொழில்நுட்பம்) | ஏ.பி. மாதுவகே | |
| முகாமையாளர் - (ஆய்வு, பயிற்சி) | சீ.கே. முத்துமால | M.Sc.(Forestry), B.Sc. (Agri) Hons. |
| முகாமையாளர் - (விசேட செயற்றிட்டம்) | ஏ.என்.டப்ளியு.ஏ. ஆனந்த | |
| முகாமையாளர் - (பாதுகாப்பு) | சமிந்த வீரமன் | |
| முகாமையாளர் - (சிலிப்பர்கள்,மின்மா. கம்பங்கள்) | டீ.எம்.என். பு்பகுமார நில்மிணி | B.Sc. |

| பிராந்திய முகாமையாளர்கள்ஃமாகாண முகாமையாளர்கள் | | |
|---|---|---|
| பி. முகாமையாளர் (கொழும்பு) | எச்பி.எஸ். திசாநாயக்கா | BA |
| பி. முகாமையாளர் (மொணராகலை) | ஆர். விஜேதுங்க | B.Sc. (Agri) (Sp) |
| பி. முகாமையாளர் (பண்டாரவளை) | பீ.கே. அஜித் சந்தன | B.Sc. |
| பி. முகாமையாளர் (பூசா) | எம்.டீ.சீ. சம்பத் | BA |
| பி. முகாமையாளர் (தலைமை அலுவலகம்) | டப்ளியூ. கீர்த்தி ரோய் | |
| பி. முகாமையாளர் (அம்பாறை) | எம்.கே.ஜீ. வசந்த ராஜ் | |
| பி. முகாமையாளர் (அனுராதபுரம்) | எச்.எல். நந்தன | B.Sc. |
| பி. முகாமையாளர் (கல்தமுல்லை) | யூ.எஸ்.எம். பெர்னாண்டோ | BA (Sp) |
| பி. முகாமையாளர் (தலைமை அலுவலகம்) | வை.பீ.எம். அமீர் | Dip. in Forestry |
| பி. முகாமையாளர் (இரத்தினபுரி) | டீ.எச். ராஜபக்' | M.Sc.(Forestry), B.Sc |
| பி. முகாமையாளர் (நுவரெலியா) | எச்.பீ. ரஜவத்த | B.A |
| பி. முகாமையாளர் (தலைமை அலுவலகம்) | யூ.பி.எச். உளுவடுகே | B.Sc. |
| பி. முகாமையாளர் (கண்டி) | ஈ.எம்.எஸ். ஏக்கநாயக்க | |
| பி. முகாமையாளர் (யாழ்ப்பாணம்) | எஸ். ஸ்கந்தராஜா | |
| பி. முகாமையாளர் (குருணாகலை) | ஏ. எஸ் விஜேசுந்தர | |
| பி. முகாமையாளர் (மாத்தறை) | டப்ளியூ.ஜ. சாரங்க | B.Sc (Hons) |
| பி. முகாமையாளர (கெப்பிட்டிபொல) | ஏ.பீ.எம். வீரசிங்க | BA |

| பிரதி முகாமையாளர்கள் | | |
|---|---|---|
| பி. முகாமையாளர் (சட்டம்) | கே.ஜ.டீ.பி. காரியவசம் | LLB.Attorney at Low |

| | | |
|---|---|---|
| பி. முகாமையாளர் (வடிவமைப்பு,தரக்கட்டுப்பாடு) | ஈ.எம்.எம். பெர்னாண்டோ | |
| தொகுதிப் பகுப்பாய்வாளர் | டப்ளியூ.எச்.ஏ. சந்திரகுமார | B.Sc. |
| | ஜே.எம்.எம்.பீ. ஜயசுந்தர | B.Sc.(Sp) Hons. |
| பி. முகாமையாளர் (மனித வளம்) | கே.ஏ. ஆனந்த திலக்கசிறி | |
| | எச்.பி. பெரேரா | |
| பி. முகாமையாளர் (நிதி) | யூ.எஸ். மடவல | |
| | எச்.எம்.பி.பீ. ஹேரத் | |

| பிரதிப் பிராந்திய முகாமையாளர்கள் | | |
|---|---|---|
| பி. பி. முகாமையாளர் (கல்தேமுல்லை) | சுனில் ஜயரத்ன | |
| பி. பி. முகாமையாளர் (மாத்தறை) | எல்.எஸ். ஜயசேக்கர | |
| பி. பி. முகாமையாளர் (தலைமை அலுவலகம்) | டீ.ஏ. ஹெந்தாவித்தாரண | |
| பி. பி. முகாமையாளர் (கண்டி) | ஆர்.சீ. சமன் குமார | |
| பி. பி. முகாமையாளர் (மின்னே-ரியா) | துமிந்த நவரத்ன | BA |
| பி. பி. முகாமையாளர் (யாழ்ப்பாணம்) | ரீ.பீ. ரமேஷ் | |
| பி. பி. முகாமையாளர் (இரத்தினபுரி) | எச்.ஏ. காமினீ அல்விஸ் | |
| பி. பி. முகாமையாளர் (மாத்தளை) | டீ.எல். அபேநாயக்கா | |
| பி. பி. முகாமையாளர் (மொணராகலை) | எஸ்.சீ. ஜயமான்ன | B.Sc |



# தேக்கு மரம்

(Tectona grandis) தேக்கு மரமானது அயன மண்டல காலநிலைக்குரிய மிகவும் பெறுமதிமிக்க வன்மரங்களுள் முதலிடம் வகிக்கும் மரமாகும். தேக்கு மரத்தினை தென் மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் பிரதானமாக இந்தியா, பாகிஸ்தான், வாங்காளதேசம், பர்மா, தாய்லாந்து மற்றும் இலங்கை காடுகளில் மற்றும் வீட்டுத் தோட்டங்களில் காணலாம். தேக்கு இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட தாவரமாகும். தேக்கு வகைகள் 3இனை இனங் காணலாம். 01. Tectona grandis (சாதாரண தேக்கு) 02. Tectona hamiltoniana (பார்மா நாட்டிற்குரிய தாவர இனம்) 03. Tectona philippinensis பிலிப்பீன் நாட்டிற்குரிய தாவர இனம்). இந்தியாவில் 2000 ஆண்டுகளையும் விடப் பழமையான ஞயடளநவவந பன்சலை கட்டுமானத்திற்கு பயன்படுத்தப்பட்ட தேக்கு மரம் இன்று வரையில் மிகவும் சிறந்த நிலையில் இருப்பதாக அறியப்படுகின்றது. 1786 – 1825 ஆண்டுகளின் போது ஐரோப்பாவின் கப்பல் நிர்மாணப் பணிகளுக்கு பர்மாவின் ரங்கூன் பிரதேச தேக்கு பயன்படுத்தப்பட்டது. அதனால், பர்மாவின் தேக்குகளுக்கு ரங்கூன் தேக்கு எனப் பெயர் வழங்கலாயிற்று. இலங்கையில் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் தேக்கு வனப்பயிர்ச் செய்கை 30000 ஹெக்டேயர் அளவில் உள்ளதுடன், இலங்கையில் வரள் மற்றும் இடைநிலை வலயங்களில் வீட்டுத் தோட்டங்களிலும் தேக்கு பயிர்ச் செய்யப்படுகின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தால் வருடாந்தம் 35000 கன மீற்றர் அளவிலான தேக்கு மர உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

*மூலம்*
***இலங்கை அரிமரத் தாவரங்கள்***
*கலாநிதி நிமல் ருவன்பத்திரண*



# தலைவரின் மீளாய்வு

*அரிமரம் மற்றும் அரிமரஞ்சார் பொருட்களுக்கு உள்ள உயர் கேள்வியின் விளைவாக சட்டரீதியற்ற முறையில் காடழிப்பை மேற்கொள்வதற்கு உந்தப்பட்டுள்ள இக்காலகட்டத்தில் வன முகாமைத்துவத்தினூடாக மாத்திரமே வனவளங்களை எதிர்கால பரம்பரையினரின் தேவைகளுக்காக பாதுகாக்க முடிகிறது. பேண்தகு அரிமர விளைச்சலை அறுவடை செய்வதன் மூலம் காடழிப்பினைக் குறைக்கலாம்.*

2017 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை முன்வைப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். ஏறத்தாழ ஐந்து தசாப்த கால சேவை வரலாறு பூராகவும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மக்களின் நம்பிக்கையை வென்ற பெறுமதிமிக்க அரிமரம் மற்றும் மரத் தளபாடங்களை வழங்குவோனாக முன்னோடித் தலைமைத்தவத்தினைத் தாங்கி நிற்கின்றது. விரிவாக்கப்பட்ட செயற்பாட்டு வலையமைப்பு மற்றும் நம் வசமிருக்கும் 12 பிராந்திய அலுவலகங்கள், 51 விற்பனை நிலையங்கள், 200ற்கும் மேற்பட்ட மர வெட்டுகை நடைபெறும் செயற்படு வேலைத்தளங்கள், மரப் பதனிடல் மற்றும் பரிகரித்தல் ஆகியவற்றிற்கான பொறித்தொகுதிகளைக் கொண்ட 3 தளபாட உற்பத்தி நிலையங்கள் என்பன அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நாட்டின் மாபெரும் அரிமர உற்பத்தி உற்பத்தி வலையமைப்பின் உரிமையாளர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுகளில் போலவே 2017ஆம் ஆண்டிலும் சவால்கள் பலவற்றிற்கு முகங் கொடுக்க நேரிட்டதும், அரசாங்கக் கொள்கைகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் முன்னெடுக்கும் பயணப்பாதை புதிய பல்வேறு அனுபவங்களுடன் வேறுபட்ட நடைமுறையினை நோக்கிச் செல்ல முடிந்தது. இவ்வாறான பின்னணியிலும் உற்பத்தி, விற்பனை, நிதி ஆகிய பிரிவுகளை வலுப்படுத்தி அதற்கு இணைவாக புதிய தொழில்நுட்பம் மற்றும் புதிய உபாய வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் மிகவும் வெற்றிகரமாக இவ்வாண்டினை நிறைவுசெய்வதற்கு எம்மால் முடிந்தது.

இலங்கை 2016இல் அடைந்த 4.5மூ பொருளாதார அபிவிருத்திக்கு ஒப்பாக அரச கொள்கைகள், காலநிலை மாற்றங்கள் மற்றும் வெளிநாட்டு சவால்களுக்கு முகங்கொடுத்து 2017 ஆம் ஆண்டின் போது 3.1மூ அபிவிருத்தி காட்டப்பட்டுள்ளது. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு விவசாய, தொழில்நுட்ப, சேவைகள் ஆகிய துறைகளின் பங்களிப்பு முறையே 6.9மூ, 26.8மூ, 56.8மூ எனப் பதிந்துள்ளதுடன், தொழில்நுட்ப மற்றும் சேவைகள் ஆகிய துறைகளில் 3.9மூ மற்றும் 3.2மூ அபிவிருத்தி காணப்பட்டதுடன், சாதகமற்ற காலநிலை நிலவிய காரணத்தால் விவசாயத்துறை 0.8மூ ஆல் வீழ்ச்சியடைந்தது. அரச துறையினை நோக்கின் அரச ஊழியர்களின் வருமானம் உயர்வடைந்ததன் காரணமாக உள்நாட்டு நுகர்வில் மாற்றம் ஏற்பட வழிகோலியது. உலகப் பொருளாதாரத்தின் மந்தமான அபிவிருத்தி உள்நாட்டுப் பொருளாதாரத்திலும் செல்வாக்குச் செலுத்துவதாயிற்று. பணவீக்கம் நிலையான மட்டத்தில் பேணுவதன் மூலம் பொருளாதார அபிவிருத்தியை நோக்கிப் பயணிக்கும் சவாலை வெற்றிகரமாக முகங்க் கொடுக்க முடிந்தது. இவ்வாறு இலங்கை பொருளாதாரம் காணப்பட்ட றிலைமையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 2017ஆம் ஆண்டின் சவாலை எதிர்கொண்டு வெற்றிகரமாகத் தமது வியாபார நடவடிக்கைகளைச் செயற்படுத்தியது

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையில் முக்கியமாகச் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் வன முகாமைத்துவம் குறித்து பொருளாதார, சமூக, அரசியல், உயிரியல் ரீதியான பின்னணியினைப் புரிந்து கொள்வதும், அப்பிரிவினை சமநிலைப்படுத்துவதும் எச்சரிக்கைமிக்கதும் சவால்மிக்கதும் என்றாலும் முறையான முகாமைத்துவத்தின் மூலம் எதிர்கால அரிமர வழங்கலை நிலையான மட்டத்தில் பேணலாம். ஏனைய பொருட்களுக்கான கேள்வியைப் போன்றல்லாது, தளபாடங்களுக்கான கேள்வி பொருளாதாரம் மற்றும் சுற்றாடல் ஆகியவற்றுடன் பின்னிப்பிணைந்துள்ளது. அதனால், மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றும் கூடிய செலவு காரணமாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இலாபம் தொடர்பில் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. காடழிப்பு தற்போது காணப்படும் பாரிய சுற்றாடல் பிரச்சினையாகும். அரிமரம் மற்றும் அரிமரஞ்சார் பொருட்களுக்கு உள்ள உயர் கேள்வியின் விளைவாக சட்டரீதியற்ற முறையில் காடழிப்பை மேற்கொள்வதற்கு உந்தப்பட்டுள்ள இக்காலகட்டத்தில் வன முகாமைத்துவத்தினூ டாக மாத்திரமே வனவளங்களை எதிர்கால பரம்பரையினரின் தேவைகளுக்காக பாதுகாக்க முடிகிறது. பேண்தகு அரிமர விளைச்சலை அறுவடை செய்வதன் மூலம் காடழிப்பினைக் குறைக்கலாம். அதாவது, அரிமர விளைச்சலை அறுவடை செய்யும் போது வன பயிர்ச்செய்கை நிலத்தில் உற்பத்தி ஆற்றலைப் பாதுகாக்கும் விதத்தில் மிகவும் முறையான மற்றும் விஞ்ஞான ரீதியில் செயற்படுவதனாலும் முதிர்ந்த மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்களை நட்டி, புதிய வன பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சமூகத்திற்கு நீண்ட கால நலன்களை ஏற்படுத்திக் கொடுக்க முடிகிறது. எவ்வாறெனினும், மரம் என்பது நிலையாக இருக்கக்கூடிய ஓர் உயிர் அன்று. ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் முதிர்ச்சியடைந்த மரங்கள் உக்கிப் போய், அதற்குப் பதிலாக வேகமாக வளரும் இளம் மரங்கள் அந்நிலத்தினை ஆக்கிரமிப்பதன் மூலம் இயற்கையாகவே புதிய மரங்களின் மீள் நடுகை நடைபெறுகின்றது. வுனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் உரிய முகாமைத்துவத் திட்டத்தின் பிரகாரம் வருடாந்தம் எம்மிடம் விடுவிக்கப்படும் முதிர்ச்சியடைந்த வனப் பயிர்ச்செய்கை, சரியான முறைமைகளின் படி விஞ்ஞான ரீதியாக வீணாதலைக் குறைக்கும் விதத்தில் அரிமரமாக மாற்றி, அந்நிலத்தினை மீண்டும் வனப்பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக விடுவிப்பது எமது நிறுவனத்தினால் நிறைவேற்றப்படுகின்றது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தால், அதன் செயற்பாடுகளை முறையான முகாமைத்துவத்தின் மூலம் மிகச் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதற்கும் தொழிற்றுறையின் அபிவிருத்திக்காகவும் பாரிய பங்களிப்பினை வழங்குவதற்கு முடிகின்றமை எமக்கு கிடைத்தற்கரிய பெரும் பேறாகும். மென்மேலும் போட்டிமிக்க நன்மைகளைப் பெற்றுக் கொள்ளல், தரத்தில் உயர்ந்த பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் வாடிக்கையாளரைத் தெரிவுசெய்யும் பரப்பினை விரிவுபடுத்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக புதிய நிதி ஆண்டின் போது புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல் , புதிய சந்தைப்படுத்தல் உத்திகளை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றிற்கு மூலதன முதலீடுகளை விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், 2017ஆம் ஆண்டினை எல்லா தடைகளையும் வென்று எதிர்பார்த்த விதத்திலேயே மிக வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு எம்மால் முடிந்தது.

இந்நிலைமையின் கீழ், மீளாய்விற்கு உட்படும் ஆண்டிற்கான பதிவு செய்யப்பட்ட வருமானம் 4,254 மில்லியன் ரூபா ஆகும். இவ்வருமானத்தினை ஈட்டிக் கொள்வதற்காக இவ்வாண்டினுள் அறிமுகப்படுத்தப்பட்ட புது தொழில்நுட்ப முறைகள் மற்றும் புதிய உபாயங்கள் பெரிதும் வழிகோலின. கடந்த வருடத்தின் 443 மி.ரூபா செயற்படு இலாபம் இவ்வருடத்தில் 693 மி.ரூபாவானதுடன், திறைசேரி வரி மற்றும் வருமான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் 2017இல் 967 மி.ரூபாவாக உள்ளதுடன், 2016இல் 660 மில்லியன் ரூபாவாக இருந்தது. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2017இன் போது அது 47மூஆல் அதிகரித்துள்ளது. 2016இல் 87 மி.ரூபா திறைசேரி வரி மற்றும் வருமான வரிக்குப் பின்னரான தேறிய இலாபமாக இருந்ததுடன், 2017இல் 567 மி.ரூபாவாக அதிகரித்தது. அவ்வாறே 2017ஆம் ஆண்டினுள் 2,055 மில்லியன் ரூபாவான உரிமைப்பங்கு, செயற்படு வரி, திறைசேரிக்குச் செலுத்திய விசேட வரி என அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2017ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் சிலிப்பர் கட்டைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் 1.1 மி. ரூபா அந்நிய செலவாணி ஈட்டப்பட்டுள்ளது. உயர்ந்து செல்லும் கேள்விக்கு பரிகாரமாக கிழித்த மரங்களை இறக்குமதி செய்வதற்கும், உயர் தரத்தில் கிழித்த மரங்களை இறக்குமதி செய்வதன் மூலம் சந்தையில் காணப்படும் தரக்குறைவான அரிமரப் பாவனையிலிருந்து வாடிக்கையாளரைப் பாதுகாக்கவும் முடிந்தது. மேலும், அதிகரித்துச் செல்லும் அரிமரக் கேள்வியினை நிவர்த்தி செய்வதற்காக மென்பலகைகளை நீண்ட காலம் நீடிக்கக் கூடிய விதத்தில் தேவையான தொழில்நுட்பம் மற்றும் துறைசார் அறிவினை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினுள் பெற்றுக் கொண்டு, அரிமரப் பரிகரிப்பு மூலம் நாட்டின் பெறுமதிமிக்க அரிமர வளத்தினைப் பாதுகாத்து அதன் உற்பத்திக்காக பொருத்தமான சந்தை வாய்ப்பினை உருவாக்குவதற்கு எம்மால் முடிந்தது. நவீன இயந்திரோபாயங்களைப் பயன்படுத்தி அரிமரம் வீணாதலைக் குறைத்தும், அரிமரத்தினால் உச்ச பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்ள முடியுமான முறைமைகளை அறிமுகப்படுத்தல் மூலம் நிலையான அபிவிருத்தியினை நோக்கி அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வழியமைத்துக் கொண்டுள்ளது.

கூட்டுத்தாபனத்திற்குரிய பெறுமதிமிக்க வளம் மனித வளம் என்பது எமது நம்பிக்கையாகும். 2017ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டினைப் போன்றே, எமது கூட்டுத்தாபனத்தினால் மனித

வளப் பயிற்சி மற்றும் தொழிற்சார் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் மூலம் ஆற்றல்கள் மற்றும் திறன்களை மேலும் விருத்தி செய்து வாடிக்கையாளருக்கு கூடிய வினைத்திறனுடனும் உச்ச அளவில் சேவைகளை வழங்குவதற்கும் நிறுவனத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டின் செயலாற்றுகைக்கான இவ்வாண்டில் தேசிய வர்த்தகச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய வர்த்தகச் சிறப்பு விருது வழங்கும் வைபவத்தில் அரசாங்க உற்பத்திப் பிரிவிற்கு உரிய பொன் விருதினைச் சுவீகரித்துக் கொள்ள முடிந்தமை எமக்குக் கிடைத்த விசேட வெற்றியாகும்.

2017ஆம் ஆண்டில் கூட்டாகச் செயற்பட்டதன் விளைவாக எல்லா கோணங்களிலும் கட்டுப்பாட்டு நியமங்கள் மற்றும் வர்த்தப் பாவனைகளை விருத்தி செய்வதற்கு ஆற்றல் பெற்றதுடன், மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவின் பிரகாரம் எதிர்கால பரம்பரைக்காக சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள விசேட அலகின் ஊடாகச் செயற்படுத்தப்படும் “துருஜன மாணவர் வங்கி” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மர நடுகையினைப் பலப்படுத்தும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

உலக சுற்றாடல் தினத்தை நினைவு கூர்வதற்கு மாத்தறை, மொணறாகலை, பண்டாரவளை, இரத்தினபுரி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு விவசாய உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்து இளம் பரம்பரையினரிடையே மர நடுகையினைப் பிரபலப்படுத்துவதற்கும், இதற்கு இணைவாக வெளிநாட்டுத் தாவரங்களுக்குப் பதிலாக உள்நாட்டுத் தாவரங்களை நடுவதில் பாடசாலை சிறார்களை ஈடுபடுத்துவதற்கு எம்மால் முடிந்தது. இதற்கு மேலதிகமாக, மொறகஹகந்த களுகங்கை செயற்றிட்டத்திற்கு இணைவாக கருங்காலி, மீ, கும்புக் கன்றுகளைப் பயிர்ச் செய்யும் நிகழ்ச்சி செயற்படுத்தப்பட்டது. அரிமரம் மற்றும் மர உற்பத்திகளை பேண்தகு விதத்தில் பயன்படுத்துதல் குறித்து பாடசாலை ஆசிரியர்களை அறிவுறுத்தும் நிகழ்ச்சிகள் பல நடாத்தப்பட்டதுடன், பல்வேறு தலைப்புகளின் கீழ் தயாரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. “வனரோப்பா” தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்கு செயற்படு பங்களிப்பினை வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடிந்தது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கன்றுகளை நடும் செயற்பாடொன்றினை ஏற்படுத்தவதற்கு மக்கள் பல்வேறு நிறுவனங்களுக்கு இடையில் 50,000 கன்றுகளுக்கும் அதிகமான அளவில் பகிர்ந்தளிக்கப்பட்டன. கன்றுகளை நடுவதற்கு இளஞ் சந்ததியினரை ஆர்வமூட்டுவதற்காக சுற்றாடல்சார், வன பாதுகாப்பு மற்றும் உயிர் பல்வகைத்தன்மை குறித்து விரிவுரைத் தொடரொன்று நடாத்தப்பட்டது.

2017ஆம் ஆண்டில் பல ஆய்வுகளைப் பூர்த்தி செய்வதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடிந்ததுடன், அதன் மூலம் புதுக் கண்டுபிடிப்புக்களை சமூகமயப்படுத்துவதற்கு இயலுமாயிற்று. தேசிய பணியொன்றாகக் கருதி சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் சமூக நலன் ஆகியவற்றிற்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்வதற்கு எம்மால் முடிந்தது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நவீன அபிவிருத்தித் திட்டங்களின் வெற்றிக்காக பாரிய பங்களிப்பினைப் பெற்றுக் கொடுத்து உமா ஓயா மற்றும் மொறகஹகந்த போன்ற பன்னோக்கு நீர்ப்பாசனத் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு ஆதரவு நல்கப்பட்டது. தேசிய பொருளாதாரத்திற்கு பெரும் பங்களிப்பினை வழங்கும் பொறுப்புமிகு குடிமகனாக வறுமையை ஒழித்தல் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வறுமையினை ஒழிப்பதற்காக குறைந்த வருமானம் பெறும் தச்சர்களைப் பயிற்றுவிக்கும் செயல்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன், 2017இல் அதன் முதல் பிரிவினர் தமது பயிற்சியினை முடித்துக் கொண்டனர்.

பணிப்பாளர் சபை சார்பாக கௌரவ மகாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரும் மாண்புமிகு ஜனாதிபதி மைத்ரீபால சிறிசேன அவர்களுக்கும், பிரதி அமைச்சர் அனுராத ஜயரத்ன அவர்களுக்கும் அமைச்சின் செயலாளர் மற்றும் அதன் பணிக்குழாதினருக்கும், வனப் பாதுகாப்பு ஜெனரால் அவர்கள் மற்றும் அத்திணைக்களத்துடன் இணைந்துள்ள எல்லா பணிக் குழாத்தினருக்கும், ஏனைய சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் எமக்கு வழங்கிய பாரிய ஆதரவிற்கு நன்றிகளை மனப்பூர்வமாகத் தெரிவிக்கின்றேன். பல்வேறு கஷ்டங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் எமது பொது முகாமையாளர் உட்பட பணிக்குழாத்தினர் அவர்களது ஆற்றல் மற்றும் நிபுணத்துவ அறிவைப் பயன்படுத்தி கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையை உயர்ந்த மட்டத்திற்கு இட்டுச் செல்வதற்கு எடுத்தக் கொண்ட பாராட்டுதலுக்குரிய முயற்சிகளுக்காக எனது விசேட நன்றிகளை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

2018 புதிய வருடம் சவால்மிக்கதும் உறுதிமிக்கதுமான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி முன்னேறிச் செல்லக்கூடிய புது வருடமாக நாம் திட்டமிட்டுள்ளதுடன், குறுகிய கால சவால்களைச் சளைக்காது முகங்கொடுத்து, எதிர்பார்க்கும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு எமது ஆற்றல்களை உச்ச அளவில் பயன்படுத்தி மிகச் சிறந்த பெறுபேற்றினை அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணிபுரிய கடப்பாடு கொண்டுள்ளோம்.

**பி. திசாநாயக்க**
தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



## சிறந்த அர்ப்பணிப்பின் காரணமாக நாம் விருதுகளுக்கு உரியவராவோம்

தேசிய வணிக சபையினால் நடத்தப்பட்ட தேசிய வியாபார சிறப்பு விருது வைபவம் - 2017 அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் தங்க விருதினை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுவீகரித்துக் கொண்டது.














2009 2010 2011

தேசிய வர்த்தகச் சபையினால் வழங்கப்படும் தங்க விருதினை தொடர்ச்சியாக 2009, 2010, 2011ஆம் ஆண்டுகளில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுவீகரித்துக் கொண்டது.




தேசிய வணிக சபையினால் நடத்தப்பட்ட தேசிய வியாபார சிறப்பு விருது வைபவம் 2016 அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் “தங்க விருதினை”அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுவீகரித்துக் கொண்டது.



தேசிய வணிக சபையினால் 2014ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேசிய வியாபார சிறப்பு விருது வைபவத்தின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் “வெள்ளி விருதினைச்” சுவீகரித்துக் கொண்டது.







தேசிய வணிக சபையினால் 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட தேசிய வியாபார சிறப்பு விருது வைபவத்தின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் சிறப்புத் தேர்ச்சி விருதினைச் சுவீகரித்துக் கொண்டது.



- பசுமை மெக்கோ விருது 2008 - இலங்கை ஊடகச் சங்கம்
- காடு மற்றும் சுற்றாடல்சார் கல்விக்கான பங்களிப்பிற்காக அங்கீகாரம் மற்றும் மதிப்பீட்டு மெக்கோ விருது 2010
- 2009 “தேசத்தின் மகுடம்” கண்காட்சியில் ஆக்கபூர்வமிக்க கண்காட்சிக் கூடம்



# பொது முகாமையாளரின் மீளாய்வு

> *2017 ஆம் ஆண்டினுள் தேறிய விற்பனைப் புரள்வு 4,254 மில்லியன் ரூபாவானதுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருடாந்த தேறிய விற்பனைப் புரள்வினை அதிகரிப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடிந்தது. எவ்வாறெனினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் வருமான வரி மற்றும் திறைசேரி வரிக்கு முன்னரான இலாபம் 660 மில்லியன் ரூபா முதல் 967 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளடன், தேசிய பொருளாதாரத்திற்கு பங்களித்துள்ள தொகை 2,055 மில்லியன் ரூபாவாகும்.*

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை முன்வைக்க முடிவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், வர்த்தகச் செயற்பாடு தொடர்பில் 49 வருட அனுபவத்துடன் முன்னைய ஆண்டுகளைப் போன்றே சவால்களுக்கு சளைக்காது முகங்கொடுத்து வெற்றிகள் பலவற்றுடன் சிறந்த செயலாற்றுகையைப் பதிவு செய்வதற்கு முடிந்தது.

நாம் மிகப் பெறுமதியான அரிமரம் மற்றும் மரத்தாலான பொருட்களை உற்பத்தி செய்து, அப்பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்வதுடன், நிரந்தர வாடிக்கையாளரும் புதிய வாடிக்கையாளரும் எமது சேவை குறித்து மிகவும் திருப்தியடைந்துள்ளனர். தற்காலத்தில் மர உற்பத்திகளுக்கு உலகில் காணப்படும் புதிய தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி அரிமரம் மற்றும் மரத்தாலான பொருட்களை வழங்கும் முன்னோடியாக அரிமர உற்பத்தித் துறையினை உயர்த்திவிடுவதற்கு அரச துறையில் ஒரே அரிமர உற்பத்தியாளனாக அரசாயங்க மரக் கூட்டுத்தாபனம் மிக முக்கியமான பணியினை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது. நாடு முழுதும் 12 பிராந்திய அலுவலகங்கள், 51 விற்பனை நிலையங்கள், 200ற்கும் மேற்பட்ட மர வெட்டுகை நடைபெறும் செயற்படு வேலைத்தளங்கள், மரப் பதனிடல் மற்றும் பரிகரித்தல் ஆகியவற்றிற்கான பொறித்தொகுதிகளைக் கொண்ட 3 தளபாட உற்பத்தி நிலையங்கள் என்பன அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு உரியவை ஆகும்.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம், தேசிய பொருளாதார உபாய முறையாக மற்றும் சிறந்த பொருளாதார கொள்கைகளுக்கு அனுகூலமாக பேண்தகு பொருளாதார அபிவிருத்தியனை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டு 2017ஆம் ஆண்டில் அதன் நோக்கங்கள் மற்றும் கொள்கைகளை நெறிப்படுத்தியுள்ளது. 2017 ஆம் ஆண்டினுள் தேறிய விற்பனைப் புரள்வு 4,254 மில்லியன் ரூபாவானதுடன், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வருடாந்த தேறிய விற்பனைப் புரள்வினை அதிகரிப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடிந்தது. எவ்வாறெனினும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் வருமான வரி மற்றும் திறைசேரி வரிக்கு முன்னரான இலாபம் 660 மில்லியன் ரூபா முதல் 967 மில்லியன் ரூபா வரை அதிகரித்துள்ளடன், தேசிய பொருளாதாரத்திற்கு பங்களித்துள்ள தொகை 2,055 மில்லியன் ரூபாவாகும். திறைசேரிக்கு செலுத்திய 100 மில்லியன் ரூபா விசேட வரிகளில் இருந்து மற்றும் வருமன வரிக்கு பின்னரான இலாபம் 566 மில்லியன் ரூபா எனப் பதிவாகியது. எவ்வாறெனினும், முகாமையின் மற்றும் பணிக்குழாத்தினரின் அர்ப்பணிப்பின் காரணமாக 2017 நிதி ஆண்டினுள் எமது உற்பத்திகளின் தர நியமங்களை மென்மேலும் வலுப்படுத்தி முன்னிலையான செயலாற்றுகையினைப் பதிவதற்கு முடிந்தது. அரச துறையில் உற்பத்தி அலகு சார்பாக வருடத்தின் அதிசிறந்த செயலாற்றுகைக்கான பொன் விருதினை சுவீகரித்து இலங்கை தேசிய வர்த்தகச் சபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட தேசிய வர்த்தக அதிசிறந்த விருதுகள் வைபவத்தில் நாம் பெற்ற வெற்றி, முகாமை மற்றும் பணிக்குழாம் ஆகிய இரு தரப்பினரதும் அரிப்பணிப்பினைச் சான்று பகர்வதாக அமைந்துள்ளது.

பொருளாதாரம் மற்றும் சுற்றாடல் குறித்து வேறெப்போதையும் விடப் பொறுப்புடன் செயற்படுவதற்கு தற்போதிருக்கும் மனப்பாங்குகள் காரணமாக 2017ஆம் வருடம் முழுதும் எல்லா செயற்பாடுகளும் அமுல்படுத்தப்பட்டன. மேலும், □துருஜன மாணவர் வங்கி□ மர நடுகை நிகழ்ச்சித் திட்டத்தினை தொடர்ந்தும் இவ்வருடத்திலும் நடாத்திச் செல்வதன் மூலம் பொறுப்புமிக்க குடிமகனாக எமது பொறுப்பினைத் தோள் மேற்கொண்டு நிறைவேற்ற முடிந்துள்ளது. மர நடுகைக் குறித்து பாடசாலை சிறார்களின் ஆர்வத்தினை மென்மேலும் விருத்தி செய்யும் நோக்கில் மாத்தறை, மொணறாகலை, பண்டாரவளை, இரத்தினபுரி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு விவசாய உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும், உலக சுற்றாடல் தினத்தை நினைவு கூர்வும் முகமாக அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளின் பேண்தகு பாவனை குறித்து ஆசிரியர்களை அறிவூட்டுவதற்கு விரிவுரைத் தொடரொன்று நடாத்தப்பட்டது. அது தொடர்பில் அறிவுட்டவதற்காகத் தயாரிக்கப்பட்ட பெறுமதி மிக்க துண்டுப் பிரசுரமொன்றும் பகிர்ந்தளிக்கப்பட்டது. □வனரோப்பா□ தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கன்றுகளை நடுவதை விருத்தி செய்யும் நோக்கில் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் ஆகியோருக்கிடையே பெறுமதிமிக்க 50,000 கன்றுகளை விட அதிகமான தொகை பகிர்ந்தளிக்கப்பட்டது. ஆய்வு மற்றும் பயிற்சிக்காக பட்டதாரி அபேட்ஷகர்களுக்கு வாய்ப்புக்களையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

□வறுமையினை ஒழித்தல்□ தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றும் வண்ணம் குறைந்த வருமானம் பெறும் தச்சர்களுக்கு பயிற்சி வழங்கியதுடன், அப்பயிற்சிபெறுநர்களுக்கு எமது தளபாடத் தொழிற்சாலைகளில் தளபாட உற்பத்தி குறித்து செயன்முறைப் பயிற்சியொன்றும் வழங்கப்பட்டது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் வாடிக்கையாளர் கேள்வியின் பிரகாரம் அரிமர இனங்காணல் மற்றும் உறுதிப்படுத்தல் சேவையொன்று நிறுவப்பட்டுள்ளது. மிகவும் நம்பிக்கைக்குரிய மற்றும் மிகவும் சிறந்த நிலையில் அரிமர வழங்குனராக ஆகுதல் என்ற கூட்டுத்தாபனத்தின் நோக்குடன் மக்களின் மேம்பாட்டிற்காக மக்கள் சார்பாக தேசிய பணியொன்றினை நிறைவேற்றுவதற்கு எம்மால் முடிந்தது.

தொழில் நேயம்மிகு நெகிழ்வுமிக்க பணிச் சூழலொன்றை கட்டியெழுப்பும் குறித்து கூடிய அவதானம் ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் சக ஊழியர்களின் வாழ்க்கை தரத்தினை உயர்த்துதல், அவர்களின் உடல், உள விருத்தியினை ஏற்படுத்துதல் மூலம் வினைத்திறன்மிகு மற்றும் விளைபயன்மிகு சேவையொன்றினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கினை முன்னெடுத்து உயர்மட்டத்தினை அடைவதற்காக வருடம் முழுதும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. அறிவு, திறன்,மனப்பாங்கு விருத்தியினை நோக்காகக் கொண்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குதல், பல்வேறு பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கு செய்தல் மூலம் உயர் ஊழியர் திருப்தியினைப் பெற்றுக் கொடுத்து கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திக்காக ஊழியர்களை நெறிப்படுத்துவதற்கு முகாமையினால் முடிந்தது. இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை யினை வெற்றி பெறச் செய்வதற்கு துணை புரிந்து, தேசிய பணியாகக் கருதி 2,083 ஊழியர் தொகையினருக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு நாம் உறுதியாய் இருக்கின்றோம். தாபனத்தின் கொள்கைகள் மற்றும் நோக்கங்களைச் செயற்படுத்தும் போது எழும் பிரச்சினைகளுக்கு சரியான தீர்மானங்களை உரிய நேரத்தில் எடுப்பதன் மூலம் தீர்க்கப்பட்ட பல பிரச்சினைகள் தாபனத்தின் அபிவிருத்திக்கு ஏதுவாக அமைந்தன. சவால்களுக்கு சளைக்காது முகங்கொடுக்கும் ஆற்றலை னொண்டதாக முகாமைத்துவக் குழுவினரும் ஊழியர்களும் பணிப்பாளர் சபையின் தீர்மானங்களுடன் இணைந்து செயற்பட்டமை பாராட்டுக்குரியதாகும்.

இறுதியாக, கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டிற்காக தொடர்ந்தும் அரிப்பணிப்புடன் செயற்படும் தலைவர், செயற்பாட்டு பணிப்பாளர் உட்பட பணிப்பாளர் சபை ஆகியோரை நான் மிகவும் பாராட்டுவதுடன், அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளை வழங்குனராக தொடர்ந்தும் எம்மை குறித்து பக்கசார்புடன் கருதும் எமது வெற்றிக்கு அடித்தளம் இடும் வாடிக்கையாளர் நண்பர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன், எமது தொடர்பினை மேலும் பலப்படுத்திக் கொள்ளும் பொருட்டு அதிகபட்ச சாத்தியக்கூறுடன் உங்களுக்கு பெறுமதிவாய்ந்தவற்றை வழங்குவதற்கு நாம் எப்போதும் தயாராக உள்ளோம். இதற்கு மேலதிகமாக, எமது நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு முழு அனுசரணையையும் ஆதரவையும் வழங்கிய கௌரவ மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சராகிய மாண்புமிகு ஜனாதிபதி அவர்கள், பிரதி அமைச்சர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

வெற்றிப் பாதை நெடுகிலும் வேகமாகவும் சிலையாகவும் பயணஞ் செய்வதற்கு நிகரிலா ஆதரவினை வழங்கும் எனது முகாமைத்துவக் குழுவின் எல்லா சகாக்களுக்கும் ஆர்வத்துடனும் அரிப்பணிப்புடனும் கடும் முயற்சியுடனும் செயற்படும் சக பணிக்குழாத்தினருக்கு எனது உளங்கனிந்த மரியாதையை அளிப்பதுடன், 2017 ஆம் ஆண்டினை மிகவும் வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு பல் வழியிலும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எச்.பி.எஸ். நவரத்ன
பொது முகாமையாளர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# எமது பொறுப்புக்கள்

காடுகளிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுதல், அம்மரங்களை அரிமரங்களாகவும் முடிவுப் பொருட்களாகவும் மாற்றுதல், மரக்குற்றிகள், அரிமரங்கள், முடிவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் இக்காரியங்களுக்கான காட்டுப் பாதைகளை அமைத்தல்

மரக்குற்றிகளாக்கும் அலகுகள், அரியும் ஆலைகள், எண்ணெய் இடுதல் மற்றும் பாதுகாத்தல் பொறித்தொகுதிகள், அரிமரங்களை உலர வைத்தல் மற்றும் உலரவைக்கும் சூளைகள் மற்றும் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அமைத்தல், செயற்படுத்துதல்

அரிமர மற்றும் விறகு விற்பனை நிலையங்களை நடாத்துதல்

அரிமர உப பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல்

அரிமரங்களை இறக்குமதி செய்தல்

புதிய காடுகளை நடும் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், மீள் நடுகைகளை மேற்கொள்ளல், காடு மற்றும் காட்டு நடுகைகளை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்

விவசாய உற்பத்திகள்

அரிமரம் தொடர்பான முடிவுப் பொருட்கள் மற்றும் அரை முடிவுப் பொருட்கள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்

தனியார் காணிகளிலிருந்து மரங்களைக் கொள்வனவு செய்தல்

காடு சார்ந்த உற்பத்திகளைப் பதனஞ் செய்தல்

பிரம்புகளை இறக்குமதி செய்தல்

மாதிரிகளைப் பரீட்சிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிமரங்களை இனங் காணல் மற்றும் அரிமரச் சான்றிதழ்களை வழங்கல்

அரிமரக் கைத்தொழில் சார்ந்த விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், சான்றிதழ்கள் வழங்குதல், சுற்றாடல் தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் முழுப் பயனையும் பெற்றுக்கொள்வதற்காகத் திட்டமிடல் மற்றும் அதற்கு முதலீடு செய்தல்



# எமது வர்த்தகப் பெறுமானங்கள்

- சூழல் நேயம் மிகுந்த மற்றும் வர்த்தக ரீதியாக வெற்றிகரமாகச் செயற்படக்கூடிய அரசாங்கத்துறை நிறுவனமொன்றாக எமது நிலைப்பாட்டைப் பேணுவது எமது முதன்மையான பொறுப்பு என இனங்கண்டுள்ளோம்.
- சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலைப் பாதுகாப்பதற்கு காடுகள் மற்றும் அரிமரங்களை அகற்றும் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவம் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய அவற்றை நிறைவேற்றுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.
- எமது வாடிக்கையாளர்களுடன் நேர்மையான வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்கும் அனைத்து இலங்கையர்க்கும் பெறுமதிகளை உருவாக்குதல் எமது நிலைப்பாட்டின் முதன்மைக் காரணி என நாம் எற்றுக் கொண்டுள்ளோம்.
- திறன்களின் வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி, தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றால் எமது ஊழியர்களின் விளைபயன் மட்டத்தை மேம்படுத்துவதற்கு செயற்படுகின்றோம்.
- வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மற்றும் நேர்மையான சேவையை வழங்குவதற்கு எமது எல்லா காரியங்களிலும் அவர்களை முதன்மைப்படுத்தி செயற்படுகின்றோம்.
- அனைத்து செயற்பாடுகளின் போதும் மற்றும் சேவைகளை வழங்கும் போதும் தனிப்பட்ட விசுவாசத்தினை உயர் மட்டத்தில் பேணுவதாக உறுதிப்படுத்துகின்றோம்.
- எதிர்கால சந்ததியினரின் பெறுமதிமிக்க தேசிய மரபுரிமைகளான சூழல் மற்றும் வன வளங்களைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளையும் சமூக விழுமியங்களையும் பின்பற்றுகின்றோம்.

# பணிப்பாளர் சபை - 2017



**திரு. பி. திசாநாயக்க**
தலைவர் -அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



**திரு. எச்.வை.ரீ. பவரகுமார**
செயற்படு பணிப்பாளர்



**திரு. டீ. விஜேசிறிவர்தன**
பணிப்பாளர்



**திரு. எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க**
பணிப்பாளர்



**திரு. எம்.வீ. கருணாரத்ன**
பணிப்பாளர்



**திரு. பி. பன்சலவத்த**
பணிப்பாளர்



**திரு. ஏ.எம்.சீ. பெரேரா**
பணிப்பாளர்

# சிரேட்ட முகாமைத்துவக் குழு 2017



**எச்.பி.எஸ். நவரத்ன**
பொது முகாமையாளர் (பதில்)
பிரதிப் பொது முகாமையாளர்
(செயற்படு)



**கலாநிதி என். ருவன்பத்திரண**
பிரதிப் பொது முகாமையாளர்
(ஆராய்ச்சி, பயிற்சி, அபிவிருத்தி)



**டப்ளியூ.டப்ளியூ.எம்.ஜே. குரே**
பிரதிப் பொது முகாமையாளர்
(உள்ளகக் கணக்காய்வு)



**ஜீ.டீ.எஸ். குமாரசிங்க**
பிரதிப் பொது முகாமையாளர்
(நிதி)



**ஜீ. குணவங்ச**
பிரதிப் பொது முகாமையாளர்
(சந்தைப்படுத்தல்)



**எம்.ஏ.சீ.என். சமரசிங்க**
பிரதிப் பொது முகாமையாளர்
(மனித வளம் மற்றும் நிர்வாகம்)



# கருங்காலி

இலங்கை உட்பட தென்னிந்திய வலயத்தில் குறிப்பிட்ட நாடுகள் பலவற்றில் காணப்படும் மற்றும் இலங்கையில் வறள் வலய மற்றும் இடைநிலை வலய காலநிலைமைகளின் கீழ் 20 - 25 மீற்றர் அளவு உயரத்திற்கு வளரும் நடுத்தர அளவிலான தாவர வகையாகும். இத்தாவரம் இலங்கைக்கே உரித்தான தாவர வகையாகும். கருங்காலி மர வகைக்குரிய னுயைளிலசழள வகையின் மேலும் 22 வகைகள் இலங்கையில் இனங்காணப்பட்டுள்ளன. கருங்காலி மரம் தாவரவியல் ரீதியாக 1976ஆம் ஆண்டில் Koenig என்பவரால் இலங்கையிலேயே முதன்முதலாக இனங்காணப்பட்டது. இது ஒரு விசேட விடயமாகும். இலங்கை காலனித்துவ நாடாக இருக்கும் காலத்தில் கருங்காலி மரங்கள் பாரிய அளவில் எமது நாடுகளில் இருந்து வெட்டப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறப்படுவதுடன், 1910ஆம் ஆண்டில் 2635 தொன் கருங்காலி வெளிநாட்டவர்களுக்கு ஏல விற்பனை செய்யப்பட்டதாக ஏடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. முற்காலத்தில் நடைபெற்ற இவ்வாறான அழிவுமிக்க செயற்பாடுகளின் காரணமாக தற்போது இப்பெறுமதிமிக்க தாவர இனம் அழிவின் விளிம்பில் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். கருங்காலி மரம் வரையறுக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட அரிமரமாகப் பெயரிடப்பட்டுள்ளதுடன், போக்குவரத்து அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொடுத்தல் வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றது. கருங்காலிக் குற்றிகள் மற்றும் அரிந்த மரங்களை ஏற்றுமதி செய்வதும் தடை செய்யப்பட்டுள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபன வகைப்படுத்தலின் படி அதி சொகுசு அரிமர வகையாகும். ஒரு கன மீற்றர் (1 மீற்றர் மத்திய சுற்றளவு) கருங்காலி அரிமரம் ஏறக்குறைய 123,228 ரூபாவாகும். 2007 ஆம் ஆண்டில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சிவப்புப் பட்டியலிடப்பட்டிருந்ததன் (The 2007 Red List of Threatened Fauna and Flora of Sri Lanka) பிரகாரம் இலங்கையில் அருகிச் செல்லும் அச்சுறுத்தலிற்கு ஆளாகியுள்ள தாவர வகைப்படுத்தலில் அச்சுறுத்தலுக்கு முகங் கொடுத்துள்ள தாவர வகையொன்றாக Endangered நுே பெயரிடப்பட்டுள்ளது. இத்தாவரத்தின் முக்கியத்துவத்தினைக் கருத்திற் கொண்டு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆய்வுப் பிரிவு மற்றும் சுற்றாடல் அமைச்சின் உயிரியல் பல்வகைமை செயலகத்துடன் இணைந்து மின்னேரிய அரசாங்க மரக் கூட்டுத்தாபன வளாகத்தில் கருங்காலி மரப் பாதுகாப்பிற்கான உயிர் பல்வகைமை பூங்காவொன்று நிறுவப்பட்டுள்ளது.

*மூலம்*
***இலங்கை அரிமரத் தாவரங்கள்***
*கலாநிதி நிமல் ருவன்பத்திரண*



# பணிப்பாளர் சபை மீளாய்வு

## பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| பி. திசாநாயக்க | தலைவர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |
| எச்.வை.ரீ. பவரகுமார | செயற்படு பணிப்பாளர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |
| டீ. விஜேசிறிவர்தன | பணிப்பாளர் - திறைசேரிப் பிரதிநிதி |
| எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க | பணிப்பாளர் - வன பாதுகாப்பு ஜெனரல் |
| எம்.வீ. கருணாரத்ன | பணிப்பாளர் |
| பி. பன்சலவத்த | பணிப்பாளர் |
| ஏ.எம்.சீ. பெரேரா | பணிப்பாளர் |

2017ஆம் ஆண்டானது, நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புக்களிலான மாற்றங்களின் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு சவால்மிக்கதொரு வருடமாக இருந்தது. கடந்த சில ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், மீளாய்வாண்டின் போது பணிப்பாளர் சபையின் புதிய நோக்குடன் கூட்டுத்தாபனம் அதன் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் நியாயமான முறையில் செயலாற்றியது. கூட்டுத்தாபனத்தின் முகாமையினால் அமுல்படுத்தப்பட்ட உபாயங்களின் விளைவாக வருவாய் மற்றும் இலபாக் குறிகாட்டிகள் வரத்தகத்தின் நிலைப்பாடு மற்றும் செயலாற்றுகையினை உறுதிப்படுத்தின.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் முகங்கொடுத்த பாரிய சவாலானது, விசேடமாக அரிமரித்திற்கான சந்தையில் உள்ள இயற்கையான வளங்களுக்கு கிடைக்கப்பெறும் பதிலீடுகள் மற்றும் சந்தைப் போட்டி ஆகியவற்றை அதிகரித்துக் கொள்வதாகும். அரிதாக இருக்கும் அரிமரத்திற்கு தீர்வாக, அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இலங்கைக்கு அரிமரங்களை இறக்குமதி செய்வதற்கு அதன் வர்த்தக நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளது. எவ்வாறெனினும், ஏனைய உள்நாட்டு இறக்குதியாளர்களின் விலையுடன் ஒப்பிடுகையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் விலைகள் சிறிது உயர்வாகும். அரசாங்க நிறுவனமாக இருப்பினும் எவ்வித நிலைமையிலும் அவ்வாறான தரங்குறைந்த உற்பத்திகளை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் ஒருபோதும் நாட்டிற்கு இறக்குமதி செய்ய முடியாது. இதன் விளைவாக, சிறந்த வர்த்தக ஒழுக்கவியலைப் பாதுகாப்பதன் மூலம் பொறுப்புள்ள நிறுவனமொன்றாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இன்னும் அதன் நன்மதிப்பைப் பேணுகின்றது.

| செயலாற்றுகை | 2017 மி. ரூ. | 2016 மி. ரூ. |
|---|---|---|
| விற்பனைப் புரள்வு | 4,254 | 4,214 |
| மொத்த இலாபம் | 2,076 | 2,045 |
| ஏனைய செயற்படு வருமானங்கள் | 103 | 92 |
| செயற்படு இலாபம் | 693 | 443 |
| செயற்பாடற்ற இலாபம் | 274 | 216 |
| திறைசேரியினால் விதிக்கப்பட்ட அறவீடு | 100 | 175 |
| வரி மற்றும் அறவீடுகளுக்கு முன்னரான தேறிய இலாபம் | 967 | 660 |



அதன் விளைவாக, வருடத்தில் கூட்டுத்தாபனத்தின் விற்பனைப் புரள்வானது கடந்த ஆண்டின் 4,214 ரூபாவுடன் ஒப்பிடுகையில் 4,254 ரூபா வரை அதிகரித்துள்ளது. மொத்த விற்பனைப் புரள்வு கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1மூஆல் அதிகரித்துள்ளது. கடந்த வருடத்தின் 2,045 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் இவ்வருடத்திற்கான மொத்த இலாபம் 2,076 மில்லியன் ரூபாவாக இருந்ததுடன், அது 2மூ அதிகரிப்பாகும். அரசாங்கத்தின் சில கொள்கைகள், பொருளாதார நிலைமைகள் மற்றும் காலநிலை மாற்றங்கள் என்பன கூட்டுத்தாபனத்தின் ஆகுசெலவு மற்றும் செயலாற்றுகையில் நேரடியாகச் செல்வாக்குச் செலுத்துகின்றன.







கடந்த ஆண்டின் வரி மற்றும் அறவீடுகளுக்கு முன்னரான தேறிய இலாபமான 660 மில்லியன் ரூபாவுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான வரி மற்றும் அறவீடுகளுக்கு முன்னரான தேறிய இலாபம் 307 மில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் உயர் இலாபங்களை ஈட்டும் நோக்கில் மாத்திரமல்லாது பொறுப்புவாய்ந்த ஒரு நிறுவனமாக செயற்படுகின்றது. இலங்கையில் வேலையில்லாமையின் உயர் வீதத்தினைக் குறைப்பதற்கு அரசாங்கத்திற்கு உறுதுணையாக அதிகமான வேலை வாய்ப்புக்களை வழங்குவது தமது பொறுப்பு என்பதை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நம்புகின்றது. அதனால், 2,083 எண்ணிக்கையிலான வேலைவாய்ப்புக்களை ஒவ்வொரு வருடமும் வழங்குவதன் மூலம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வேலைவாய்ப்பிற்கான உயர் ஆகுசெலவினை மேற்கொள்ள வேண்டி உள்ளதுடன், வேலைவாய்ப்பிற்கான மொத்த கிரயமாக 1,580 மில்லியன் ரூபா உள்ளடங்கலாக மீளாய்வாண்டிற்கான விற்பனைக் கிரயத்திற்கு மேலதிகமாக நிர்வாக, விற்றல் மற்றும் விநியோகித்தல் செலவினங்களாக 1,486 மில்லியன் ரூபாவினை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டது. 2017இற்கான நிர்வாக, விற்றல் மற்றும் விநியோகித்தல் செலவினங்கள் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12மூ வீழ்ச்சியினை அடைந்துள்ளது.










2017இல் எல்லா செலவினங்களையும் கழித்ததன் பின்னர், அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் திறைசேரிக்கு செலுத்திய விசேட வரி, வருமான வரிகள் மற்றும் ஏனைய விபரமான வருமான தேறிய இலாபம் 242 மில்லியன் ரூபாவாகும். கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 207 மில்லியன் ரூபா அதிகரிப்பாகும்.

2017ஆம் ஆண்டிற்கான சொத்துக்கள் மற்றும் உரிமையாண்மை மீதான நன்மைகள் பின்வருமாறு:

| | சொத்துக்கள் மீதான நன்மைகள் | உரிமையாண்மை மீதான நன்மைகள் |
|---|---|---|
| 2017 | 3.8% | 5.7% |
| 2016 | 0.7% | 0.9% |

மீளாய்வாண்டுக் காலப்பகுதிக்கான அரசாங்க வருவாய்க்கு கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு திறைசேரி வரியா்க 100 மில்லியன் ரூபா பங்களிப்பதன் மூலம் 2,055 மில்லியன் ரூபாவாகும்.

## உற்பத்தி

முழு செயற்பாட்டு செயன்முறையையும் சூழல் நேயமிக்க முறைமைகள் ஊடாக மேற்கொண்டு உயர் உற்பத்தி மட்டத்தினை அடைதல் நிறுவனத்தின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், இலாபத்தினை அதிகரித்துக் கொள்வதற்கும் , நிறுவனத்தின் உள்ளக மற்றும் வெளி அங்கங்களின் சிறந்த நிலைப்பாட்டிற்கு முக்கியமானது என்பது எமது நம்பிக்கையாகும்.

எதிர்கால சந்ததியினர் அவர்களது சொந்தத் தேவைகளை விட்டுக் கொடுக்காது எமது தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இயற்கை வளங்களை பேண்தகு முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்யும் நிறுவனத்தின் உபாய முறைகளுள் கூட்டுத்தாபனம் சூழல்சார் கருத்தினை ஒருங்கிணைப்பதற்காக அதன் ஆற்றலை தொடர்ந்தும் விருத்தி செய்கின்றது.

பேண்தகு அபிவிருத்தி முயற்சிகளுக்கு முன்னுரிமை அளித்து நாம் செயற்படு அமைப்புக்கள், முறைமைகள், ஆளணியினர் மற்றும் உற்பத்தி வழிமுறைகள் தொடர்பிலான புதிய தொழில்நுட்பங்களை தொடர்ந்தும் கையாளுகின்றோம். அரசாங்க சட்ட திட்டங்களுக்கு இணங்க, வேலைத்தள வகைப்படுத்தல் சரிப்பார்த்தற் பட்டியலைத் தயாரித்தல், விஞ்ஞாக முறையில் அரிமரங்களை வெட்டுதல், முறையான அரிமரப் பரிகரிப்பு மற்றும் பாதுகாப்பு உத்திகள், எல்லா இயந்திரோபகரணங்களின் முறையான ஸ்தாபிப்பு, நிறுவுகை மற்றும் பராமரிப்பு, அதிநவீன ஆட்சேர்ப்பு மற்றும் அபிவிருத்தி செய்னமுறைகள் என்பன பேண்தகு முறையில் குறுங்கால மற்றும் நெடுங்கால குறிக்கோள்களை அடைவதற்கு துணையாக உள்ள தந்திரோபயங்களாகக் கருதப்படும். “பேண்தகு வன முகாமைத்துவம்” குறித்து நாம் சட்டபுர்வமாகப் பொறுப்புடையவராவோம். விஞ்ஞான முறையிலான அரிமர வெட்டுகையானது பயிர்ச் செய்கையின் பௌதிக மற்றும் உயிரியல் தன்மை, குறிப்பிட்ட பயிர்ச்செய்கையின் அடியில் வளரும் தாவரங்கள், இயற்கை வனப் பகுதிகள் மற்றும் மீதம் வைக்கவேண்டிய வளர்ப்புப் பயிர்கள், காற்றின் திசை, நிலத்தின் சாய்வு, மண்ணின் தன்மை மற்றும் நீர் நிலைகள் போன்ற பல காரணிகளை மரம் வெட்டுவதற்கு முன்னர் மதிப்பீடு செய்யும். இது சுற்றாடல் சீரழிவினைக் குறைப்பதற்கும் காபன் தடத்தினைக் குறைப்பதற்கும் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும். மேலும், பிரதான உற்பத்தியில் இருந்து வெட்டடி அகற்றப்படும் அரிமரத்துண்டுகள் மீண்டும் “பிங்கர் ஜொயின்ட்” (Finger Joint) பலகைகள் செய்வதற்கு பயன்படும். இவை தளபாட உற்பத்திகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன.

### செயற்படு நடவடிக்கைகள் தொடர்பில் புதிய அச்சுறுத்தல்கள் மற்றும் வாய்ப்புக்கள்

கூட்டுத்தாபனம் பல்வேறு காலப்பகுதிகளில் அதன் நிலைப்பாட்டிற்கு குறுகிய மட்டத்திலிருந்து பாரிய மட்டத்தில் செல்வாக்குச் செலுத்தும் பல்வேறு பிரச்சினைமிகு சந்தர்ப்பங்களுக்கு முகங்கொடுத்துள்ளது. வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள முதிர்ச்சியடைந்த வனப்பயிர்ச்செய்கை நில இளவு குறைவடைதல், கடல் மட்டத்தில் இருந்து 5000 அடி உயரத்தில் மேற்கொள்ளப்படும் மரம் வெட்டுதலைத் தடை செய்தல், அரச பெருந்தோட்டக் கம்பனிகள் அவற்றின் அரிமரங்களை திறந்த சந்தையில் விற்பனைக்கு விடத் தீர்மானித்தல், அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளுக்கு பல்வேறு பதிலீடுகள் சந்தையினுள் அதிகரித்தல் போன்ற அச்சுறுத்தல்களை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

பாதுகாப்புமிகு சந்தை தந்திரோபாயங்களைப் பிரயோகித்து சந்தையை அபிவிருத்தி செய்தல், அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துதல், உற்பத்தியின் பெறுமதியினை அதிகரித்தல், உற்பத்திக் கலவைகளை பல்வகைப்படுத்துதல், உற்பத்திச் செயன்முறையின் போது அரிமரத்தினை உச்ச அளவில் பயன்பாட்டிற்கு எடுத்தல் ஆகிய செயற்பாடுகள் மூலம் முகங் கொடுக்க வேண்டி ஏற்பட்ட அச்சுறுத்தல்களின் தாக்கத்தினை குறைந்த மட்டத்திற்கு கொண்டு வர எம்மால் முடிந்தது.

இதற்கு மேலதிகமாக, தொழிற்றுறையில் போட்டியாளர்களை விட போட்டி நன்மைகளைப் பெறுவதற்கு பின்வரும் தந்திரோபாயங்களைப் பிரயோகிப்பதற்கு நாம் உத்தேசித்துள்ளோம்.

- அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்(ளுீஊ), ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை(துநுனுடீ), எல்கடுவ பெருந்தோட்ட லிமிடட் ஆகியவற்றிலிருந்து வர்த்தகப் பெறுமதிமிக்க மரங்களைக் கொள்வனவு செய்தல்
- இலங்கைப் புகையிரதத் திணைக்களத்துடன் அவர்களது காணிகளிலிருந்து மரங்களை வெட்வதற்கான உடன்படிக்கையொன்றுக்கான பேச்சுவார்த்தை நடாத்துதல்
- பெறுமதி சேர்த்தலின் பின்னர் பரிகரிக்கப்பட்ட சிலிப்பர்கள் மீள ஏற்றுமதி செயற்றிட்டத்திற்கான சந்தை அபிவிருத்தி



- அரசாங்க காணிகளில் வர்த்தகப் பெருந்தோட்டங்களின் நிறுவுகையை விஸ்தரித்தல்
- 64,000 கன மீற்றர் உற்பத்தி அறுவடைக்கு இத்தபொல- பதவலயாய தேக்கு அகற்றுகைச் செயற்றிட்டத்தினை ஆரம்பித்தல்
- அறுவடையினை உச்சப்படுத்துவதற்கான விஞ்ஞானரீதியான மர வெட்டுகை முறையினை மேலும் அபிவிருத்தி செய்தல்

### அரச காடுகளிலிருந்து அரிமரங்களை வெட்டுதல்

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் தேசிய வன முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் வெட்டுவதற்காக தேக்கு, பைனஸ், யூகலிப்டஸ் போன்ற காட்டு மரங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் மரங்களை வெட்டுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ள வன முகாமைத்துவப் பகுதிகள் கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ளன.

| மர இனம் | முற்றாக வெட்டுதல் (ஹெ.) | | மெல்லியதாக்குதல் (ஹெ.) | |
|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2017 | 2016 |
| தேக்கு | 569.8 | 665.6 | 375.9 | 145.7 |
| யூகலிப்டஸ் | 210.7 | 81.1 | 515.0 | 441.2 |
| பைனஸ் | 160.2 | 175.5 | - | - |
| காயா | - | - | 20.0 | 3.5 |
| எக்கேசியா | 30.0 | 16.8 | - | - |

### மரக்குற்றிகளை அரிமரத்துண்டங்களாக்குதல்

2016ஆம் வருடத்தில் மரத்துண்டங்கள் உற்பத்தி 4,637 கன மீற்றருக்கு ஒப்பாக 2017ஆம் வருடத்தில் 4,909 கன மீற்றர் மரத்துண்டங்கள் அரியும் ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், நாடு முழுதும் அமைக்கப்பட்டுள்ள அரிமர விற்பனைக் களஞ்சியசாலைகளிலிருந்து 2,997 கன மீற்றர் அரிமரத்துண்டங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### மின்கம்பங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளைப் பரிகரித்தல்

2017ஆம் வருடத்தில் 7,416 சிலிப்பர் கட்டைகள், 20,186 மின்கம்பங்கள், 33,424 யானை வேலிக் கம்பங்கள் என்பன அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கல்தமுல்லை, கெப்பெட்டிபொலை, பூசா ஆகிய பரிகரிப்பு நிலையங்களில் பரிகரிப்பு செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2017ஆம் ஆண்டில் மின்கம்பங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளின் கேள்வி குறைவடைந்ததன் காரணமாக உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவு பின்னடைவு காணப்பட்டது.

### தளபாட உற்பத்தி

அரசாங்க மரக கூட்டுத்தாபனத்தின் அம்பாறை, கல்தமுல்லை, பூசா ஆகிய தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து 351.2 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 381.3 மில்லியன் ரூபா தேறிய பெறுமதிமிக்க தளபாடங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் இரத்மலானை, கண்டி, இரத்தினபுரி, தலல்ல, பூசா, அம்பாறை ஆகிய தளபாட காட்சியறைகளிலிருந்து விற்பனை செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் தளபாட உற்பத்தி 28மூஆல் அதிகரித்துள்ளமை பதிவாகியுள்ளது.

### 2016 - 2017ஆம் வருடங்களில் உற்பத்தி, விற்பனை, வருமானம்

| | உற்பத்தி அளவு | | விற்பனை அளவு | | மொத்த விற்பனைப் புரள்வு (வரியுடன்) | |
|---|---|---|---|---|---|---|
| | 2017 | 2016 | 2017 | 2016 | 2017 மி. ரூபா | 2016 மி.ரூபா |
| குற்றிகள் க.மீ. | 146,094 | 156,987 | 131,518 | 134,486 | 3,653.7 | 3,229.9 |
| மரத்துண்டங்கள் க.மீ. | 4,909 | 4,637 | 2,997 | 2,854 | 290.2 | 261.8 |
| சிலிப்பர் கட்டைகள் அலகு | 7,416 | 26,924 | 14,322 | 38,318 | 153.1 | 320.1 |
| மின்கம்பங்கள் அலகு | 20,186 | 33,026 | 19,484 | 36,512 | 197.8 | 359.6 |
| யானை வேலிக் கம்பங்கள் அலகு | 33,424 | 34,625 | 25,616 | 46,458 | 88.9 | 146.4 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வேலிக் கம்பங்கள அலகு | 141,790 | 193,610 | 132,863 | 185,797 | 21.3 | 24.5 |
| விறகு க.மீ. | 126,861 | 125,225 | 119,669 | 107,621 | 64.5 | 65.9 |
| வேலிக் கம்பங்கள் அலகு | 114,681 | 103,700 | 103,516 | 96,150 | 13.9 | 14.2 |

## இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைதல் தொடர்பான மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் மற்றும் அனைத்து பிராந்திய முகாமையாளர்கள், கூட்டுத்தாபனத்தின் சிரேʻட முகாமையாளர்களின் ஒத்துழைப்புடன் மாதாந்தம் முகாமைத்துவக் கூட்டங்கள் நடத்தப்படுவதுடன், அதில் உண்மையான செயலாற்றுகை, உற்பத்தி மற்றும் விற்பனை இலக்குகள் ஆகியவற்றுடன் ஒப்பிடப்பட்டு நோக்கப்படும். இக்கூட்டங்களில் அனைத்து தடைகளும் பிரச்சினைகளும் உரிய பிராந்திய முகாமையாளர்களுடன் கலந்துரையாடப்பட்டு இனங்காணப்படுவதுடன், அவை சம்பந்தமாக பல்வேறு தீர்மானங்கள் மற்றும் மாற்றீட்டுச் செயன்முறைகள் முன்மொழியப்பட்டு, பின்னர் அக்கருத்துக்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படும். மேலும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான நெறிமுறைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பணப்பாய்ச்சல் ஆகியவற்றை அடைந்து நிதி சார் ஆற்றல்மிகு நிறுவனமாக உறுதிப்படுத்தும் நோக்கில் புது சந்தர்ப்பங்கள், புது கருத்துக்கள், மேற்கொள்ளவேண்டிய மாற்றங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படும்.

பணிப்பாளர் சபை சார்பாக ஒப்பமிடப்பட்டது.

**பி. திசாநாயக்க**
தலைவர்
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்





## எங்கள் அடைவு



## அம்பாறைப் பிராந்தியம்






## அனுரதாபுரப் பிராந்தியம்






## பண்டாரவளைப் பிராந்தியம்








## கொழும்புப் பிராந்தியம






## யாழ்ப்பாணப் பிராந்தியம்






## கண்டிப் பிராந்தியம்





## குருணாகலைப் பிராந்தியம்




## மொணறாகலைப் பிராந்தியம்




## மாத்தறைப் பிராந்தியம்




## நுவரெலியா பிராந்தியம்




## பொலன்னறுவைப் பிராந்தியம்




## இரத்தினப்புரிப் பிராந்தியம்





## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியின் அறிக்கை

### கமிட்டி உறுப்பினர்கள் - 2017

திரு. டீ. விஜேசிறிவர்தன - தலைவர்
திரு. எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க - உறுப்பினர்
திரு. எம்.வீ. கருணாரத்ன - உறுப்பினர்

### கமிட்டியின் வகிபங்கு

நிதிசார் அறிக்கையிடல் மற்றும் கணக்காய்வு செயன்முறைகளின் ஒருங்கிணைப்பு மற்றும் சிறந்த உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் இடர்நேர்வு முகாமைத்துவ முறையினைப் பேணுதல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வுக் கமிட்டி பணிப்பாளர் சபைக்கு தமது கண்டுபிடிப்புக்களை அறிக்கையிடுகின்றது.

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி கூட்டங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை நடைபெற்றன. பின்வரும் பரிந்துரைகள் பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. மாதாந்த நிதி மற்றும் பௌதிக செயலாற்றுகை
2. வருடாந்த கணக்குகள்
3. வருடாந்தப் பாதீடு மற்றும் திருத்தப்பட்ட பாதீடு
4. உள்ளகக் கணக்காய்வு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு விசாரணைகளும் பதில்களும்
5. பணிக்குழாம் மற்றும் நிர்வாக விடயங்கள்
6. சட்ட நடவடிக்கைகள்
7. ஊழியர் கடன்கள், முற்பணம் மற்றும் வழங்கப்பட்ட விலைமனுக்கள் போன்ற ஏனைய விடயங்கள்

**திரு. டீ. விஜேசிறிவர்தன**
தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி





# வர்த்தகப் பொழிப்பு

## வருமான வளர்ச்சிப் போக்குப் பகுப்பாய்வு







## இலாப வளர்ச்சிப் போக்குப் பகுப்பாய்வு










## உற்பத்தி வளர்ச்சிப் போக்குப் பகுப்பாய்வு



















## பெறுமதி கூட்டல்











# மஹோகனீ

ளுறநைவநயியை அயாழபயலெ மேற்கிந்திய மஹோகனீ என அறியப்பட்டுள்ளதுடன் ஒடுங்கிய இலைகளைக் கொண்டுள்ளது. இலங்கையில் வடபகுதியில் பரவலாகக் காணப்படுகின்றது. அமெரிக்கா போன்ற அயன மண்டல காலநிலைக் கொண்ட நாடுகள் மூலம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ளுறநைவநயியை இனத்தின் கீழ் மூன்று வகை இனங்கள் காணப்படுகின்றன. (எ.அயஉசழிலடடயஇ ள.ாரஅடளை) தென் புளோரிடா, அமெரிக்கா, கியூபா, ஜமைக்கா என்பன ளுறநைவநயியை அயாழபயலெ யின் (ஒடுங்கிய இலை மஹோகனீ) தாய் நாடாகும். ஒடுங்கிய இலை கொண்ட மஹோகனியின் பூ டொமினிக்ஸ் குடியரசின் தேசிய மலராகும். 30-35 மீற்றர் உயரம் வரை வளரும் இந்த பகுதிநிலை பசுமை கொண்ட அம்மரத்தின் அரிமரம் 400 வருடங்களுக்கு முன்பே சர்வதேச ரீதியில் வர்த்தகத்திற்கு உட்பட்டது. 1795ஆம் ஆண்டில், இந்தியவிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட தாவர இனமாகும். அரிமரத்தின் வெளிப்புறத் தோற்றம், இலகுவான வேலை செய்யக்கூடிய தன்மை, நீடிக்கும் தன்மை, பெறுமதிமிக்க பூச்சு ஆகியன இவ்வரிமரத்தின் முதற்தர இயல்புகளாகும்.

*மூலம்*
***இலங்கை அரிமரத் தாவரங்கள்***
*கலாநிதி நிமல் ருவன்பத்திரண*

# ஒரே பார்வையில் பத்தாண்டு காலம்

| முழுமையான எண்கள் | | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முழு வருடாந்த வருமானம் | ரூபா '000 | 2,986,925 | 3,445,141 | 3,616,164 | 3,103,744 | 3,563,390 | 3,213,644 | 3,756,482 | 4,132,052 | 4,522,238 | 4,630,718 |
| வருடாந்த மொத்த இலாபம் | ரூபா '000 | 1,210,845 | 1,351,695 | 1,365,285 | 1,237,640 | 1,546,107 | 1,197,615 | 1,453,451 | 1,757,115 | 2,045,090 | 2,075,950 |
| அறவீடு மற்றும் வரிகளுக்கு முன்னர் தேறிய இலாபம் | ரூபா '000 | 647,039 | 810,612 | 877,623 | 603,499 | 801,681 | 382,337 | 427,222 | 768,699 | 659,732 | 966,804 |
| மொத்த ஊழியர் ஆகுசெலவு | ரூபா '000 | 852,879 | 898,652 | 901,910 | 953,498 | 1,065,052 | 1,117,036 | 1,254,516 | 1,449,746 | 1,789,572 | 1,572,775 |
| வருடாந்த மூலதனச் செலவினங்கள் | ரூபா '000 | 141,327 | 112,909 | 237,332 | 180,546 | 162,509 | 332,870 | 115,132 | 244,929 | 113,675 | 94,637 |
| வருட இறுதியில் நடைமுறையற்ற சொத்துக்கள் | ரூபா '000 | 1,523,553 | 1,793,467 | 1,801,988 | 1,739,893 | 1,479,880 | 1,658,535 | 1,654,908 | 1,743,580 | 1,732,640 | 1,894,597 |
| வருட இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள் | ரூபா '000 | 1,407,022 | 2,079,543 | 2,341,020 | 2,177,892 | 2,929,185 | 3,153,777 | 4,004,860 | 4,115,259 | 3,652,116 | 4,423,105 |
| வருட இறுதியில் நடைமுறைப் பொறுப்புக்கள் | ரூபா '000 | 455,460 | 1,028,979 | 1,034,258 | 497,229 | 804,102 | 1,050,258 | 1,591,991 | 1,480,966 | 897,087 | 1,234,716 |
| வருட இறுதியில் நடைமுறையற்ற பொறுப்புக்கள் | ரூபா '000 | 362,399 | 364,553 | 399,057 | 399,953 | 409,030 | 384,831 | 484,649 | 424,854 | 499,373 | 852,292 |
| வருட இறுதியில் உரிமைப் பங்கு | ரூபா '000 | 2,112,716 | 2,479,478 | 2,709,694 | 3,020,602 | 3,195,933 | 3,377,223 | 3,583,129 | 3,953,019 | 3,988,297 | 4,230,694 |
| ஒன்றிணைந்த நிதியத்திற்கான பங்களிப்பு | ரூபா '000 | 75,000 | 50,000 | 413,490 | 75,000 | 600,000 | 50,000 | 25,000 | 50,000 | 175,000 | 100,000 |
| வருட இறுதியில் ஊழியர் எண்ணிக்கை | எண்ணிக்கை | 2,499 | 2,457 | 2,346 | 2,267 | 2,187 | 2,139 | 2,186 | 2,145 | 2,125 | 2,083 |
| வருட இறுதியில் மேலதிக நிதிய முதலீட்டு மீதி | ரூபா '000 | 777,101 | 858,717 | 605,235 | 764,328 | 298,546 | 338,010 | 360,227 | 382,550 | 405,727 | 431,404 |

| பிரதான செயற்படு சுட்டிகள் | | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| உரிமைப் பங்கிற்கான அறவீடு மற்றும் வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | % | 30.63 | 32.69 | 32.39 | 19.98 | 25.08 | 11.32 | 11.92 | 19.45 | 16.54 | 22.85 |
| மொ. சொத்துக்களுக்கான அறவீடு, வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | % | 22.08 | 20.93 | 21.18 | 15.40 | 18.18 | 7.94 | 7.55 | 13.12 | 12.25 | 15.30 |
| நடைமுறை வீதம் | நிகழும் எண்ணிக்கை | 3.09 | 2.02 | 2.26 | 4.38 | 3.64 | 3.00 | 2.52 | 2.78 | 4.07 | 3.58 |
| ஊழியர் ஒருவருக்கான ஊழியச் செலவு | ரூபா '000 | 341.29 | 365.75 | 384.45 | 420.60 | 486.99 | 522.22 | 573.89 | 675.87 | 842.15 | 755.05 |
| உரிமைப்பங்கிற்கான சொத்துக்களின் வீதம் | நிகழும் எண்ணிக்கை | 0.72 | 0.64 | 0.65 | 0.77 | 0.72 | 0.70 | 0.63 | 0.67 | 0.74 | 0.67 |
| சொத்துக்களின் மீதான திரும்பல் | % | 9.62 | 9.26 | 5.32 | 7.68 | 3.73 | 3.78 | 3.64 | 6.31 | 0.66 | 3.84 |
| மொத்த வருவாய் வளர்ச்சி | % | 17.99 | 15.34 | 4.96 | (14.17) | 14.81 | (9.81) | 16.89 | 10.00 | 9.44 | 2.40 |





# தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பு

அரிமரத் தொழிற்றுரையின் முதன்மையாளராக மிளிரும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக அளப்பரிய சேவையினை நிறைவேற்றுகின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரத் தொழிற்றுறையின் முன்னேற்றத்திற்காக மட்டுமன்றி, ஏனைய துறைகளின் முன்னேற்றத்திற்காகவும் முக்கியமான பொறுப்பினை நிறைவேற்றுகின்றது. 2017ஆம் ஆண்டில் உரிமைப்பங்கு, தொழிற்படு வரி, வருமான வரி மற்றும் ஏனைய வரி என 2,055 மி.ரூபா அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்குகின்றது.

கடந்த 5 வருடங்களுக்கான பொழிப்பு பின்வருமாறு:

| | 2013 (ரூ.) | 2014 (ரூ.) | 2015 (ரூ.) | 2016 (ரூ.) | 2017 (ரூ.) |
|---|---|---|---|---|---|
| ஸ்டம்பேஜ் | 706,779,429 | 743,675,772 | 891,797,062 | 1,660,491,515 | 1,050,000,000 |
| VAT/NBT/ESC/ WHT | 387,928,678 | 424,740,460 | 418,055,273 | 548,197,399 | 687,443,947 |
| வருமான வரி | 131,882,763 | 202,347,603 | 234,000,000 | 538,767,780 | 217,089,232 |
| விசேட அறவீடு | 50,000,000 | 25,000,000 | 50,000,000 | 175,000,000 | 100,000,000 |
| **மொத்தம்** | **1,276,590,870** | **1,395,763,835** | **1593,852,335** | **2,922,456,694** | **2,054,533,179** |

பொருளாதார அபிவிருத்தி தொடர்பில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதான வகிபங்கு பின்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்பினை வழங்குவதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பெரிதும் உறுதுணையாகவுள்ள வேலையில்லா பிரச்சினையினைக் குறைப்பதற்கு முக்கியமான பங்களிப்பினை வழங்குகின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பின்தங்கிய மற்றும் குறைந்த அபிவிருத்தி கொண்ட கிராமப் பகுதிகளின் அபிவிருத்திக்கு பிராந்திய ரீதியான முரண்பாடுகளை நீக்குவதற்கு பிராந்திய அலுவலகங்களை நிறுவியுள்ளது. இப்பிரதேசங்களில் வர்த்தகத்தினை நிறுவியமை பெருமளவிலான பொது மக்களுக்கான நன்மைகளை வழங்க வழிகோலியது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் புதிய வாய்ப்புக்களைத் தேடி அடைவதுடன் மூலதனத்தை மற்றும் திறன்களை விளைபயன்மிக்கதாகப் பயன்படுத்துவதை ஊக்குவித்து புதிய உற்பத்திகள், சேவைகள் முறைமைகளை அறிமுகப்படுத்தி பொருளாதார வளர்ச்சிக்கான சந்தைகளை விருத்தி செய்கின்றது.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் முக்கிய இலட்சணமானது மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைதல் ஆகும். அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் சிறந்த தரமிக்க உற்பத்திகளை நியாயமான விலையில் மக்களுக்கு வழங்குவதற்கும் சுற்றாடலினதும் சமூகத்தினதும் நலனிற்காக பரந்த அளவிலான உற்பத்தி மற்றும் சேவையினை வழங்குவதற்கு உற்பத்திக்கு நவீன கண்டுபிடிப்புக்களைக் கையாள்வதற்கும் முடிந்தது. எதிர்கால சந்ததியினர் அவர்களது சொந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான இயலுமையை விட்டுக் கொடுக்காது எமது தற்போதைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு காட்டு வளங்களை வினைத்திறனும் விளைபயனும் மிக்கதாகப் பயன்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நிறுவனத்தின் பொறுப்பாக எப்போது நாம் நன்மதிப்பினைத் தக்கவைக்கின்றோம்.



## பலா மரம்

யுசவழஉயசிரள ாநவநசழிாலடடரள இலங்கைக்கு மிகவும் பயனுள்ள இந்தியா மற்றும் மலேசியாவைப் பூர்வீகமாகக் கொண்ட மரமாகும். இந்தியாவிலிருந்தே இது இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. 4-8 வருடங்களுக்குள் பழங்களைப் பெறலாம். பலாப்பழம் (யுசவழஉயசிரள ாநவநசழிாலடடரள) வங்காளதேசத்தின் தேசிய பழமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதன் மூலம் இம்மரத்திற்கு உரிய மரியாதை வழங்கப்பட்டுள்ளது. உலகிலேயே மரங்களிலிருந்து பெறக்கூடிய பழங்களில் மிக விசாலமான பழமாகப் பலாப்பழமே சாதனைப் படைத்துள்ளது. (நீளம் 90செ.மீ. விட்டம் 50 செ.மீ. நிறை 36கிகிராம்.) எனினும் பிரேசிலில் வனப் பூங்காக்களில் பலாமரங்களின அதிகப் பரவலின் காரணமாக ஏற்பட்டுள்ள அச்சுறுத்தலினால் ஆக்கிரமிப்பு இனமாகப் பெயரிடப்பட்டுள்ளது. இலங்கையில் உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் பலாமரத்தினை வெட்டுவதற்கு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். 'வெல' மற்றும் 'வரக்கா' என இரு வகைப் பலா இனங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

*மூலம்*
***இலங்கை அரிமரத் தாவரங்கள்***
*கலாநிதி நிமல் ருவன்பத்திரண*



# நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்  தமது வர்த்தகம் செயற்படும் சுற்றாடலில் சிறந்த தொடர்புகளைப் பேணுவதனையும் பொறுப்புடன் நிர்வகிப்பதனையும் இலக்காகக் கொண்டுள்ளது. வர்த்தக நிறுவனங்கள் எப்போதும் இலாபத்தினையும் அவர்களது வளர்ச்சியினையுமே எண்ணுகின்றனர், தற்போது அநேகமான வர்த்தகங்கள் தமது வர்த்தக நடவடிக்கைகளால் ஏற்படும் சமூக மற்றும் சுற்றாடல் மீதான தாங்கங்கள் குறித்து பொறுப்புடன் செயற்படுகின்றன. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் அதன் விழுமியங்கள், கூட்டுக் கலாசாரங்கள் மற்றும் செயற்பாடுகள் என்பன எவ்வாறு சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல்சார் விடயங்களுடன் தொடர்புற்று பின்னிப் பிணைந்துள்ளன என்பதைப் பிரதிபலிக்கின்றன. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இலாபத்தினைப் பேணுவதுடன், எல்லா செயன்முறைகளும் உற்பத்திகளும் உற்பத்திச் செயற்பாடுகளும் சுற்றாடல்சார் விடயங்களைப் போதியளவில் ஈடுசெய்வதை உறுதிப்படுத்துவதற்கு சூழல் நேயமிக்க நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. கூட்டுத்தாபனத்தின் பேண்தகு அபிவிருத்திக்கு வழிகோலக்கூடிய பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் நலன்களை எல்லா பங்குதாரர்களுக்கும் வழங்குவதன் மூலம் ஊளுசு பேண்தகு அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்கின்றது. எல்லா மனிதர்களுக்கும், பிற உயிரினங்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் நியாயமானதாகவும் சமமானதாகவும் இருக்கக்கூடிய விதத்தில் நிலையான தன்மையானது மக்களின் வாழ்க்கைத் தரத்தினை இயற்கையான வழிமுறைகளின் ஊடாக பாதுகாக்கின்றது. மீளாய்வாண்டின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பொறுப்புள்ள நிறுவனமாக பின்வரும் நிகழ்ச்சிகளை மேற்கொண்டுள்ளது.

## சுற்றாடல் மற்றும் சமூகம்

பொறுப்புமிக்க வர்த்தக நிறுவனமாக நிலையான சமூகத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்பினை வழங்குவதே அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நோக்கமாகும். ஏதேனும் சூழல் சார் நன்மை அல்லது முன்னேற்றம் எமது பொருட்களைப் பயன்படுத்தும் சமூகத்திற்கு வழங்கப்படுவை உறுதிப்படுத்துவதற்கான எமது கடப்பாடே சமூகப் பங்களிப்பு என்பதால் கருதப்படுகின்றது. அரிமரத் தொழிற்றுறையில் போட்டியிடும் போது நாளாந்த சவால்களுக்கு முகங் கொடுத்தவாறு □சிறந்த வர்த்தகர்கள்களாக□ செயற்படுவது என்பது சமூகப் பொறுப்பாகும். அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் மக்களின் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்வதற்கு  நடவடிக்கை எடுத்துள்ளதுடன், உச்ச பங்களிப்பினை வழங்கியவாறு சமூகத்தில் உறுதியான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றது. வியாபார நடவடிக்கைகளை விருத்தி செய்யும போது சுற்றாடல் நேயமிக்க விடயங்களை செயற்படுத்துவதற்கான பொருத்தமான முறைமைகளையும் வழிமுறைகளையும் நிறுவுவதற்கு நாம் கடப்பாடு கொண்டவர்களாக உள்ளோம். அவ்வாறே சுற்றாடலில் ஏற்படக்கூடிய பாதிப்பு குறையும் வகையில் உறுதியான அபிவிருத்தியினை அடைந்து கொள்ளுதல் சமூகப் பொறுப்பினைக் கொண்ட நிறுவனமாக நாம் எமக்குள்ள பொறுப்பினை நன்கு புரிந்து வைத்துள்ளோம்.

சமூகம் என்பது பொதுவான சம்பிரதாயங்களைக் கொண்ட பெறுமானங்கள், நிறுவகங்கள், ஒன்றுபட்ட செயற்பாடுகள், ஆர்வங்கள் ஆகியவற்றைக் கொண்ட ஓர் இனம், ஒரு சங்கம் அல்லது விரிவடைந்த ஒரு மக்கள் கூட்டம் எனக் கொள்ளலாம். சமூக ஒன்றிணைப்பை விருத்தி செய்வதற்காக கூட்டுத்தாபனம் மிகவும் முக்கியமானதொரு பொறுப்பினை நிறைவேற்றுவதுடன், கலாச்சார நிகழ்ச்சிகள், இளைஞர் செயற்பாடுகள், மாணவர் மற்றும் சமூக செயற்பாடுகள் போன்றன இதனுள் அடங்கும். சமூகத்துடன் அவர்களது வாழ்க்கைத் தரம் மற்றும் வாய்ப்புக்களை மேம்படுத்துவதற்கும் நல்ல தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கும் ஆதரவு வழங்குவது கலாச்சாரம், வாழ்க்கை முறை ஆகியவை போன்று மரபுரிமைகள் பாதுகாக்கப்படும் முறையாகும்.



## வருடத்தில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகள்

- “புனருதய” நிகழ்ச்சியின் கீழ் நடாத்தப்பட்ட “வனரோப்பா” தேசிய மரநடுகை நிகழ்ச்சிக்கு செயற்படு பங்களிப்பு
    - பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், அரச நிறுவனங்கள், முப்படைகள் போன்ற பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு 52,735 மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
- உலக சுற்றாடல் தினத்தினைக் கொண்டாடும் முகமாக பல நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.
    - மாத்தறை, மொணறாகலை, பண்டாரவளை, இரத்தினபுரி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகளுக்கு “துருஜன மாணவர் வங்கி” நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாய உபகரணத் தொகுதிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
    - களுத்துறை மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
    - 50 நாற்று மேடைகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
    - தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்திற்கு பெயர்ப்பலகைகளை வழங்குதல்.
    - மொறகஹகந்த - களுகங்கை அண்டிய கருங்காலி, மருதம், மீ மரக் கன்றுகளை நடும் நிகழ்ச்சியொன்று செயற்படுத்தப்பட்டது.
- அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளின் பேண்தகு பாவனை குறித்து விழிப்பூட்டல் நிகழ்ச்சி
    - அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளை பேண்தகு முறையில் பாவித்தல் குறித்து பாடசாலை ஆசிரியர்களை அறிவூட்டுவதற்கு 14 நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், அரிமரம் தொடர்பிலான 500 துண்டுப் பிரசுரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.
    - ஆசிரியர்களை அறிவூட்டுவதற்காக 42 விரிவுரைகள் நடாத்தப்பட்டன.
- அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகள் தொடர்பிலான தலைப்பு குறித்து அறிவினை மேம்படுத்துதவதற்காக பேண்தகு அபிவிருத்தி தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் வகிபங்கினைப் பற்றி மக்களுக்கு அறிவுறுத்துவதற்காகவும் தேசிய தொலைக்காட்சியில் “தஹரா” , தெரண அலைவரிசையில் “அனாகத்தயட்ட இடக்” ஆகிய 6 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் ரஜரட்ட சேவையில் “கெலின் பார” என்ற வானொலி நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டன.
- பசுமைக் கட்டடச் சான்றிதழுக்கு பசுமைக் கட்டடம் எண்ணக்கரு தொடர்பில் வழிகாட்டல்களுக்கு இணங்க உரிய ஆவணங்கள் மற்றும் படிவங்களுடன் கூடிய முழுமையான அறிக்கையொன்று பூர்த்தி செய்யப்பட்டது.
- மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினால் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடாத்தப்பட்ட “ளுசை டுயமெய நேஒவ” நிகழ்ச்சிக்கு பங்களிப்பு வழங்கப்பட்டது.
- ஊழியர்களினால் எழுதப்பட்ட அரிமரம் மற்றும் அரிமரக் கைத்தொழிற்றுறை தொடர்பிலான ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகை மற்றும் சஞ்சிகைக் கட்டுரைகள் என்பன வெளியிடப்பட்டன. அதன்போது கீழ்வரும் தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகள் முன்வைக்கப்பட்டன.
    - Finger joint timber products for effective utilization of natural resources
    - Properties of finger jointed timber of softwood timber species in Sri Lanka.
    - Application of non class timber in construction industry
    - Utilization of waste timber in construction industry.
- அரிமரம் சார்ந்த ஆய்வுகளுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களின் கேள்வியின் படி வருடத்தினுள் 180 அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.
- அரிமரத் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தினூடாக நிறுவனத்தினுள் ஊழியர்களை ஆர்வமூட்டுவதற்காக 188 ஊழியர்களைப் பயிற்றுவித்துள்ளதுடன், 2017ஆம் ஆண்டிற்கான செலவு 1,092,990 ரூபாவாகும்.
- வறுமை ஒழிப்பின் மூலம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தும் நோக்கில் 2017ஆம் ஆண்டில் குறைந்த வருமானம் பெறும் இளம் தச்சர்களுக்கு தளபாடங்களை உற்பத்தி செய்யும் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. இதன் கீழ் முதல் கட்டமாக 35 தச்சுத் தொழிலாளர்கள் பிரயோகப் பயிற்சியுடன் பயிற்சியினைப் பூர்த்தி செய்துள்ளனர்.



# இடர் முகாமைத்துவம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் உரிய முறையில் இடர் முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட்டு அதன் நோக்கம் மற்றும் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடுகின்றது. துரிதமாக மாறும் தற்கால சூழலினுள் ஏற்படக்கூடிய இடர்களை முகாமை செய்வது எதிர்கால நிலைப்பாட்டுக்கான அத்தியாவசிய நடவடிக்கையாகும். இடர்களை முழுமையாக அகற்ற முடியாது. எனினும் அவற்றைக் குறைத்தக் கொள்ளலாம். அதனால் இடர்களைக் குறைத்தல் குறித்து கூடிய கவனத்தைச் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனம் பல்வேறு வழிமுறைகளை மேற்கொண்டுள்ளது.

## இடர் முகாமைத்துவ முறைமை




| இடர்களை இனங்காணல் | நிறுவனத்தின் நோக்கம் | இடர்களுக்கான பரிகாரம் |
|---|---|---|
| **நிதி இடர்நேர்வு முகாமைத்துவம்** | | |
| 01. திரவத்தன்மை மற்றும் நிதி முகாமைத்தவம் | சாதகமான திரவத்தன்மை மட்டத்தினைப் பேணுதல். | முறையாகக் கடன்களை அறவிட்டுக் கொள்ளும் கொள்கை மூலம் அறவிட முடியாத கடன் மற்றும் கடன்பெற்றோர் மீதிகள் அதிகரிப்பதைத் தவிர்த்தல். |
| | | பணப்பாய்ச்சல் எதிர்வுகூறல் மற்றும் போதியளவு காசு மற்றும் காசுக்கு சமமான சொத்துக்கள் நிலுவைகளைப் பேணுதல். |
| | | கூட்டுத்தாபனத்தின் கொள்கை ரீதியான தீர்மானம் எடுத்தல் ஒருமுகப்படுத்தப்பட்டுள்ளது. |
| | | செலவுகளைக் கட்டுப்படுத்தவதற்காக பொருத்தமான அதிகாரங்களை நிறுவுதல் |
| 02. வட்ட வீதத்தின் மீதான இடர்நேர்வு | வட்டி வீதம் மாற்றமடைவதால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளுதல் | வங்கியுடன் கலந்துரையாடி இணக்கமொன்றிற்கு உடன்பட்டு கூட்டுத்தாபனத்தின் முதலீடுகள் மீதான உயர் வட்டி வீதத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| | | வழங்குனர்களிடமிருந்து வட்டியற்ற ஏதேனும் கால எல்லையின் கீழ் கடனுக்கு பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கும் அதன் மூலம் அதிக ஆகுசெலவு மற்றும் வட்டி வீதத்தினைத் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| 03. பண இடர்நேர்வு | வெளிநாட்டு நாணய வீதம் மாற்றமடைவதால் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளுதல் | வெளிநாட்டு நாணயத் தளம்பல்கள் தொடர்பில் கண்காணித்து ஏற்றுமதி மற்றும் இறக்குமதிகளை முறையாகத் திட்டமிடல். |
| **வர்த்தக இடர்நேர்வு முகாமைத்துவம்** | | |
| 01. கடன் இடர்நேர்வு | கடன்பெற்றோரிடமிருந்து கடன்களை அறவிட்டுக் கொள்ள முடியாத இடர்நேர்வினைக் குறைத்துக் கொள்ளுதல் | ஐயப்பாடான கடன்களை வேறுபடுத்தல் மற்றும் விசாரணைக்காக கூட்டுத்தாபனத்தினால் முறையான கொள்கைகள் செயற்படுத்தப்படுகின்றன. |
| | | பெரும்பாலும் பணம் மீது மாத்திரம் விற்பனைகளை மேற்கொள்வதற்கு கவனத்திற் கொள்வதுடன், கூட்டுத்தாபனத்தின் கடனுக்கு விற்பனை செய்தல் கொள்கையினைப் பின்பற்றியே கடனுக்கு விற்பனை செய்யப்படும். |
| | | எல்லா கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கடன்பெற்றோர் மற்றும் கடன் கொடுத்தோர் கணக்குகள் குறித்து தொடர்ந்தும் கவனம் செலுத்தப்படுகின்றது. |
| | | பெரும்பாலும் தனி நபர்களுக்கு கடனுக்கு விற்பனை செய்யவதில்லை என்பதுடன், புது விற்பனை உபாய முறையொன்றாக அரச ஊழியர்களுக்கு மாத்திரம் சலுகை அடிப்படையிலான வட்டி வீதத்தில் ''பிரசாத அபிமானி'' திட்டத்தின் கீழ் பொருட்கள் கடனுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. |
| | | அரச நிறுவனங்களுக்கு மாத்திரம் கடனுக்கு விற்பனை நடைபெறும். பெரும்பாலும் தொதுத் திறைசேரிப் பரிமாற்றத்தின் கீழ் கணக்குகளைத் தீர்த்தல் மேற்கொள்ளப்படுகின்றது. |
| | | அடிக்கடி கண்காணிக்கக்கூடிய மற்றும் கடனை அறவிடும் கொள்கைகளை நிறுவுதல். |
| 02. சொத்துக்கள் இடர்நேர்வு | சொத்துக்களினால் ஏற்படும் இழப்பீடுகளைக் குறைத்துக் கொள்ளல். அதாவது, விசேடமாக இயந்திரோபகரணங்கள் செயலிழத்தல், தீயினால், திடீர் விபத்துக்களினால், ஊழியர்களினால், கள்வர்கள், எதிரிகளால் சொத்தக்களுக்கு ஏறபடக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளுதல். | எல்லா இடர் பிரிவுகளும் உள்ளடங்கும் விதத்தில் காப்புறுதிகளை சொத்துக்களுக்குப் பெற்றுக் கொள்ளல். |
| | | திட்டமிடப்பட்ட பராமரிக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்றின் கீழ் சொத்துக்களைப் பராமரிப்பதை மேற்கொள்ளல். |

| | | |
|---|---|---|
| 03. உள்ளகக் கட்டுப்பாடுகள் | முறையாக மற்றும் முறையான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பொன்றினை பேணுவதன் மூலம், கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல் மற்றும் தற்போது காணப்படும் செயன்முறை மூலம் காணப்படும் குறைபாடுகள் மற்றும் அவற்றின் இடர்களைக் குறைத்துக் கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல். | எப்போதும் கால அட்டவணைப் பிரகாரம் உரிய முறையில் உள்ளகக் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல் தொடர்பில் உள்ளகக கணக்காய்வுப் பிரிவு அர்ப்பணிப்புடன் செயற்படுதல். |
| | | அரச துறையில் வியாபார நிறுவனமாக பொருத்தமான நிர்வாக அமைப்பொன்றைப் பேணுதல். விசேடமாக பணஞ் செலுத்துதல்,வழங்குனர்களைத் தெரிவு செய்தல், ஊழியர்களை இணைத்துக் கொள்ளுதல் ஆகிய செயன்முறைகள் குறித்து கூடிய கவனஞ் செலுத்துதல். |
| | | எல்லா நிதிசார் செயற்பாடுகளும் நிதிசார் சட்டதிட்டங்களுக்கு மற்றும் நடைமுறையில் இருக்கும் சட்டதிட்டங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படும். |
| 04. மனித வளம் | ஊழியர் விற்பனைப் புரள்வை ஆகக்குறைந்த மட்டத்தில் பேணுதல் | சிறந்த மற்றும் சினேபூர்வமாக வேலை செய்யக்கூடிய சூழலொன்றை எல்லா ஊழியர் மட்டத்திலும் பேணுதல் |
| | தடைகளின்றி செயற்படு நடவடிக்கைகளை வினைத்திறன்மிக்கதாக நிறைவேற்றுதல் | பல்வேறு விதத்தில் ஊழியர் நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல்.<br>உதா. பாதணிகள் கொடுப்பனவு |
| | பயிற்சி பெறல் மற்றும் சிறந்த நடைமுறைகள் மூலம் விளைபயன்மிகு சேவையினைப் பெற்றுக் கொடுத்தல் | தேவையான சந்தர்ப்பங்களில் ஊழியர்களை விசேட மற்றும் பொதுப் பயிற்சி நெறிகளுக்கு அனுப்புதல். |
| | | அரசாங்க நிறுவனமாக விசேட கொள்கைத் தொடரின் பிரகாரம் புது ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படும். |
| 05. தொழில்நுட்பம் மற்றும் உற்பத்திகளின் தரம் தொடர்பில் இடர்நேர்வு | நவீன தொழில்நுட்பம் மற்றும் தர நியமம் குறித்து கூடிய கவனஞ் செலுத்துவதன் மூலம் நிறுவனத்தினுள் பழைமையான முறைகளைப் பயன்படுத்தவதால் ஏற்படும் சிக்கல்களை இல்லாதொழித்தல் | நீண்டகால திட்டங்களுக்கமைய பழைமை வாய்ந்த இயந்திரங்களுக்குப் பதிலாகப் புது இயந்திரங்களை உற்பத்திகளுக்குப் பயன்படுத்துதல் |
| | பொருட்கள் மற்றும் சேவைகள் குறிப்பிட்ட தரத்துடன் காணப்படாமையைக் குறைத்துக் கொள்ளுதல் | எமது உற்பத்திகள் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உள்ளது என உரிய நிறுவனங்களிடமிருந்து சான்றிதழ் பெறுதல். |
| | | ஆய்வு மற்றும் அபிவிருத்தி பிரிவின் மூலம் ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளுதல். |
| | | உற்பத்தித் தரத்தினைப் பாதுகாத்தலுக்கு தேவையான ஆய்வு நடவடிக்கைகளுக்காக ஆய்வுகூட வசதிகளை வழங்குதல். |
| | | வெளிவாரி மற்றும் உள்ளகக் கணக்காய்வுகளின் மூலம் அடிக்கடி விசாரித்தல். |
| 06. மொத்த இருப்பு முகாமைத்துவ இடர்நேர்வு | மொத்த இருப்பு இல்லாமலினால் ஏற்படக்கூடிய இழப்பைத் தவிர்த்தல் | மாதாந்த விற்பனை முன்னேற்பாடுகள் மற்றும் வருடாந்த வரவுசெலவுக்கு உட்படுத்தப்பட்ட உற்பத்தி இலக்குகள் குறித்து கவனத்திற் கொண்டு உற்பத்தித திட்டமிடல் கமிட்டி கூட்டத்தின் போது மாதாந்த உற்பத்தி இலக்குகள் தீர்மானிக்கப்படும். |
| | மெதுவாக விற்பனையாகும் மொத்த இருப்புக்கள் சேர்வதால் ஏற்படும் இழப்பினைக் குறைத்துக் கொள்ளுதல் | மெதுவாக விற்பனையாகும் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு பல்வேறு சந்தைப்படுத்தல் முறைகளைக் கையாளுதல். உதா.: ''பிரசாத அபிமானி தளபாடக் கடன் திட்டம்'' போன்ற சந்தைப்படுத்தல் உபாயமுறைகள் |
| | இருப்புக்களை வைத்திருக்கும் ஆகுசெலவினைக் குறைத்துக் கொள்ளுதல் | உற்பத்திச் செயன்முறைகள் பல்வேறு மட்டங்களில் தரப் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு முடிவுப்பொருட்களை வாடிக்கையாளரிடம் போய் சேரும் வரையில் தரத்தினை உறுதிப்படுத்துதல். |
| | | அடிக்கடி மொத்த இருப்பினைப் பகுப்பாய்வு செய்து மெதுவாக விற்பனையாகும் மொத்த இருப்புக்களை இனங்கண்டு அவற்றினை வருமானம் ஈட்டுவதற்காக ஈடுபடுத்துதல். |



| | | |
|---|---|---|
| | | வீணாகும்/ நீக்கப்படும் அரிமரப் பகுதிகள் கொண்டு வேறு வருமானம் பெறும் வழிகளை ஏற்படுத்துதல். |
| 07. போட்டி இடர்நேர்வு | தரங் குறைந்த இறக்குமதி செய்யப்பட்ட அரிமரம் மற்றும் மரத் தளபாடங்கள் காரணத்தால் சந்தைப் போட்டித்தன்மை உயர்வடைவதால் ஏற்படக்கூடிய சந்தைப் பங்கு குறைவடைதலைத் தவிர்த்தல். | காணப்படும் தரக்கட்டுப்பாடு நியமங்களின் பிரகாரம் உள்ளதா என எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் |
| | பிரதான உற்பத்திகளின் விற்பனை வருமானத்தினை அதிகரித்துக் கொள்ளுதல். (அதாவது, மரக் குற்றிகள், மரத்துண்டங்கள், சிலிப்பர் கட்டைகள், மின்கம்பங்கள், யானை வேலிக்கம்பங்கள் போன்றன) | பல்வேறு பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மூலம் மென்மேலும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நற்பெயரை வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| | | நவீனமயப்படுத்தலுக்காக ஆய்வுகளை மேற்கொள்வதுடன், புதுக் கருதுகோள்கள் நிறுவனத்தினுள் கொண்டு வருவதன் மூலம் வாடிக்கையாளர் ஈர்ப்பினை அதிகரித்துக் கொள்ளுதல். |
| | | சந்தை ஆய்வுகளின் மூலம் வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களை இனங்காணல் மற்றும் அதற்குப் பொருத்தமான முறையில் உற்பத்திகளை முன்வைத்தல். |
| 08. சட்ட மற்றும் ஒழுங்கு விதி இடர்நேர்வு | சட்டங்களுக்கும் ஒழுங்கு விதிகளுக்கும் இணங்காமையினால் ஏற்படும் இழப்புக்களைத் தவிர்த்துக் கொள்ளல். | பணிப்பாளர்கள் மற்றும் உரிய அதிகாரிகளின் அறிவுறுத்தலின் படி செயற்படுதல். |
| | சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகள் மாற்றமடைவதால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல். | சட்டக்கொள்கைகளின் போக்கினைக் கண்காணிப்புச் செய்தல். |
| | சட்டரீதியான சூழலில் ஏற்படும் மாற்றங்களுக்கு வெற்றிகரமாக முகங் கொடுப்பதற்கான சக்திமிக்க, விளைபயன்மிக்க, நெகிழ்வுத்தன்மை கொண்ட அமைப்பொன்றை ஏற்படுத்துதல். | |
| 09. மூலதன முதலீடுகள் | தற்போது மற்றும் எதிர்காலத்தில் திட்டமிடப்பட்டுள்ள முதலீடுகளினால் ஏற்படக் கூடிய இழப்புக்களைக் குறைத்தல் | சொத்துக்களில் முதலீடு செய்யும் போது உரிய முறையில் திட்டமிட்டு கூட்டுத்தாபனத்தின் வரவுசெலவு திட்டத்தின் படி செயலாற்றுதல். |
| | | காணப்படும் எல்லா சொத்துக்களையும் உச்ச அளவில் பயன்படுத்துதல். |
| | | மூலதன முதலீட்டுக் கொளகைகளைச் செயற்படுத்தும் போது அரசாங்கத் துறை வியாபாரம் என பொறுப்புடன் செயற்படுதல். |
| 10. சுற்றாடல் இடர்நேர்வு | கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளினால் சூழலில் ஏற்படும் பாதகமான விளைவுகளைக் குறைத்தல். | சூழல் சார் கொள்கைகளைத் தீர்மானிக்கும் நிறுவனங்களின் கொள்கைகளுக்கு இணங்குகின்றமையை உறுதிப்படுத்துதல். |
| | கூட்டுத்தாபனத்தின் சூழல் சார் கொள்கைகளுக்கு இணங்கச் செயற்படுதல். | சுற்றாடல் நேயமிக்க தரப்பினருடன் சக்திமிக்க தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளல். |



# மருதம்

மருத மரம் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட தாவரமாகும். வுநசஅயைெடயை இனத்திற்குரிய ஏறக்குறைய 100 இனங்கள் உள்ளதுடன், மருதம் இந்தியாவில் பல பிரதேங்களிலும் இலங்கையில் வறள் வலயத்தில் ஆறுகளை அண்டிய பிரதேசங்களிலும் காணக்கூடிய சுந்தரமான பசுமை மிக்க விசாலமான மரமாகும். அதன் தண்டுப்பகுதி தடிப்பு மிக்கதும் அதன் கிளைகள் விசாலமான பகுதி முழுதும் பரந்து காணப்படும். மரத்தின் ஒவ்வொரு பகுதியும் ஆயுர்வேதத்தில் மற்றும் பழம்பொருந்திய வைத்திய விஞ்ஞானத்துறையில் பயன்படுத்தப்படுகின்றது. விசேடமாக இதய நோய், சிறுநீர்ப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு நோய்களுக்கு மருந்தாகப் பெறுமதிமிக்க இடத்தினை வகிக்கின்றது. அதன் தண்டின் பட்டையில் 25மூ டானின் காணப்படுகின்றமை இன்னொரு சிறப்பம்சமாகும். இலைகளில் காணப்படும் கல்சியத்தின் விளைவாக மரத்தின் கீழுள்ள மண்ணில் கல்சியத்தின் அளவு அதிகமாகக் காணப்படுகின்றது.

*மூலம்*
***இலங்கை அரிமரத் தாவரங்கள்***
*கலாநிதி நிமல் ருவன்பத்திரண*



# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் குறித்து 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. ஜஈஎன்/சீ/எஸ்ரீசீ/ 1/18/193
ඔබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2018 செப்தெம்பர் 18

19 NOV 2018
21 NOV 2018

தலைவர்,
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

**அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

23 NOV 2018

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.



ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

---

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

---

**2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம் 16**

---

நியமத்தின் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்தக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக ரூபா 227,566,848 கிரயமான சொத்துக்கள் முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் திருத்தி சரியான பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 5,630,297 தொகையான பொருளாதார சேவைக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 915,178 தொகையான வெட்டும் வாள்களின் பெறுமதி மீண்டெழும் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக நடைமுறை வேலையான மூலதன வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கல்தெமுல்ல அட்டிமடுவில் பொருத்தப்பட்டிருந்த இரும்பு அலுமாரிகளை மீண்டும் சரி செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 834,124 தொகையான செலவினம் இலாப நட்டக்கூற்றில் சீராக்குவதற்குப் பதிலாக நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான அலுவலகத்தில் நானாவித கடன்கொடுத்தோராக ரூபா 75,458,361 தொகையான மீதியொன்று மீளாய்வாண்டின் போது முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் 2016 ஆம் ஆண்டின் போதோ அல்லது மீளாய்வாண்டின் போதோ கடன்கொடுத்தோராக உள்ளடக்கப்படாத செலவினங்களுக்காகவும் நானாவித கடன்கொடுத்தோர் கணக்குகள் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட பிரதான அலுவலகத்தின் கடன்கொடுத்தோர் பட்டோலையில் உள்ளடக்கப்பட்ட சில கடன்கொடுத்தோர் மீதிகளுக்காக மீளாய்வாண்டின் போது கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் அந்த மீதியில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன்கொடுத்தோர் பட்டோலையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 130,272,172 தொகையான நானாவித கடன்கொடுத்தோர் மீதியின் சரியான தன்மை பிரச்சினைக்குரியதாக இருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலுத்த வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பெறுமதி சேர்வரி மீதி என்பன நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 50,386,639 ஆக இருந்ததுடன் உரிய வரி அறிக்கையின் பிரகாரம் ரூபா 52,558,485 ஆனமையால் ரூபா 2,171,846 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.





(ஆ) ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம், செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் மற்றும் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதியம் போன்ற 04 கணக்கு விடயங்களின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரமான மீதிக்கும், பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 1,450,440 கூட்டுத்தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்வுச் சான்றுகளின்மை

பலவருட காலமாக தளம்பல்களுடன் முன்கொண்டுவரப்படுகின்ற வனபாதுகாப்புத் திணைக்களத்திற்கு மேற்கொள்ள வேண்டிய கொடுப்பனவுகளுக்கான ஒதுக்கமாக ரூபா 39,531,327 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான அலுவலகத்தின் நானாவித கடன்கொடுத்தோர் கணக்கில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதிக்குரிய விரிவான பட்டோலை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட 1983 ஆம் ஆண்டு முதல் ஒரு தனியார் கம்பனியிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 11,873,954 தொகை மற்றும் அரச மற்றும் பகுதி அரசாங்க நிறுவனங்களிடமிருந்து அறவிட வேண்டிய 5 வருடங்களுக்கு மேறப்பட்ட ரூபா 11,003,176 தொகையான மீதி காணப்படுவதுடன் அதனை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டு முதல் வனபாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து கிடைக்க வேண்டிய கட்டிட வாடகை ரூபா 19,980,000 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகங்களின் ஊழியர்களுக்குச் செலுத்த வேண்டிய ரூபா 1,226,970 தொகையான சம்பளம் மற்றும் படிகள் 2018 யூன் வரையிலும் செலுத்தி தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 04 வருடங்களை விஞ்சிய கூட்டுத்தாபனத்தின் வேலைத்தளத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 11,491,279 தொகையான செயல்நிமித்த உபகட்டுநிதி 2018 மே வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 133,800 வைப்புக்கள், 02 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலத்தை விஞ்சிய பாதுகாப்பு வைப்பு ரூபா 840,000 தொகை மற்றும் வருடமொன்றிற்கு மேற்பட்ட பழைய கென்க் நேல் வைப்பு ரூபா 1,258,635 தொகை என்பவற்றை தீர்த்து வைப்பதற்கோ அல்லது நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |



NAOSL ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

| | |
|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் XXXII ஆம் அத்தியாயத்தின் 1.2 ஆம் உபபிரிவு | கல்தெமுல்ல இயந்திர பொறியியலாளர் பிரிவிற்கு நியமிக்கப்பட்டிருந்த நிர்வாக உத்தியோகத்தரினால் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது அரசியல் செயற்பாடுகளில் முழுமையான காலம் ஈடுபட்டிருந்த போதிலும் தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை சம்பள அதிகரிப்புக்களும் வழங்கப்பட்டு ரூபா 1,260,364 தொகை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (இ) 2007 இன் ஆலோசனைச் சேவையினைத் தெரிவு செய்தல் மற்றும் சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பான பெறுகை வழிகாட்டிக் கோவை | வழிகாட்டியின் ஏற்பாடுகளைப் பின்பற்றாமல் 2013 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலத்தில் ஒப்பந்தப் பெறுமதி ரூபா 257,263,277 தொகையான 17 நிர்மாண ஒப்பந்தங்கள் தொடர்பாக ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 5,230,774 தொகை ஆலோசனைச் சேவை நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது. |

**3. நிதிசார் மீளாய்வு**

---

**3.1 நிதிசார் விளைவுகள்**

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 565,741,554 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நிதிவிளைவுகள் ரூபா 86,678,961 மிகையாக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 479,062,593 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. விற்பனை வருமானம் ரூபா 39,818,582 இனால் அதிகரித்தமை, விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் ரூபா 84,406,064 இனாலும், நிர்வாகச் செலவினம் ரூபா 122,145,217 இனாலும் மற்றும் திறைசேரிக்குச் செலுத்திய

வரியின் அளவு ரூபா 75,000,000 இனால் குறைவடைந்தமை என்பன நிதி விளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்த நிதி விளைவுகள் 2016 ஆம் ஆண்டின் போது வீழ்ச்சியடைந்து மீண்டும் மீளாய்வாண்டின் போது அதிகரிப்பைப் பெற்றிருந்தது. எனினும், நிதிவிளைவுகளுக்கு ஊழியர் ஊதியம், பெறுமானதத்தேய்வு மற்றும் ஆண்டின் வரிச் சீராக்கல்களின் பின்னர் 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பங்களிப்பு தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது முன்னைய ஆண்டை விட ஒப்பீட்டு ரீதியில் 5 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாப விகிதம் 49 சதவீதமான உயர் பெறுமதியைக் கொண்டிருந்த போதிலும், உற்பத்திச் செலவினத்திற்கு மேலதிகமாக வருமான வரி, நிர்வாகச் செலவினம், விற்பனைச் செலவினம் மற்றும் பகிர்ந்தளித்தல் செலவினம் மற்றும் சம்பளங்கள் மற்றும் படிகள் என்பவற்றை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தொடர்ச்சியான உயர்வடைந்து சென்றமையால் தேறிய இலாப விகிதத்தை மொத்த இலாப விகிதத்துடன் ஒப்பிடும் போது வீழ்ச்சியடைந்து செல்வதற்கு காரணமாக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் நடைமுறை விகிதம் மற்றும் விரைவு விகிதம் என்பவற்றை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவான பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் நடைமுறை விகிதத்தை விட விரைவு விகிதம் குறைந்த பெறுமதியைக் கொண்டிருந்தது. அதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் இருப்பில் பணம் கணிசமான வகையில் முடங்கியிருந்தமை அவதானிக்கப்பட்டது.





## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 செயற்படுநிலையும் மீளாய்வும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்கிடையே விவசாய கைத்தொழில் உற்பத்திகள், பிரம்பு இறக்குமதி மற்றும் மரங்களுடன் அண்மித்த பூர்த்தி மற்றும் அரை பூர்த்தி பொருட்களை ஏற்றுமதி செய்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் மர உபபொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை என்பன இடம்பெற்றிருக்கவில்லை. சிலிப்பர் மரங்களை ஏற்றுமதி செய்தல், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் 70 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தால் 2016 - 2020 காலப்பகுதிக்குரியதாகத் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது நிறைவேற்ற வேண்டிய மர அறுவடை செய்யும் ஒப்பந்த முகாமைத்துவ முறைமை மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ முறைமைகளை அறிமுகப்படுத்துதல், மர அழிவுகளைத் தடுப்பதற்கான வழிமுறைகளை எடுத்தல், சரியான திட்டமுறைமையின் மூலம் மரங்கள் தொடர்பாக புள்ளவிபரங்களைப் பெற்றுக்கொள்ளல் என்பவைகளுக்காக வழிமுறைகளைத் ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தினைத் தயாரித்தல், மரத்துண்டங்களை பதிவேடுகளுக்குக் கொண்டு வருபவர்களின் (Logging Contractors) செயற்திட்ட இயலுமை மற்றும் திறன் அபிவிருத்திக்காக ரூபா 02 மில்லியன் வீதம் வருடாந்தம் ஒதுக்குதல் மற்றும் அவற்றுக்குத் தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் அறுவடை செய்யப்படுகின்ற மரங்களின் செயற்பாடுகளுக்காக நவீன இயந்திர உபகரங்களைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 10 மில்லியன் வீதம் ஒதுக்கியமை என்ற நிகழ்ச்சித்திட்டங்கள் இதுவரையிலும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபன்ம் ஒட்டுமொத்த விற்பனை வருமானத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 1 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும், தனியார் மரக் குற்றிகளின் விற்பனை வருமானம், தனியார் மற்றும்

அரசாங்க காணிகளில் சிலிப்பர் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட சிலிப்பர் வருமானம் மின்சார வேலி தூண்கள் மற்றும் யானை வேலி தூண்கள் போன்றவற்றின் விற்பனை வருமானங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 30 சதவீதத்திற்கும் 75 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் வீழ்ச்சியடைந்திருந்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட மரவிற்பனை வருமானம் மாத்திரம் 0.85 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் மொத்த தேறிய இலாபம் ரூபா 966,804,360 ஆக இருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தின் 12 பிரதேச அலுவலகங்களில் அம்பாறை மற்றும் பொலன்னறுவை என்ற 02 பிரதேசங்களில் ரூபா 16,990,112 கூட்டுத்தொகையான நட்டமும், கூட்டுத்தாபனத்தின் 03 மரத்தொகுதியில் (Complex) இரண்டினது மொத்த நட்டம் ரூபா 52,044,023 கூட்டுத்தொகையும், 03 உற்பத்திச் சாலைகளில் 02 உற்பத்திச் சாலைகளில் ரூபா 52,308,236 கூட்டுமொத்தமான நட்டமும் மற்றும் கல்தெமுல்ல கைத்தொழில் பிரிவில் ரூபா 30,750,890 தொகையான நட்டமுமாக ரூபா 152,093,261 கூட்டு தொகையான நட்டம் பெறப்பட்டிருந்தது.

(உ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்தின் பிரகாரம், வருமானம் உழைக்கும் வழிகளுக்கிடையே மரத்தளபாடங்களின் விற்பனை வருமானம் பிரதான இடத்தைப் பெற்றிருந்த போதிலும், மீளாய்வாண்டின் மரத்தளபாடங்களின் விற்பனை வருமானம் ஒட்டுமொத்த விற்பனை வருமானத்தில் 9 சதவீதமான போதுமான அளவில் இல்லாது கீழ் மட்டத்தில் காணப்பட்டது. மீளாய்வாண்டில் மரத்தளபாடப் பொருட்கள் பிரிவின் மொத்த இலாபம் ரூபா 985,596 ஆக இருந்தது. அதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபத்தில் 0.1 சதவீதமாகும் அதன் பிரகாரம் கூட்டுத்தாபன அரசாங்க மரங்களைப் பெற்றுக் கொள்வதில் தனியுரிமைத் தன்மையைக் கொண்ட நிறுவனமொன்றாக இருந்த போதிலும், தளபாட பொருள் விற்பனை வருமானத்தை உயர்வடையச் செய்வதற்கு தேவையான புதிய சந்தைப்படுத்தல் தந்திரோபாயங்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) அரசாங்க மரக் கூட்டுத்தாபகத்தின் 2017 ஆம் ஆண்டின் பாதீடு செய்யப்பட்ட விற்பனைகளின் பிரகாரம் இலக்கிடப்பட்ட மரத்தளபாடப் பொருட்களின் விற்பனை வருமானம் ரூபா 501,333,000 ஆக இருந்த போதிலும், உள்ளபடியாக உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 389,044,488 ஆனமையால் ரூபா 112,288,512 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் இலக்கிடப்பட்ட





வருமானத்தை அடைந்து கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் முடியாதிருந்தது.

(எ) மரத் தளபாடப் பொருள் உற்பத்தியின் போது, ஏற்படுகின்ற மர அழிவுகளைப் பயன்படுத்தி உப உற்பத்திகளை மேற்கொள்ளும் நோக்கில் நடாத்திச் செல்லப்பட்ட பூஸ்ஸ பின்கர் ஜொயின்ட் உற்பத்திச்சாலை 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 3,240,127 மொத்த இலாபம் பெற்றிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டில் மொத்த இலாபம ரூபா 2,253,536 ஆக இருந்து ரூபா 986,591 இனால் வீழ்ச்சியடைந்து சென்று மீளாய்வாண்டின் போது ரூபா 2,712,225 மொத்த நட்டத்தைப் பெற்றிருந்தது. அது முன்னைய ஆண்டின் போது பின்கர் ஜொயின்ட் உற்பத்தி விற்பனையிலிருந்து கிடைத்த மொத்த இலாபத்துடன் ஒப்பிடும் போது 220 சதவீத வீழ்ச்சியாகும். இதன் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் உப உற்பத்திக்காக போதியளவான சந்தை நிலையொன்று காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஏ) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற 07 காட்சிக் கூடங்களில் 04 கூடங்களில் மீளாய்வாண்டில் ரூபா 33,521,024 மொத்த நட்டமொன்று பெறப்பட்டிருந்த போதிலும், தலல்ல, பூஸ்ஸ, அம்பாறை போன்ற 03 காட்சிக் கூடங்களில் பெறப்பட்ட மொத்த நட்டம் ரூபா 4,879,985 கூட்டுத்தொகையாக இருந்ததுடன் மரத்தளபாட பிரிவின் விரிவான வருமானக் கூற்றின் பிரகாரம் மேலும் இந்த மொத்த இலாபம் / நட்டத்திற்கான விற்பனைக் கிரயம் மற்றும் நிர்வாகச் செலவினங்களை சீராக்குவதன் மூலம் தேறிய இலாபம் ரூபா 985,596 வரை குறைவடைந்திருந்தது. இதன் பிரகாரம் காட்சிக் கூடங்களிலிருந்து கிடைத்த இலாபத்தின் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு போதியளவான பங்களிப்பு கிடைக்கப் பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் கெப்படிபொல பிரிவின் மூலம் தனியார் தரப்பினருக்குரிய காணிகளிலிருந்து பெறப்பட்ட மரங்களிலிருந்து மின்சார கம்பங்களைப் பெற்று ,எஞ்சியிருந்த மரங்கள் சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டிருந்த விலை எண்ணிக்கையை விட குறைவான விலையில் விற்பனை செய்யப்பட்டமையால் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,051,364 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. பிரதி பொது முகாமையாளரின் (உள்ளகக் கணக்காய்வு) 2016 மார்ச் 10 ஆந்

திகதிய கடிதத்தின் மூலம் அந்த நட்டப் பட்டியலை விநியோகித்த உத்தியோகத்தரிடமிருந்து அல்லது உரிய கொள்வனவாளரிடமிருந்து அறவிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 629,318 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கல்தெமுல்ல கட்டிடத் தொகுதியில் மர அடுக்கில் புதிதாக இரும்பு இறாக்கைகள் பொருத்தும் ஒப்பந்தம் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றாமலும் ஒப்பந்தகாரருடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமலும் ரூபா 2,052,500 தொகைக்கு தனியார் நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் பொருத்தப்பட்டிருந்த இறாக்கைகள் திட்டமிடப்பட்ட பிரகாரம் மரங்களை களஞ்சியப்படுத்த முடியாமையின் காரணமாக அந்த இரும்பு இறாக்கைகளை அகற்ற வேண்டியேற்பட்டிருந்தது. இதன்போது ஏற்பட்டிருந்த நட்டத்திற்காக ரூபா 834,124 தொகையை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடுவதற்கு நிதிப்புலனாய்வினால் வழங்கப்பட்ட குழுத் தீர்மானத்தின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பண்டாரவல பிரதேச அலுவலகத்தையும் கெப்பட்டிபொல களஞ்சியத்தையும் உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களையும் நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் கேள்வி ஆவணங்களைத் தயாரிப்பதற்காக 2013 ஆம் ஆண்டின் போது முறையே ரூபா 566,098 மற்றும் ரூபா 94,906 தொகைகள் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாமையின் காரணமாக அந்த செலவினங்கள் பயனற்ற செலவினமாகியிருந்தது.

### 4.3 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏல விற்பனை மூலம் மரக்குற்றிகளை விற்பனை செய்யும் போது நல்ல நிலையிலுள்ள மரக்குற்றிகளை பழுதடைந்த மரக்குற்றிகளுடன் ஒன்றாக சேர்த்து ஏற்றியமையினால் குறைந்த விலை வீதத்தின் அடிப்படையில் விற்பனை செய்ய வேண்டி ஏற்பட்டமையின் காரணமாக நல்ல நிலையிலுள்ள மரக்குற்றிகளையும் குறைந்த விலையின் கீழ் விற்பனை செய்ய வேண்டி ஏற்பட்டிருந்தது.







(ஆ) றத்மலான காட்சிக் கூட நிர்மாணத்தை திட்டமிடுவதற்காக 2013 ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட ரூபா 1,477,650 தொகை கல்தெமுல்ல பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட கட்டிடத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும், நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் மீண்டும் புதிதாக திட்டமிடப்பட்டு நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் 2014 நவம்பர் 14 ஆந் திகதி பெறப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் சுற்றுலா விடுதிகளின் வருமானம் ரூபா 1,046,548 ஆகவும், செலவினம் ரூபா 6,667,018 ஆகவும் இருந்ததுடன் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,620,473 ஆகக் காணப்பட்டது. எனினும், சுற்றுலா விடுதி தொடர்பாக வெளித்தரப்பினருக்கு அறிவித்து வருமானத்தை அதிகரிக்கும் முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 25 வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 599,178 பெறுமதியான 116 உதிரிப்பாக விடயங்கள் பொறலந்த உதிரிப்பாக களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டமை 2017 செப்தெம்பர் 14 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட தெரிவு பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 05 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட பொறலந்த கைத்தொழில் பிரிவின் வாகனம் கழுவும் தளம் சரியான நியமத்தில் தயாரிக்கப்படாமையினால் அதனைப் பயன்படுத்த முடியாதிருந்ததுடன் அதன் காரணமாக ரூபா 2,094,677 தொகையான கட்டிடம், உபகரணங்கள் மற்றும் நீர்பாய்ச்சும் இயந்திரம் என்பன விளைவற்றுக் காணப்பட்டன.

### 4.5 பதவியணியினர் நிர்வாகம்

மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 2308 ஆக இருந்ததுடன் அத்திகதியில் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 1901 ஆகும். அதன் பிரகாரம் 65 பதவிகளுக்குரிய 440

உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையும், 07 பதவிகளுக்குரிய 33 உத்தியோகத்தர்களின் மிகையும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அந்தப் பற்றாக்குறையில் உயர் முகாமைத்துவத்தில் 06 பதவிகளும், மத்திய முகாமைத்துவத்தில் 45 பதவிகளும், கீழ் மட்ட முகாமைத்துவத்தில் 54 பதவிகளும், முகாமைத்துவ உதவியாளர் சேவையில் 66 பதவிகளும் மற்றும் ஆரம்ப சேவையில் 260 பதவிகளும் உள்ளடங்கியிருந்தன.

**4.6 சந்தைப் பங்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனம் அரசாங்க மரங்களை பெற்றுக்கொள்ளல், மரத்தளபாட உற்பத்தி, விற்பனை மற்றும் மரவிற்பனை போன்ற சகல பிரிவுகளிலும் அரசாங்கத்தின் தனியுரிமைத் தன்மை காணப்படுகின்ற ஒரே அரச நிறுவனமாக இருந்த போதிலும், சந்தையில் கூட்டுத்தாபனத்திற்குக் காணப்படுகின்ற சந்தைப் பங்கு எவ்வாறானது எனத் தீர்மானிப்பதற்கு காலரீதியில் சந்தை ஆராய்ச்சியொன்றைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரசாங்கத்தின் மரங்களைப் பெற்று உயர்தரத்திலுள்ள தளபாட பொருட்களை உற்பத்தி செய்ய முடியுமாக உள்ள அரசாங்கத்தின் தனியுரிமைத் தன்மையைப் பெற்றுள்ள 52 மரக்களஞ்சியங்கள், 06 விற்பனைக் காட்சிக் கூடங்கள் என்பவற்றை உள்ளடக்கிய வளங்களை உரித்தாகக் கொண்டு காணப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் தளபாடப் பொருள் விற்பனைக்காக 0.45 சதவீதமான அதாவது ஒரு சதவீதத்திற்கு குறைந்த சந்தைப் பங்கே உரித்தாகின்றது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரல் இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்குரிய அரசாங்க கூட்டுத்தாபனத்தில் தமது விடயப் பரப்பின் கீழுள்ள பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது தொடர்பாக விளக்கப்பட்டிருந்தது.







(அ) மேற்கூறப்பட்ட 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தெளிவுபடுத்தும் அடிப்படையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தால் தமது விடயப் பரப்பின் பிரகாரம் அடையப்பட வேண்டிய நோக்கங்களான வறுமை நிலையான பொருளாதார மட்டத்தை கட்டியெழுப்புதல் மற்றும் புதிய நிலைபேறான நுகர்வு, உற்பத்தி போன்ற நோக்கங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் நிலைபேறான நுகர்வு, உற்பத்தி மற்றும் பொருளாதார மட்டத்தை கட்டியெழுப்புதல் மற்றும் புதிய உற்பத்திகளை நிர்மாணித்தல் என்பவைகளுக்கான அடிப்படைத் தரவுகள் இலக்குகளை அடைய வேண்டிய கட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றங்களை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துதல் தொடர்பாக அக்கறையைக் காண்பிக்கும் தரப்பினராக பாடசாலை ஆசிரியர்கள், குறைந்த வருமானம் பெறும் தச்சுகைத்தொழிலாளர்கள், மரம் அரியும் ஊழியர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்திற்குரிய இலக்குகளைத் தயாரிக்கும் போது பங்குபற்றலுடன் கூடிய நுழைவொன்றை வெளிப்படுத்தாதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) எந்தவொரு செயற்பாட்டிற்கும் சரியான செயல்முன்னேற்றத்தை அளவிடுவதற்காக சரியான தரவு அடிப்படையொன்று காணப்படுவது அத்தியாவசியமாக இருந்த போதிலும், நிறுவனத்தால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதலை அளவீடு செய்வதற்காக சரியான தரவுகள் அடிப்படையை உருவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதற்காக நிதிஏற்பாடு போதியளவில் காணப்படாமை, பௌதீக வசதிகள் போதியளவில் இன்மை, பயிற்சி பெற்ற ஊழியர்கள் இன்மை போன்ற விடயங்கள் காரணமாக இருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) நிலைபேறான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக நிறுவனத்தால் இனங்காணப்பட்ட பணிகள் வருடாந்த திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதிஏற்பாடுகள் வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கை அடைந்து கொள்வதற்கு தயார் நிலையில் இருக்கும் போது ஏனைய நிறுவனங்களுடன் சரியான தொடர்பொன்று பேணப்படாமையின் காரணமாக இலக்கிடப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளும் திட்டம் தயாரிக்கும் போதும் முன் ஆயத்தம் செய்யும் போதும்

செயல்நடவடிக்கைகள் மிகவும் மெதுவான அல்லது நலிவான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த செயல்முறைகள்

6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த மூலதன வடிவிலான 06 விடயங்கள் ரூபா 9,415,858 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) 2006 இன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை நிறுவனங்களினால் ஆகக்குறைந்தது 03 வருட காலத்திற்காக பிரதான பெறுகைத் திட்டமொன்று (MPP) தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

6.2 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 நவம்பர் 21 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட பண்டாரவளை பிரதேச அலுவலகத்தின் நிர்மாணம் 2017 மே 26 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 மே வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ஒப்பந்த பெறுமதியில் 18 சதவீதத்தை விஞ்சிய மேலதிக வேலைக்காக ரூபா 4,132,005 தொகை செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் கேள்விச் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் பாதீட்டின் பிரகாரம், நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 238,400,000 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 138,700,000 தொகை பயன்படுத்தப்படவில்லை. அது ஒட்டுமொத்த நிதிஏற்பாட்டில் 58 சதவீதமாகும். நல்லாளுகை வ்ழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் நம்பிக்கையுடன் கூடிய இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதை நிர்ணயிக்கும் வகையில் வருடாந்த திட்டம் மற்றும் பாதீட்டு





மீளாய்வுகள் செய்யப்பட வேண்டி இருந்ததுடன் அவ்வாறே நல்லாளுகை வழிகாட்டிக் கோவையின் நியதிகளின் அடிப்படையில் செயற்பட்டுஇருக்குமாயின் அந்த நிதிஏற்பாட்டை வேறொரு பொருளாதார ரீதியான கொடுக்கல் வாங்கல்களுக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியுமாக இருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினத்திற்குமிடையே 85 சதவீதம் முதல் 1252 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

7. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் உள்ள குறைபாடுகள் அவ்வவ்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்தக்களின் உரித்து உறுதிப்படுத்தாமை மற்றும் சொத்துக்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டமை. |
| (ஆ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | அறவிட வேண்டிய கடன் மீதியில் குறித்த கால எல்லையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை, வெளித்தரப்பினருக்கு செலுத்த வேண்டிய அரசிறையை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |

| | | |
|---|---|---|
| (இ) | பதவியணியினர் நிர்வாகம் | தாபன சட்டம், விதி மற்றும் பிரமாணங்களின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு இடம்பெறாமை. |
| (ஈ) | பெறுகை | பெறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படாமை. |
| (உ) | வருமான நிர்வாகம் | விற்பனை பட்டியலுக்கான வரி கணிப்பீடு செய்தல் சரியாகப் பதியப்படாமை |

டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

18





# வருடாந்த கணக்குகள்

2017 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது

## இலாப அல்லது நட்டக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது | குறிப்பு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| விற்பனைப் புரள்வு | 2 | 4,253,774,266 | 4,213,955,684 |
| விற்பனைக் கிரயம் | 3 | (2,177,824,205) | (2,168,865,411) |
| **தொழிற்பாடு மீதான மொத்த இலாபம்** | | **2,075,950,061** | **2,045,090,273** |
| வேறு வருமானங்கள் | 6 | | |
| தொழிற்படு | 6.2 | 103,163,513 | 91,843,464 |
| தொழிற்பாடற்ற | 6.1 | 273,779,849 | 216,438,841 |
| **மொத்த தேறிய வருமானம்** | | **2,452,893,423** | **2,353,372,578** |
| விற்பனை மற்றும் விநியோகித்தல் செலவினங்கள் | 4 | (680,617,770) | (766,023,834) |
| நிர்வாகச் செலவினங்கள் | 5 | (805,471,293) | (927,616,510) |
| **திறைசேரி வரியின் முன் தேறிய இலாபம்** | | **966,804,360** | **659,732,234** |
| திறைசேரிக்கு செலுத்திய வரிகள் | | (100,000,000) | (175,000,000) |
| **திறைசேரி வரியின் பின் இலாபம்** | | **866,804,360** | **484,732,234** |
| வருடத்திற்கான வருமான வரி | 7 | (301,062,806) | (398,053,273) |
| **வருடத்திற்கான இலாபம்** | | **565,741,554** | **86,678,961** |

## விபரமான வருமானக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது | குறிப்பு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| **வருடத்திற்கான இலாபம்** | | **565,741,554** | **86,678,961** |
| **ஏனைய விபரமான வருமானங்கள்** | | | |
| வருடத்திற்கான ஓய்வூதியப் பணிக்கொடை மிகை/குறை | | (323,413,595) | (51,403,312) |
| **வருடத்திற்கான ஏனைய விபரமான வருமானங்கள்** | | **(323,413,595)** | **(51,403,312)** |
| **வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம்** | | **242,327,959** | **35,275,649** |



## நிதி நிலைமைக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு | குறிப்பு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| **நடைமுறையற்ற சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி, இயந்திரங்கள் | 8 | 980,517,535 | 1,008,318,543 |
| அருவச் சொத்துக்கள் | 9 | 1,443,873 | 1,357,674 |
| உயிரியல் சார் சொத்துக்கள் | 10 | 6,577,016 | 6,042,270 |
| திறைசேரி வைப்புக்கள் | | 2,966,000 | 2,966,000 |
| பிணை வைப்புக்கள் -பணிக்குழாம் | | 63,941,048 | 60,798,982 |
| முதலீடுகள் | 11.1 | 605,190,777 | 565,993,603 |
| முன்செலுத்தப்பட்ட ஊழியர் நன்மைகள் | | 67,459,232 | 53,906,375 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 7.2 | 96,644,503 | 7,494,820 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகள் | | 69,856,596 | 25,761,631 |
| **மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள்** | | **1,894,596,581** | **1,732,639,898** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 12 | 1,513,147,565 | 1,353,002,944 |
| வியாபார மற்றும் வேறு கிடைக்கவேண்டியவை | 13 | 868,402,923 | 979,885,750 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | 11.2 | 1,694,380,646 | 1,060,353,181 |
| காசு மற்றும் காசுக்கு சமமானவை | 14 | 347,174,014 | 258,943,959 |
| **மொத்த நடைமுறைச் சொத்துக்கள்** | | **4,423,105,148** | **3,652,185,834** |
| **மொத்த சொத்துக்கள்** | | **6,317,701,729** | **5,384,825,732** |
| | | | |
| உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள் | | | |
| **மூலதனம் மற்றும் ஒதுக்குகள்** | | | |
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | | **75,000,000** | **75,000,000** |
| | | | |
| அளிக்கப்பட்ட மூலதனம் | 15 | 41,503,668 | 41,503,668 |
| வருவாய் ஒதுக்கீடு | | 3,857,127,941 | 3,703,809,584 |
| | | **3,898,631,609** | **3,745,313,252** |
| ஊழியர் கடன் சுழல் நிதியம் | 16 | 332,062,529 | 243,052,926 |
| **மொத்த உரிமைப்பங்கு** | | **4,230,694,138** | **3,988,366,178** |
| **நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | | |
| ஓய்வூதிய நலன் கடப்பாடுகள் | 17 | 788,350,624 | 438,573,892 |
| பிணை வைப்புக்கள் - பணிக்குழாம் | | 63,941,048 | 60,798,982 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 7.2 | - | - |
| **மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள்** | | **852,291,672** | **499,372,874** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| வருமான வரிப் பொறுப்புக்கள் | 18 | 268,225,025 | 132,894,534 |
| வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | 19 | 966,490,894 | 764,192,145 |
| **மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **1,234,715,919** | **897,086,679** |
| **மொத்த பொறுப்புக்கள்** | | **2,087,007,591** | **1,396,459,553** |
| **மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்** | | **6,317,701,729** | **5,384,825,732** |

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பான இக்கூற்று 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் முன்வைக்கப்படடுள்ளது.

**பொது முகாமையாளர்**
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

பக்க இல 178 முதல் 184 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இல 185 முதல் 195 வரையிலான கணக்குக் குறிப்புக்கள் இக்கணக்குக் கூற்றுக்களின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும். இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் மற்றும் முன்வைக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியது. பணிப்பாளர் சபை சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது.

**தலைவர்**
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
பணிப்பாளர் சபை சார்பாக)

**பணிப்பாளர்**

திகதி : 2018.02.28

## உரிமையாண்மை மாற்றங்கள் தொடர்பிலான கூற்று

| | பங்களித்த மூலதனம் ரூபா | ஊழியர் கடன் சுழலும் நிதியம் ரூபா | வருவாய் ஒதுக்குகள் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|
| **2016 ஜனவரி 01ஆந் திகதியில் உள்ளவாறான மீதி** | **41,503,668** | **236,650,441** | **3,674,936,420** | **3,953,090,529** |
| வருடத்திற்கான இலாபம் | - | - | 86,678,961 | 86,678,961 |
| வருடத்திற்கான ஊழியர் கடன் வட்டி | - | 6,402,485 | (6,402,485) | - |
| ஏனைய விபரமான வருமானம் | - | - | (51,403,312) | (51,403,312) |
| **2017 ஜனவரி 01ஆந் திகதியில் உள்ளவாறான மீதி** | **41,503,668** | **243,052,926** | **3,703,809,584** | **3,988,366,178** |
| வருடத்திற்கான செம்மையாக்கல்கள் | - | 81,000,000 | (81,000,000) | - |
| வருடத்திற்கான இலாபம் | - | - | 565,741,554 | 565,741,554 |
| வருடத்திற்கான ஊழியர் கடன் வட்டி | - | 8,009,603 | (8,009,603) | - |
| ஏனைய விபரமான வருமானம் | - | - | (323,413,595) | (323,413,595) |
| **2017 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறான மீதி** | **41,503,668** | **332,062,529** | **3,857,127,941** | **4,230,694,138** |

## காசுப்பாய்ச்சல் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் பணப்பாய்ச்சல்** | | |
| வாடிக்கையாளர்களிடமிருந்து காசுப் பெறுகைகள் | 4,600,374,990 | 4,054,595,067 |
| வழங்குனர்களுக்கும் ஊழியர்களுக்கும் செலுத்திய காசு | (3,600,892,262) | (4,488,502,221) |
| **தொழிற்படு செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்படும் காசு** | 999,482,728 | (433,907,154) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (254,881,998) | (566,831,903) |
| திறைசேரிக்கு செலுத்திய விசேட வரி | (100,000,000) | (175,000,000) |
| **தொழிற்படு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல்/ (வெளிப்பாய்ச்சல்)** | **644,600,730** | **(1,175,739,057)** |
| | | |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் காசுப்பாய்ச்சல்** | | |
| சொத்து, பொறித்தொகுதி, உபகரணம் அமைத்தல் மற்றும் கொள்வனவு | (94,637,473) | (113,675,466) |
| உயிரியல் சொத்துக்களின் அபிவிருத்தி | (534,746) | (724,891) |
| முதலீடுகள் | (673,224,639) | 874,018,802 |
| முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானம் | 214,393,281 | 216,114,314 |
| சொத்துக்களை அகற்றுவதன் மூலம் பெற்ற தொகை | 3,718,263 | 19,256,332 |
| முதலீடுகளின்விற்பனை மூலம் பெற்ற தொகை | 30,000,000 | - |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் | (44,094,965) | 72,073,158 |
| ஊழியர் கடன் சுழல் நிதியம் | 8,009,603 | 6,397,122 |
| **முதலீட்டு நடவடிக்கைகளில் இருந்து/(பயன்படுத்திய) தேறிய காசு** | **(556,370,675)** | **1,073,459,371** |
| | | |
| **நிதி நடவடிக்கைகள் மூலம் காசுப்பாய்ச்சல்** | - | - |
| | | |
| **காசு மற்றும் அதற்கு சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு/ (குறைவு)** | **88,230,055** | **(102,279,686)** |
| | | |
| வருட ஆரம்பத்தில் காசும் காசுக்கு சமமானவையும் (குறிப்பு 14) | 258,943,959 | 361,223,645 |
| | | |
| **வருட இறுதியில் காசும் காசுக்கு சமமானவையும் (குறிப்பு 14)** | **347,174,014** | **258,943,959** |



# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

### 1.1.1 சட்ட அமைப்பு

1957 இல 49ஐக் கொண்ட அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ், 1968 ஏப்பிரல் மாதம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஒரு கூட்டுத்தாபனமாக தாபிக்கப்பட்டது.

### 1.1.2 வெளியிடுவதற்கு அதிகாரம் பெற்ற தினம்

2018.02.27 ஆந் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 2017 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

### 1.1.3 ஊழியர் எண்ணிக்கை

2017 திசெம்பர் 31ஆந் திகதியன்று கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை 2,083 ஆகும். (2016ஆம் ஆண்டில் 2,125 ஆகும்)

### 1.1.4 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு

நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் ஆகிய பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரியது.

## 1.2 முன்வைத்தற் அடிப்படை

### 1.2.1 இசைவு தொடர்பான கூற்று

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் (ஐஊயுளுடு) வெளியிடப்பட்டுள்ள விதந்துரைக்கப்பட்ட சட்டவிதிகள் மற்றும் இலங்கை கணக்கியற் நியமங்கள் (இலங்கை கணக்கியற் நியமங்கள்(டுமுயுளு) மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள(ளுடுகுசுளு)) ஆகியவற்றுக்கு இணங்க, கூட்டுத்தாபனத்தின் 2017 திசெம்பர் 31ஆந் திகதியன்று மற்றும் அக்காலப்பகுதியில் முடிவடையும் வருடத்திற்கான நிதிநிலைமைக் கூற்று, இலாப அல்லது நட்டக் கூற்று, விபரமான வருமானக்கூற்று, உரிமையாண்மையின் மாற்றங்கள், காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றுடனான குறிப்புக்கள் (□நிதிக் கூற்றுக்கள்□) தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1.2.2 மதிப்பீட்டு அடிப்படை

கிடைக்க வேண்டிய ஊழியர் கடன் மற்றும் வியாபார கடன்பட்டோர் நியாயமான பெறுமானத்தில் அளவிடப்பட்டுள்ளதுடன், அவற்றைத் தவிர ஏனைய நிதிக் கூற்றுக்கள் சரித்திர ஆகுசெலவு மரபை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

### 1.2.3 பாவனையிலுள்ள மற்றும் முன்வைத்தல் பண அலகு

நிதிக் கூற்றுக்கள் கூட்டுத்தாபன கொடுக்கல் வாங்கலில் பயன்படுத்தப்படும் பண அலகாகிய இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளது. விசேடமாகக் குறிப்பிடப்படாவிடின், அனைத்து நிதித் தகவல்களும் மிக நெருங்கிய மொத்த எண்ணைப் பயன்படுத்தி இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளன.

### 1.2.4 மதிப்பீடுகள் மற்றும் தீர்மானங்களின் பயன்

சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவினங்கள் ஆகியவற்றின் அறிக்கையிடப்பட்ட எண்ணிக்கைகள் மற்றும் கணக்கியற் கொள்கைகளைப் பிரயோகித்தல் ஆகியவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்தக் கூடிய மதிப்பீடுகள், தீர்மானங்கள், ஊகங்கள் ஆகியவற்றை முகாமை மேற்கொள்ளுதல் வேண்டும் என நிதிக் கூற்றுக்களை முன்வைத்தலின் போது வேண்டப்படுகின்றது. மதிப்பீடு மற்றும் அடிப்படை ஊகங்கள் என்பன முன்னைய அனுபவங்கள் மற்றும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் நியாயமானது என நம்பும் பல்வேறு விடயங்கள் ஆகியவற்றில் தங்கியுள்ளன. உண்மையான பெறுபேறானது, இம்மதிப்பீடுகளை விட வேறுபடலாம். மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை ஊகங்கள் தொடர்ந்து செல்லல் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். திருத்தப்பட்ட கணக்காய்வு மதிப்பீடுகள் அம்மதிப்பீடுகள் திருத்தப்பட்ட காலப்பகுதிக்கு மற்றும் அவை தாக்கத்தை ஏற்படுத்தும் எதிர்காலப்பகுதிக்கு சரிப்படுத்தப்படும்.

### 1.2.5 வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம்

வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் இலங்கை ரூபாவிற்குப் பரிவர்த்தனை செய்யப்படுவது கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற நாளில் இருக்கும் நாணயப் பெறுமதியின் அடிப்படையிலேயாகும்.

## 1.2.6 வரி அறவிடல்

வருமான வரிக்கான ஏற்பாடு 2006 இல 10ஐக ்கொண்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின ்பிரமாணங்களுக்கும் பிற்காலத்தில் திருத்தஞ் செய்யப்பட்டவைக்கும் இணங்க கணக்கிடப்படுவதுடன் கணக்குக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வருமானங்கள் மற்றும் செலவினங்களின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

## 1.3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் முன்வைக்கப்பட்ட இந்நிதிக் கூற்றுக்களில் எல்லா காலப்பிரிவிற்குளளும் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

### 1.3.1 சொத்துக்கள் மற்றும் மதிப்பீட்டு அடிப்படை

#### 1.3.1.1 சொத்துக்கள், பொறித்தொகுதிகள்,உபகரணங்கள்

##### 1.3.1.1.1 இனங்காணும் அடிப்படை

சொத்துக்கள், பொறித்தொகுதிகள்,உபகரணங்கள் என்பன எதிர்காலத்தில் சொத்து தொடர்பிலான பொருளாதார நன்மைகள் கூட்டுத்தாபனத்தினுள் உட்பாயும் என்பதும் சொத்தின் கிரயம் நம்பகரமாக அளவிடப்பட முடியும் என்பதும் சாத்தியமாகும் போது இனங்காணப்படும். சொத்துக்கள், பொறித்தொகுதிகள்,உபகரணங்கள் அகியவற்றின் உருப்படிகள் திரண்ட தேய்மானத்தையும் சேதத்துக்குள்ளான பெறுமதி இழப்பினையும் கழித்து கிரயத்தில் குறிக்கப்படும். சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது, அதற்கு நேரடியாகச் செலவாகிய செலவினங்கள் மற்றும் சொத்தினை அதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டிற்கான தொழிற்படும் நிலைமைக்கு கொண்டுவர நேரடியாக ஏற்படும் யாதாயினும் ஏனைய ஆகுசெலவுகள் மற்றும் மூலதனமாக்கப்பட்ட கடன்வாஙடகல கிரயம் மற்றும் அவை அமைந்துள்ள தளத்தினை மீளமைத்தல் மற்றும் உருப்படிகளை நீக்குதல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றின் கிரயம் என்பன கிரயத்தில் உள்ளடங்கும்.

சொத்துக்கள் பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றினஓர் உருப்படியின் பாகங்கள் பல்வேறு பயன்மிகு நீடித்த ஆயுட்காலத்தினைக் கொண்டிருக்கும் போது அவை சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றின் பிரத்தியேகமான உருப்படிகளாகக் (பிரதான உருப்படிகளாக) கணக்கில் வைக்கப்படும்.

##### 1.3.1.1..2 அகற்றுகை மீதான இலாபங்கள்ஃ நட்டங்கள்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றின் ஓர் உருப்படியின் அகற்றுகை மீதான இலாபங்கள் மற்றும் நட்டங்கள் சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றின் காவுகைத் தொகையுடன் அகற்றுகை மூலம் பெறும் வருவாயுடன் ஒப்பிட்டு தீர்மானிக்கப்படுவதுடன், இலாப நட்டக் கூற்றில் □ஏனைய வருமானங்கள்.'.ஏனைய செலவினங்களுக்குள்□ தேறியதாக இனங்காணப்படும்.

##### 1.3.1.1.3 பின்தொடரும் கிரயங்கள்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் ஓர் உருப்படியின் ஒரு பகுதியைப் பதிலீடு செயவதன் கிரயம், அப்பகுதியில் உள்ளடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் கூட்டுத்தாபனத்தினுள் உட்பாயும் என்றும் அதன் கிரயம் நம்பகரமாக அளவிட முடியும் எனவும் சாத்தியமாக இருப்பின் காவுகைத் தொகையில் இனங்காணப்படும். பதிலீடு செய்யப்பட்ட பகுதியின் காவுகைத் தொகையினை இனங்காண்பது நிறுத்தப்படும். சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் அன்றாட பராமரிப்புக் கிரயங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

##### 1.31.1.4 இனங்காண்பதை நிறுத்துதல்

சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் ஓர் உருப்படியின் காவுகைத் தொகை, அகற்றுகையில் அல்லது அதன் பாவனையில் அல்லது அகற்றுகையில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் இல்லாத போது இனங்காண்பது நிறுத்தப்படும். சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் உருப்படியொன்றினை இனங்காணப்பதை நிறுத்துவதால்



ஏற்படும் இலாபமோ அல்லது நட்டமோ அவ்வுருப்படியை இனங்காணப்பது நிறுத்தப்படும் போது இலாபத்தில் அல்லது நட்டத்தில் உள்ளடக்கப்படும்.

##### 1.3.1.1.5 பெறுமானத் தேய்வு

சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பனவற்றின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பிடப்பட்ட பயன்மிக்க ஆயுட்காலம் முழுதும் நேர்கோட்டு அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் பெறுமானத் தேய்வு இனங்காணப்படும். இறையில் காணி தேய்மானதத்திற்கு உட்படாது. உரிய வீதங்கள் கீழ்வருமாறு.

| | |
|---|---|
| **நிலையான கட்டடங்கள்** | 2.5% |
| **பகுதி நிலையான கட்டடங்கள்** | 30.0% |
| **இயந்திரோபகரணங்கள்** | 10.0% |
| **வாகனங்கள்** | 20.0% |
| **பாதைகள் மற்றும் புகையிரத பாதைகள்** | 5.0% |
| **குத்தகை நிலங்கள்** | 5.0% |
| **பாதைகள் அமைத்தல்** | 10.0% |
| **தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள்** | 15.0% |
| **அலுவலக உபகரணங்கள்** | 15.0% |
| **பல்வேறு சொத்துக்கள்** | 20.0% |
| **கணினிகள்** | 20.0% |
| **மின் உபகரணங்கள்** | 10.0% |
| **கருவிகள் மற்றும் உபகரணங்கள்** | 20.0% |
| **காணி அபிவிருத்தி** | 10.0% |

### 1.3.1.2 பூர்த்தியடையா மூலதன வேலைகள்

நிதி நிலைமைக் கூற்றுத் திகதியில் பூர்த்திசெய்யாத வருடத்தினுள் ஏற்பட்ட மூலதனச் செலவினங்கள் முடிவுறா மூலதன வேலைகள் எனக் காட்டப்பட்டுள்ளதுடன், வருடத்தினுள் வேலை பூர்த்தியாகி பாவனைக்குப் பொருத்தமான நிலைக்கு வந்த மூலதனச் சொத்துக்களாவன சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்களின் கீழ் மாற்றப்படும்.

### 1.3.1.3 அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்தொன்று அதன் கிரயத்தை நம்பகமான முறையில் கணிப்பிட முயுமாயின் மற்றும் அதன் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் சாத்தியம் காணப்படும் எனின் மாத்திரம் இனங்காணப்படும். அருவச் சொத்துக்கள் கணினி மென்பொருளினையே முழுமையாகக் கொண்டுள்ளன. கையகப்படுத்தப்பட்ட அருவச் சொத்துக்கள் கிரயத்தின் ஆரம்ப இனங்காணலின் மீது அளவிடப்படும். அருவச் சொத்துக்கள் ஆகுசெலவிலிருந்து திரண்ட தேய்மானத்தையும் சேதத்திற்குள்ளான திரண்ட பெறுமதியையும் கழித்து கணிப்பிடப்பட்டுள்ளன. பின்னர் மேற்கொள்ளப்பட்ட செலவு அதன் மூலம் எதிர்கால பொருளாதார நன்மைகள் அதிகரிக்கும் போது மாத்திரமே மூலதனமாக்கப்படும். கடன்கரைப்பு நேர்கோட்டு அடிப்படையில் மதிப்பிடப்பட்டு ஐந்து வருட ஆயுட்கால முழுதும் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்படும்.

### 1.3.1.4 உயிரியல் சார் சொத்துக்கள்

உயிரியல் சார் சொத்துக்கள் முதிர்ந்த உயிரியல் சார் சொத்துக்கள் எனவும் முதிர்ச்சியடையா உயிரியல் சொத்துக்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. விளைச்சலை அறுவடை செய்யும் மட்டத்தில் காணப்படுபவை அல்லது எப்போதும் விளைச்சலை பெற்றுக்கொள்ளும் நிலைமையில் இருப்பவையே முதிர்ந்த உயிரியல் சார் சொத்துக்கள் எனப்படுகிறது. விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடிந்த நிலைமையை அடையாமல் இருப்பவை முதிர்ச்சியடையா உயிரியல் சார் சொத்துக்கள் எனப்படுகிறது.

மேலும், உயிரியல்சார் சொத்துக்கள் விளைச்சல் கிடைக்கும் உயிரியல் சார் சொத்துக்கள் எனவும் நுகரும் உயிரியல் சார் சொத்துக்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. விளைச்சலைத் தரும் உயிரியல் சார் சொத்துக்கள் விற்பனைக்காகவும் அல்லது அறுவடை செய்வதற்காகவும் வைத்துக்கொள்ளாதவை என்பதுடன், அவை விவசாய உற்பத்திகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பயன்படுத்தப்படும். நுகரும் உயிரியல் சார் சொத்துக்கள் வகைக்கு அரிமரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் கட்டுப்படுத்தப்படும் மரங்களும் உயிரியல்சார் சொத்துக்களினால் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளும் விவசாய உற்பத்திகளும் உயிரியல்சார் சொத்துக்களாக விற்பனை செய்யப்படுபவை உள்ளடங்குகின்றன. கடந்த கால சம்பவத்தின் பெறுபேறாகக் கூட்டுத்தாபனம் அவற்றைத் தற்காலத்தில் கட்டுப்படுத்தும் போது அவ்வுருபடிகளுடன் பிணைந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்தினுள்

உட்பாயும் மற்றும் சொத்துக்களின் நியாயமான பெறுமதி அல்லது கிரயத்தினை நம்பகமான விதத்தில் அளவிட முடியுமாகும் என்பது சாத்தியமாகுமெனின் உயிரியல் சார் சொத்துக்களை நிறுவனம் இனங்காணும். தேக்கு மரமொன்று முதிர்ச்சியடையும் காலம் கன்றினை நட்ட நாளிலிருந்து 35 வருடங்கள் வரையிலான காலம் எடுக்கும். ஒரு தேக்கு மரத்தின் விஞ்ஞான ரீதியான வளர்ச்சி அதனை நட்ட நாளிலிருந்து 10 வருட காலப்பகுதி எடுக்கும் என்பது அனுமானிக்கப்பட்டுள்ளது. உயிரியல்சார் வளர்ச்சிக்கு இக்காலப்பகுதியினுள் மேற்கொள்ள வேண்டிய செலவினம் போதியதாக இன்மையால், இளம் பயிர்களின் ஆகுசெலவு அவற்றின் நியாயமான பெறுமதிக்குச் சமமாகும் எனக் கருதப்படும்.

அரிமரங்களைப் பெறுவதற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ள மரங்களை முதன்முதலில் இனங்காண்பதுடன், எல்லா அறிக்கையிடும் காலப்பகுதி இறுதியிலும் இலங்கை கணக்கியற் கூற்றுக்கள் 41இன் பிரகாரம் அவற்றை நியாயமான பெறுமதியில் விற்பனை செய்வதற்கு ஏற்படும் ஆகுசெலவினைக் கழித்த பின்னர் கிடைக்கும் பெறுமானத்திற்கு அளவிடப்படும்.

### 1.3.1.5 நிதிசார் உபகரணங்கள்

#### 1.3.1.5.1 வழிவரா நிதிசார் சொத்துக்கள்

கூட்டுத்தாபனத்தினால் முதலில் கடன் தொகை, கிடைக்க வேண்டிய தொகை மற்றும் வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட திகதியின் அடிப்படையில் இனங்காணல் மேற்கொள்ளப்படும். ஏனைய எல்லா நிதிசார் சொத்துக்களும் (இலாபம் மற்றும் நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பெயர் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் உட்பட) கூட்டுத்தாபனம் ஒப்பந்த ஒழுங்குவிதிகளுக்கு அமைய ஒரு தரப்பாக ஆகிய கொடுக்கல் வாங்கல் மேற்கொண்ட திகதியின் அடிப்படையில் இனங்காணல் மேற்கொள்ளப்படும். சொத்துக்கள் முதிர்வடைகையில், காசுப் பாய்ச்சலிற்காக உள்ள ஒப்பந்த உரிமைகளின் மீது கூட்டுத்தாபனம் சொத்துக்களை மீண்டும் இனங்காணுதல் அல்லது நிதிசார் கொடுக்கல் வாங்கல்களின் போது சொத்துக்களுக்குரிய ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் கிடைக்க வேண்டிய உரிமையுடன் கவனத்திற் கொள்ள வேண்டிய எல்லா இடர்களும் மாற்றப்படும்.

##### 1.3.1.5.1.1 கடன்கள் மற்றும் கிடைக்க வேண்டியவை

நிலையான அல்லது தீர்மானிக்க இயலுமான கொடுப்பனவுடனான செயற்படு சந்தையிலிருந்து பிரித்தெடுக்க முடியாத நிதிசார் சொத்துக்கள் கடன் மற்றும் கிடைப்பனவுகளாகும். இச்சொத்துக்கள் நியாயமான பெறுமானத்தில் அதற்குரிய யாதாயினும் நேரடி கொடுக்கல் வாங்கல் செலவுகளைக் கூட்டி ஆரம்பத்தில் இனங்காணப்படும். ஆரம்ப இனங்காணலைத் தொடர்ந்து கடனைச் சேதப்படுத்தும் நட்டங்களை அகற்றிய பின் விளைபயன் மிகு வட்டி முறையைப் பிரயோகித்து கடன் கரைப்புக் கிரயத்தில் கடன்களும் கிடைப்பனவுகளும் அளவிடப்படும். கடன்கள் மற்றும் கிடைப்பனவுகள் வியாபார மற்றும் வியாபாரமற்ற கிடைப்பனவுகளைக் கொண்டுள்ளதுடன், ஊழியர் கடன்களும் உள்ளடங்கும். காசு மற்றும் காசுக்கு சமமான சொத்துக்கள் காசு மீதிகளையும் அழைப்பு வைப்புக்களையும் கொண்டுள்ளதுடன், அழைப்பு வைப்புக்கள் உள்ளடக்கப்படுவது காசுப் பாய்ச்சல் கூற்றினை நோக்காகக் கொண்டாகும்.

### 1.3.1.6 முதலீடுகள்

#### 1.3.1.6.1 ஆகுசெலவினில் குறிப்பிடப் பட்ட நிலையான வைப்புக்களில் முதலீடு

#### 1.3.1.6.2 ஆகுசெலவினில் குறிப்பிடப்பட்ட நீண்டகால முதலீடு

#### 1.3.1.6.3 அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் முதலீடுகள்

இம்முதலீடுகள் அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு வீட்டுக் கடன் வசதிகளை வழங்குவதற்காக அரச ஈட்டு முதலீட்டு வங்கியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



#### 1.3.1.6.4 பெறுமானத் தேய்வு

பெறுமதி இழப்பிற்கான விடய சான்றுகள் இருக்கின்றதா என உறுதிப்படுத்துவதற்கு இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் ஒரு நிதிச் சொத்து ஒவ்வொரு அறிக்கையிடும் தினத்தில் மதிப்பீடு செய்யப்படும். சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் ஏற்பட்ட இழப்பு நிகழ்வினை விடய சான்று குறிக்குமாயின் மற்றும் நம்பகரமாக மதிப்பிடக் கூடிய சொத்தின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்ச்சல் மீது நேர்மறையான தாக்கத்தினை அவ்விழப்பு நிகழ்வு கொண்டிருப்பின் நிதிச் சொத்தொன்று பெறுமானத் தேய்வடையும்.

### 1.3.1.7 வியாபார இருப்புக்கள்

இருப்புக்கள், ஆகுசெலவு அல்லது தேறிய பணமாகும் பெறுமானம் ஆகிய இரண்டையும் விடக் குறைந்த் பெறுமானத்திலேயே அளவிடப்படுகின்றன. அன்பளிப்பு செய்யப்பட்ட அரிமர இருப்புக்களும், ஆகுசெலவு (இருப்பு தற்போதைய இடத்திற்கு மற்றும் தற்போதைய நிலைக்கு கொண்டு வருவதற்கு ஏற்பட்ட ஆகுசெலவு) அல்லது தேறிய பணமாகும் பெறுமானம் ஆகிய இரண்டையும் விடக் குறைந்த் பெறுமானத்தில் அளவிடப்படும். தேறிய பணமாகும் பெறுமானம் என்பது மதிப்பிடப்பட்ட பூர்த்திசெய்தல் கிரயம் மற்றும் விற்பனைச் செலவினங்களைக் கழித்து சாதாரண வர்த்தக நடவடிக்கைகளில் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையாகும். முதலில் பெறுதல் முதலில் வழங்குதல் என்ற அடிப்படையிலேயே ஆகுசெலவு முடிவு செய்யப்படுவதுடன், இருப்புக்களைத் தற்போதைய இடத்திற்கு மற்றும் நிலைக்கு கொண்டு வருவதற்காக ஏற்படும் அனைத்துச் செலவினங்களும் ஆகுசெலவிற்குள் அடங்கும். உற்பத்தி சம்பந்தமான ஆகுசெலவிற்குள் அனைத்து நேரடிசெலவுகளும் சாதாரண செயற்பாட்டு மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி மேந்தலைச் செலவுகளும் அடங்கும். தேவையான சந்தர்ப்பங்களில் காலங் கடந்த, மந்தமான நிலையில் விற்பனையாகும் அல்லது தரங்குறைந்த இருப்புக்களுக்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இருப்புக்கள் சேதத்திற்குள்ளாவதற்கு 15மூ சாதாரண ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது.

## 1.3.2 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ், கோரியவுடன் செலுத்தவேண்டிய கொடுப்பனவுகள் அல்லது நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் அடங்குகின்றன. நடைமுறையற்ற பொறுப்புக்களாவன நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருடத்தை விடக் கூடுதலான காலத்தினுள் செலுத்த வேண்டிய பணமாகும். நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் அனைத்து பொறுப்புக்களும் கணக்கு வைக்கப்பட்டுள்ளன.

### 1.3.2.1 வியாபார மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவை

வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் அவற்றின் கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 1.3.2.2 ஓய்வூதியப் பணிக்கொடைக் கடப்பாடு

1983, 12ஆம் இலக்கத்தைக் கொண்ட ஓய்வூதியப் பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம் தொடர்ச்சியாக 05 வருடத்தை விடக் கூடுதலான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருக்கும் ஊழியர்கள் ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற உரித்துடையவராவர். எனினும் அனைத்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்காகவும் 2017 திசெம்பர் 31ஆந் திகதியுடன் பூர்த்தி செய்துள்ள சேவைக்காலம் மற்றும் இறுதியாகப் பெற்ற சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிக்கப்பட்ட நலன் கடப்பாடு சூத்திர முறையினைப் பயன்படுத்தி வருடாந்தம் கணிக்கப்படுகின்றது.

### 1.3.2.3 ஏற்பாடுகள், எதிர்பாரா சொத்துக்கள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்

கடந்தகால சம்பவமொன்றின் பிரதிபலனாக, தற்போது நம்பிக்கையாக மதிப்பிடக்கூடிய சட்டரீயான அல்லது நியாயப்படுத்தக்கூடிய பொறுப்பொன்று கூட்டுத்தாபனத்திற்கு இருப்பின் மற்றும் அப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு பொருளாதார நன்மைகள் தேவைப்படும் என்பது சாத்தியமாகும் எனின் மாத்திரம் கூட்டுத்தாபனத்தினால் ஏற்பாடுகள் இனங்காணப்படும்.

அளவிடப்படக் கூடிய அனைத்து பொறுப்புக்களுக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ள்பட்டுள்ளதுடன், ஏனையவை தெரிவிக்கப்பட்டுள்ளன.

பொகவந்தலாவை செப்பல்ரன் வர்த்தக மெல்லியதாக்கல் காணிப் பரப்பில் அனுமதியின்றி மரங்களை வெட்டுவதால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக வனப் பாதுகாப்பு ஜெனரால் அவர்கள் எமக்கு அறிவித்துள்ளார். விசாரணைகளின் போது வெளியாகியுள்ள சில விடயங்களின் காரணமாக இன்னும் உறுதியான முடிவொன்றை எடுக்க முடியாதாதுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுடன் ஒன்று சேர்ந்து இவ்விடயம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என வன பாதுகாப்பு ஜெனரல் தீர்மானித்துள்ளார்.

வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் அரசாங்க மரக் கூட்டுத்தாகனத்திற்கு எதிராக தெஹிஅத்தகண்டிய நீதவான் நீதிமன்றத்தில் ரம்பகென்ஓய நீர்த்தேக்கத்திற்கு முழ்கடிக்கப்படும் நிலப்பரப்பில் அரிமரங்களை அகற்றுகையில் ஏற்பட்ட முறைகேடுகள் காரணமாக “பீ” அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களம் என்பன ஒரே அமைச்சின் கீழ் இருப்பதனால், இவ்விரு அரச நிறுவனங்களும் பரய்பரத் தீர்வொன்றினைப் பரிந்துரைத்து அதன்படி நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளோம். தீர்வொன்றிற்கு வர சட்டமா அதிபரின் ஆலோசனையினைப் பெறுமாறு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2006 முதல் 2012 வரையிலான காலப்பகுதியில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்தின் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்புத் தொகையினைக் கணக்கிடும் போது வாழ்கைச் செலவுகள் கவனத்திற் கொள்ளப்படவில்லை எனக் குறிப்பிட்டு தொழில் திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வாழ்க்கைச் செலவு கொடுப்பனவின் 15மூஇற்கு சமமான தொகையினையும் அத்தொகைக்கான தண்டக் கட்டணத்தினையும் ஏற்கனவே அனுப்பியுள்ளது. ஊழியர்களிடமிருந்து அறிவிடாத 10மூ இற்குச் சமமான தொகையான ஊழியர் பங்களிப்பு சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வர தொழில் திணைக்களம் மற்றும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கலந்துரையாடி வருகின்றன.

இலங்கை வங்கி நிலையான வைப்புக் கணக்கு இல: 77777554, 77902580, 79747063 ஆகியவற்றிற்கு எதிராக வங்கி முறிகள் வழங்கப்பட்டுள்ளன.

வேலை இடைநிறுத்தஞ் செய்யப்பட்ட அலுவலர் சம்பந்தமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள முறைபாடு தொடர்பில் தொழில் ஆணையாளரின் வேண்டுகோளின் பிரகாரம் 1,957,174.∴- ரூபா தொகை சம்பள நிலுவையாகச் செலுத்தும்படி செய்த கோரிக்கை பணிப்பாளர் சபையினால் நிராகரிக்கப்பட்டு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் தொழிலாளர் நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 1.3.3. வருமானங்களை இனங்காணல்

வருமானமானது அதன் மூலம் கூட்டுத்தாபனத்திற்கு பொருளாதார நன்மைகள் உட்பாயும் எனவும் வருவாய் மற்றும் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொள்ளப்பட இருக்கும் சம்பந்தப்பட்ட கிரயங்கள் ஆகியவற்றை நம்பகமான முறையில் அளவிட முடியும் எனவும் சாத்தியப்படும் போது இனங் காணப்படுகின்றது. கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய தொகை, தேறிய திரும்பல்கள் மற்றும் உதவுதொகைகள், வர்த்தகக் கழிவுகள் மற்றும் தொகை அளவுகளுக்காகக் கொடுத்த சலுகை ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு நியாயமான பெறுமதியின் அடிப்படையில் பொருட்களை மூலம் கிடைத்த வருமானம் கணிப்பிடப்பட்டுள்ளது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் ஊழியர்களுக்கு 25மூ சலுகை விலையில் அரிமரங்கள் வழங்கப்படுகின்றன. இது நலன்புரி வசதிகள் கணக்கில் உள்ளடக்கப்படுகின்றது.

### 1.3.3.1 பொருட்கள் விற்பனை

பொருட்கள் விற்பனை வருமானம் அப்பொருட்களின் உரிமை, இடர்கள் மற்றும் நன்மைகள் பொருளைக் கொள்வனவு செய்தவருக்கு சாட்டப்படும் சந்தர்ப்பத்தில் பொதுவாகப் பொருட்களை விநியோகிக்கையில் இனங்காணப்படுகின்றது.

### 1.3.3.2 வாடகை வருமானம்

சேர் அடிப்படையில் வாடகை வருமானம் இனங்காணப்படுகின்றது.

## 1.3.4 செலவினங்களை இனங்காணல்

வருடத்திற்குள் கிடைத்திருக்கும் இலாபத்தைக் கணக்கிடுகையில் வருடத்திற்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செலவிடப்பட்ட அனைத்து செலவினங்களும் வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டுள்ளன. சீர்ப்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் ஆகியவற்றுக்குரிய செலவினங்கள் அவை நிகழ்ந்த வருடத்தில் விபரமான வருமானக்கூற்றில் கணக்கு வைக்கப்பட்டுள்ளன.



### 1.3.4.1 வருமான வரி

வருமான வரி நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளைக் கொண்டது. உரிமையாண்மை அல்லது வேறு விபரமான வருமானங்களில் நேரடியாக இனங் காணப்படும் உருப்படிகள் தொடர்பிலான அளவினைத் தவிர நடைமுறை வரி மற்றும் பிற்போடப்பட்ட வரிச் செலவுகள் இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங் காணப்படும்.

அறிக்கையிடும் தினத்தில் நடைமுறையில் இருக்கும் அல்லது ப்ன்னர் நடைமுறைக்கு வந்த வரி வீதங்களை மற்றும் கடந்த வருடங்கள் பொறுத்தவரை யாதாயினும் செலுத்தவேண்டிய வரிக்கான சீராக்கலைப் பயன்படுத்தி, வருடத்திற்கான வரி விதிக்கக்கூடிய வருமானம் அல்லது நட்டங்கள் மீதான எதிர்பார்க்கப்பட்ட செலுத்த வேண்டிய அல்லது கிடைக்கவேண்டிய வரியே நடப்பு வரி எனக் கொள்ளப்படுகின்றது.

நடைமுறை வருமான வரி வீதம் 28மூ ஆவதுடன், உத்தேசிக்கப்பட்ட பங்கிலாப வரி வீதம் 25மூ ஆகும்.

நிதி அறிக்கையிடுதல் நோக்கங்களுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் காவுகைத் தொகைக்கும் வரியிடல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்திய தொகைக்கும் இடையில் தற்காலிக வித்தியாசத்தைப் பெற்றுக்கொள்வதற்கு பொறுப்புக்கள ˙முறைமையினைப் பயன்படுத்தி பிற்போடப்பட்ட வரித் தொகைக் கணக்கிடப்படும். கணக்கிடப்பட்ட பிற்போடப்பட்ட வரித்தொகை நிதி நிலைமைக்கூற்று தினத்தில் நடைமுறையில் இருக்கும் அல்லது அதற்குப் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட வரி வீதத்தினைப் பயன்படுத்தி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் காவுகைத் தொகையின் எதிர்பார்க்கப்பட்ட பணமாதல் அல்லது தீர்த்தல் விதத்தினை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

எதிர்கால சொத்துக்களில் நுகரக்கூடிய பெறுமதிக்கு எதிராக எதிர்காலத்தில் வரி இலாபத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக சாத்தியப்பாடு காணப்படின், அத்தொகைக்கு மாத்திரம் பிற்போடப்பட்ட வரிச்சொத்து இனங்காணப்படும். சொத்துக்குரிய வரி வருவாயை மேலும் பெற்றுக் கொள்வதற்கு முடியாதெனின், அத்தொகைக்கு பிற்போடப்பட்ட வரிச் சொத்து பெறுமதி இறக்கஞ் செய்யப்படும்.

### 1.3.4.2 உரிமைப்பங்குக் கொடுப்பனவு

2017 ஆம் வருடத்திற்கான உரிமைப்பங்க் கொடுப்பனவு உண்மையான வெட்டப்பட்ட அரிமரக் கனவளவு அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

### 1.3.4.3 செலவு ஒதுக்கீடு

அரிமர ஆகுசெலவு மற்றும் அரிவாலைகளின் செலவு மாற்றம் என்பன மர இடமாற்றப் பெறுமதியின் அடிப்படையில் ஒதுக்கப்படுவதுடன், உரிய அலகுகளுக்கு எடுத்துச்செல்லும் வாடகைப் பெறுமானத்தின் அடிப்படையில் இயந்திரப் பட்டறையின் ஆகுசெலவு ஒதுக்கப்படும்.

## 1.3.5 நிதி நிலைமைக் கூற்றுத் தினத்திற்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதி நிலைமைக் கூற்று தயாரித்த தினத்திற்கு பின்னர் குறிப்பிடத்தக்க அனைத்து நிகழ்வுகளையும் கவனத்திற் கொண்டு, நிதிக் கூற்றுக்களில் உரிய குறிப்பின் கீழ் பொருத்தமான செம்மைப்படுத்தல் அல்லது வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டன.

## 1.3.6 ஊழியர் கடன் சுழல் நிதியம்

இந்நிதியம் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு கடன் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஊழியர் கடன்களில் இருந்து கிடைக்கப் பெறும் வட்டித் தொகை ஏனைய வருமானங்களின் கீழ் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரியின் பின்னர் கிடைக்கப் பெற்ற வட்டி வருமானம் ஊழியர் கடன் சுழல் நிதியத்தினைக் கட்டியெழுப்புவதற்கு அந்நிதியத்திற்கு மாற்றப்படும். கடனைப் பெற்றுக்கொடுப்பது ஊழியர் கடன் சுழல் நிதியத்தில் உள்ள பணத்தொகையின் அளவில் மட்டுப்படுத்தப்படும்.

## 1.3.7 பணப்பாய்ச்சல் கூற்று

பணப்பாய்ச்சல் கூற்று தொடர்பான இலங்கைக் கணக்கியற் கொள்கை 07இன் பிரகாரம் நேரடி முறையைப் பயன்படுத்தி பணப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. பணம் மற்றும் பணத்திற்கு சமமான சொத்துக்களின் பெறுமதி மாற்றங்களிலான அபாயத்தின் கீழ் விரைவாகப் பணமாக மாற்றிக் கொள்ளக் கூடிய உயர் திரவத்தன்மைமிக்க குறுங்கால முதலீடுகள் உள்ளடங்கும். பணம் மற்றும் பணத்திற்குச் சமமான சொத்துக்களில் கையிலிருக்கும் பணமீதி, வங்கிமீதி, வங்கிகளில் உள்ள குறுங்கால வைப்புக்கள் உள்ளடங்கும்.

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

| 02. விற்பனைப் புரள்வு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| குற்றிகள் - அரசாங்க காணிகள் | 2,775,603,532 | 2,560,718,285 |
| குற்றிகள் - தனியார் காணிகள் | 33,237,974 | 85,657,810 |
| மரத்துண்டங்கள் | 207,698,281 | 196,750,255 |
| இறக்குமதி செய்யப்பட்ட மரத்துண்டங்கள் | 48,620,691 | 26,226,922 |
| சிலீப்பர்கள் - தனியார் காணிகள் | 91,685,336 | 136,725,089 |
| சிலீப்பர்கள் - அரசாங்க காணிகள் | 41,654,406 | 150,758,501 |
| சிலீப்பர்கள் - ஏற்றுமதி | 1,138,372 | 3,871,012 |
| மின் கம்பங்கள் - அரசாங்க காணிகள் | 136,382,640 | 258,375,810 |
| மின்கம்பங்கள் - தனியார் காணிகள் | 36,313,002 | 67,386,081 |
| யானை வேலிக் கம்பங்கள் | 75,465,961 | 124,695,886 |
| ஏனையவை | 19,181,410 | 27,611,426 |
| சட்டரீதியற்ற காட்டு அரிமரங்கள் | 78,284,437 | 60,472,984 |
| அன்பளிப்பு செய்த அரிமரங்கள் | 405,112,249 | 294,699,866 |
| தளபாடங்கள் | 389,044,488 | 304,814,376 |
| **மொத்த விற்பனைப் புரள்வு** | **4,339,422,777** | **4,298,764,303** |
| கழிக்க: நாட்டைக் கட்டியெழுப்பவதற்கான வரி | (85,648,511) | (84,808,619) |
| **தேறிய விற்பனைப் புரள்வு** | **4,253,774,266** | **4,213,955,684** |

| 03. விற்பனைச் செலவு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| பண்டகசாலைகள், சாலை டிப்போக்கள் | 1,205,030,916 | 971,728,339 |
| அரிமரப் பரிகரிப்பு நிலையங்கள் | 347,215,178 | 593,694,002 |
| தளபாடப் பொறித் தொகுதிகள் | 268,939,817 | 235,284,197 |
| சாலை விற்பனைகள் | 356,638,294 | 368,158,873 |
| **கூட்டுத்தொகை** | **2,177,824,205** | **2,168,865,411** |

| 04. விற்பனை மற்றும் விநியோகச் செலவினங்கள் | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| பண்டகசாலைகள் | 616,166,666 | 675,189,054 |
| அரிமரப் பரிகரிப்பு நிலையங்கள் | 13,434,188 | 35,492,820 |
| தளபாடப் பொறித் தொகுதிகள் | 40,567,396 | 42,387,655 |
| பிராந்திய முகாமையாளர் அலுவலகம், பிரதான அலுவலகம் | 10,449,520 | 12,954,305 |
| **கூட்டுத்தொகை** | **680,617,770** | **766,023,834** |

| 05. நிர்வாகச் செலவினங்கள் | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| அரிமரப் பரிகரிப்பு நிலையங்கள் | 20,425,440 | 20,188,525 |
| தளபாடப் பொறித் தொகுதிகள் | 71,971,576 | 71,496,095 |
| பிராந்திய முகாமையாளர் அலுவலகம், பிரதான அலுவலகம் | 706,407,258 | 828,343,591 |
| உல்லாச பங்களா | 6,667,018 | 7,588,299 |
| **கூட்டுத்தொகை** | **805,471,293** | **927,616,510** |

| 06. ஏனைய வருமானங்கள் | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **6.1 தொழிற்படா வருமானம் 6.1** | | |
| வட்டி வருமானம் - முதலீடுகள் | 246,148,133 | 187,857,600 |
| வெளிநாட்டு நாணயமாற்றம் இலாபங்கள் | 4,091 | 7,356 |
| வீட்டு வாடகை | 13,060,102 | 15,493,131 |
| ஊழியர் கடன் வட்டி | 14,567,524 | 13,080,754 |
| | **273,779,849** | **216,438,841** |
| **6.2 தொழிற்படு வருமானம் 6.2** | | |
| நானாவித வருமானங்கள் | 62,725,858 | 49,507,982 |
| தண்டப்பணம்- ஒப்பந்தக்காரர் மற்றும் வழங்குனர் | 800,692 | 759,032 |
| அகற்றுகை வருமானம் | 3,015,776 | 19,195,783 |
| இருப்புக்களின் மேலதிக ஒதுக்குகள் | 14,410,259 | 17,258,585 |
| ஐயப்பாடான கடன் மேலதிக ஒதுக்கீடுகள் | 18,442,082 | 1,636,568 |
| பழுதுகள் மற்றும் இழப்புகளுக்கான அறவீடுகள் | 1,159,228 | 2,086,333 |
| மீளச் செலுத்தாத விலைமனு வைப்புக்கள் | 2,609,617 | 1,399,181 |
| | **103,163,513** | **91,843,464** |
| **கூட்டுத்தொகை** | **376,943,362** | **308,282,305** |

## 6.3 2017ஆம் ஆண்டிற்கான ஏனைய வருமானங்களின் பகுப்பாய்வு

| வருமான மூலங்கள் | அலகுகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பண்டகசாலைகள் | அரிமரப் பரிகரிப்பு நிலையங்கள் | தளபாட பொறித் தொகுதிகள் | பிராந்திய அலுவலகம், பிரதான அலுவலகம் | உல்லாச பங்களா | மொத்தம் |
| **தொழிற்படா வருமானம் 6.1** | | | | | | |
| வட்டி வருமானம் - முதலீடுகள | - | - | - | 246,148,133 | - | 246,148,133 |
| வெளிநாட்டு நாணயமாற்று இலாபங்கள் | - | - | - | 4,091 | - | 4,091 |
| வீட்டு வாடகை | - | - | 44,000 | 13,016,102 | - | 13,060,102 |
| ஏற்பாடுகளுக்கு மேற்பட்ட பணிக்கொடை | | | | - | - | - |
| ஊழியர் கடன் வட்டி | - | - | - | 14,567,524 | - | 14,567,524 |
| | **-** | **-** | **44,000** | **273,735,849** | **-** | **273,779,849** |
| **தொழிற்படு வருமானம் 6.2** | | | | | | |
| நானாவித வருமானங்கள் | 5,138,851 | - | 963 | 56,539,498 | 1,046,545 | 62,725,858 |
| தண்டப்பணம்- ஒப்பந்தக்காரர், வழங்குனர் | - | - | - | 800,692 | - | 800,692 |
| அகற்றுகை வருமானம் | - | - | - | 3,015,776 | - | 3,015,776 |
| இருப்புக்கள் சேதத்திற்கான மேலதிக ஒதுக்குகள் | 14,328,635 | - | 81,624 | - | - | 14,410,259 |
| ஐயப்பாடான கடன் மேலதிக ஒதுக்கீடுகள் | 3,496,589 | 14,945,494 | - | - | - | 18,442,082 |
| பழுதுகள் மற்றும் இழப்புகளுக்கான அறவீடுகள் | - | - | - | 1,159,228 | - | 1,159,228 |
| மீளச் செலுத்தாத விலைமனு வைப்புக்கள் | - | - | - | 2,609,617 | - | 2,609,617 |
| | **22,964,075** | **14,945,494** | **82,587** | **64,124,812** | **1,046,545** | **103,163,513** |
| **கூட்டுத்தொகை** | **22,964,075** | **14,945,494** | **126,587** | **337,860,661** | **1,046,545** | **376,943,362** |



| **07 வரியிடல் செலவினங்கள்** | **2017** ரூபா | **2016** ரூபா |
|---|---|---|
| | | |
| **நடப்பு வரிச் செலவினங்கள்** | | |
| வருடத்திற்கான வருமான வரி மீதான இலாபம் குறிப்பு 7.1 | 390,212,803 | 247,475,962 |
| முன்னைய ஆண்டிற்கான மேலதிக /குறை ஒதுக்கீடு | (314) | 160,763,556 |
| | **390,212,489** | **408,239,518** |
| **பிற்போடப்பட்ட வரிச் செலவு** | | |
| தற்காலிக மாற்றங்களின் மீண்டெழுபவை மற்றும் மூலாரம்பம் குறிப்பு 7.2 | (89,149,683) | (10,186,245) |
| | **(89,149,683)** | **(10,186,245)** |
| **ஆண்டிற்கான வரி அறவீடுகள்** | **301,062,806** | **398,053,273** |

| **7.1 வருடத்திற்கான வருமான வரி மீதான இலாபம்** | **2017** ரூபா | **2016** ரூபா |
|---|---|---|
| இலாபத்திற்கு முன்னரான வரி | 866,804,360 | 484,732,234 |
| மொத்த அனுமதிக்கப்படா செலவுகள் | 208,624,269 | 334,625,242 |
| மொத்த அனுமதிக்கப்பட்ட செலவுகள் | (522,958,134) | (434,394,181) |
| வியாபாரஞ்சார் இலாபம் | 552,470,495 | 384,963,295 |
| வியாபாரமற்ற வருமானம் | 273,775,759 | 216,431,485 |
| வரி அறவிடக்கூடிய வருமானம் | 826,246,253 | 601,394,780 |
| 28மூ இல் வருமான வரி | 231,348,951 | 168,390,538 |
| உத்தேசிக்கப்பட்ட பங்கிலாப வரி | 158,863,852 | 79,085,424 |
| **கூட்டுத்தொகை** | **390,212,803** | **247,475,962** |

| **7.2 பிற்போடப்பட்ட வரி** | **තාවකාලික වෙනස** | **බදු බලපෑම (වත්කම්/වගකීම්)** |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| 2017 ஜனவரி 1ஆந் திகதியில் மீதி | (26,767,212) | (7,494,819) |
| வருடத்தினுள் உருவாகிய தொகை | (318,391,726) | (89,149,683) |
| 2017 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி | **(345,158,938)** | **(96,644,503)** |
| | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களின் தற்காலிக வித்தியாசம் | 443,191,688 | 124,093,673 |
| ஓய்வூதியப் பணிக்கொடை கடப்பாடுகளின் தற்காலிக வித்தியாசம் | 788,350,626 | 220,738,175 |
| முன்கொணரப்பட்ட வரி நட்டம் | - | - |
| **2017 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி** | **345,158,938** | **96,644,503** |

## 08. சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

| விபரம் | கிரயம் | | | | தேய்மானம் | | | | 2017.12.31 திகதியில் முன்கொணரப்பட்ட தொகை | 2016.12.31 திகதியில் முன்கொணரப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017.01.01. திகதியில் மீதி | கூட்டல்கள் | அகற்றுதல் | 2017.12.31 திகதியில் மீதி | 2017.01.01. திகதியில் மீதி | அகற்றுதல் | ஆண்டிற்கான அறவீடுகள் | 2017.12.31 திகதியில் மீதி | | |
| காணி | 59,057,146 | - | - | 59,057,146 | - | - | - | - | 59,057,146 | 59,057,146 |
| காணி அபிவிருத்தி | 26,324,125 | 12,672,823 | - | 38,996,948 | 14,833,136 | - | 2,516,993 | 17,350,129 | 21,646,819 | 11,490,989 |
| கட்டடங்கள் | 783,651,009 | 15,939,525 | 789,592 | 798,800,942 | 183,333,754 | 789,527 | 17,617,097 | 200,161,324 | 598,639,618 | 600,317,255 |
| அரிமரக் கொட்டகைகள், ஏனைய கட்டடங்கள் | 32,943,518 | 48,690 | - | 32,992,208 | 18,948,258 | - | 4,530,468 | 23,478,726 | 9,513,482 | 13,995,260 |
| பாதைகளும் புகையிரதப் பாதைகளும் | 18,421,732 | - | - | 18,421,732 | 7,358,581 | - | 781,959 | 8,140,540 | 10,281,191 | 11,063,150 |
| பொறித்தொகுதிகள், இயந்திரோபகரணங்கள் | 678,400,318 | 23,212,257 | 4,974,359 | 696,638,216 | 520,295,149 | 3,583,549 | 31,730,680 | 548,442,280 | 148,195,935 | 158,105,168 |
| குத்தகைக்குரிய காணிகளும் கட்டடங்களும் | 148,311 | - | - | 148,311 | 148,311 | - | - | 148,311 | - | - |
| பாதைகளை அமைக்கும் இயந்திரங்களும் உபகரணங்களும் | 60,450 | - | - | 60,450 | 60,450 | - | - | 60,450 | - | - |
| கருவிகளும் உபகரணங்களும் | 6,014,975 | 54,450 | - | 6,069,425 | 5,381,744 | - | 261,123 | 5,642,867 | 426,557 | 633,230 |
| மின்சார உபகரணங்கள் | 19,040,584 | 1,873,864 | 596,109 | 20,318,339 | 10,632,012 | 587,441 | 1,373,833 | 11,418,404 | 8,899,936 | 8,408,573 |
| வாகனங்கள் | 589,013,019 | 28,909,740 | 3,577,176 | 614,345,583 | 488,698,215 | 3,577,051 | 45,343,181 | 530,464,345 | 83,881,238 | 100,314,804 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 46,223,563 | 3,917,666 | 17,903 | 50,123,326 | 30,305,941 | 17,355 | 4,821,508 | 35,110,094 | 15,013,232 | 15,917,622 |
| அலுவலக உபகரணங்கள் | 34,665,396 | 1,299,838 | 772,176 | 35,193,058 | 28,807,692 | 772,131 | 1,857,256 | 29,892,817 | 5,300,241 | 5,857,704 |
| கணினிகளும் உதிரிப்பாகங்களும் | 68,488,923 | 4,021,114 | 4,740,706 | 67,769,331 | 52,113,648 | 4,740,321 | 6,322,806 | 53,696,133 | 14,073,198 | 16,375,275 |
| நானாவித சொத்துக்கள் | 28,113,590 | 1,707,094 | 34,800 | 29,785,884 | 21,331,225 | 34,800 | 2,900,519 | 24,196,944 | 5,588,940 | 6,782,365 |
| முன் நிர்மாணிக்கப்பட்ட கட்டமைப்புக்கள் | 4,938,333 | - | - | 4,938,333 | 4,938,333 | - | - | 4,938,333 | - | - |
| குத்தகைக்குரிய காணிகள் - இரத்தினபுரி | 680,300 | - | - | 680,300 | 680,300 | - | - | 680,300 | - | - |
| **கூட்டுத்தொகை** | **2,396,185,292** | **93,657,061** | **15,502,821** | **2,474,339,532** | **1,387,866,749** | **14,102,175** | **120,057,423** | **1,493,821,997** | **980,517,535** | **1,008,318,543** |

*அறிக்கையிடும் நாளாகையில் ஆகுசெலவு 1,067,455,747.00 ரூபாவான முழுதாகக் கழிக்கப்பட்ட சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொகையொன்று கூட்டுத்தாபனத்திற்கு உரியதாகும்.

## 09. அருவச் சொத்துக்கள்

| விபரம் | கிரயம் | | | | தேய்மானம் | | | | 2017.12.31 திகதியில் முன்கொணரப்பட்ட தொகை | 2016.12.31 திகதியில் முன்கொணரப்பட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2017.01.01. திகதியில் மீதி | கூட்டல்கள் | அகற்றுதல் | 2017.12.31 திகதியில் மீதி | 2017.01.01. திகதியில் மீதி | அகற்றுதல் | ஆண்டிற்கான அறவீடுகள் | 2017.12.31 திகதியில் மீதி | | |
| கணினி மென்பொருள்கள் | 4,209,432 | 980,411 | - | 5,189,843 | 2,851,757 | - | 894,213 | 3,745,970 | 1,443,873 | 1,357,674 |
| **கூட்டுத்தொகை** | **4,209,432** | **980,411** | **-** | **5,189,843** | **2,851,757** | **-** | **894,213** | **3,745,970** | **1,443,873** | **1,357,674** |



## 10. உயிரியல்சார் சொத்துக்கள்

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **திசெம்பர் 31ஆந் திகதியில்** | | |
| வருட ஆரம்பத்தில் மீதி | 6,042,270 | 5,317,379 |
| மீள் நடுகை காரணமாக அதிகரிப்பு | 534,746 | 724,891 |
| **வருட இறுதியில் மீதி** | **6,577,016** | **6,042,270** |

எமது கணக்கீடுகளின் படி தேக்கு மரமொன்று முதிர்ச்சியடையும் காலம் கன்றினை நட்ட நாளிலிருந்து 35 வருடங்கள் வரையிலான காலமாகும். தேக்கு மரத்தின் விஞ்ஞான ரீதியான வளர்ச்சி ஏற்படுவது அதன் ஆயுட்காலம் 10 வருடங்கள் எடுக்கும் எனக் குறிப்பிடலாம். ஒரு தேக்கு மரத்தின் விஞ்ஞான ரீதியான வளர்ச்சி அதனை நட்ட நாளிலிருந்து 10 வருட காலப்பகுதி எடுக்கும உயிரியல்சார் வளர்ச்சிக்கு இக்காலப்பகுதியினுள் மேற்கொள்ள வேண்டிய செலவினம் போதியதாக இல்லை எனக் கருதப்படுகின்றது. அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்திற்கு உரிய தேக்கு பயிர்ச்செய்கை இன்னும் 4 வருடங்கள் முதிர்ச்சியடையா பயிர்ச்செய்கைப் பிரிவிற்கு உரியதாகும். அப்பயிர்ச் செய்கை முதிர்ச்சியடையும் போது அதற்கு மேற்கொள்ள வேண்டிய முதலீடுகள் இருப்பின் அப்பெறுமானமும் உட்பட மொத்தப் பெறுமானம் முதிர்ச்சியடையா கணக்குகளில் இருந்து முதிர்ச்சியடைந்த கணக்குகளுக்கு மாற்றப்படும்.

கூட்டுத்தாபனத்திற்குரிய தேக்கு மரப் பயிர்ச்செய்கை புளியங்குளம், மதவாச்சி, செவனபிட்டி, வினீத்தகம ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படுகின்றது.

## 11. முதலீடுகள்

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **11.1 முதலீடுகள் - நீண்ட கால** | | |
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| | | |
| **நிலையான வைப்புக்களில் முதலீடு - நீண்ட கால** | | |
| அரச நிறுவனங்களில் தற்காலிக மிகை நிதியக்கணக்கு | 431,403,535 | 405,727,407 |
| அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 173,287,242 | 159,766,196 |
| | **604,690,777** | **565,493,603** |
| **பங்குகளில் முதலீடு** | | |
| காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்திச் (பிரைவட்) லிமிரட் | 500,000 | 500,000 |
| வரையறுக்கப்பட்ட லங்கா ரிம்பர் பிலான்டேஷன் லிமிரட் | - | 30,000,000 |
| (-) முதலீட்டுப் பெறுமதி இழப்பு | - | (30,000,000) |
| | **500,000** | **500,000** |
| **கூட்டுத்தொகை** | **605,190,777** | **565,993,603** |

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| **11.2 முதலீடுகள் - குறுகிய கால** | | |
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| | | |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | | |
| மக்கள் வங்கி | 367,323,062 | 449,551,554 |
| இலங்கை வங்கி | 1,327,057,585 | 610,801,627 |
| **கூட்டுத்தொகை** | **1,694,380,646** | **1,060,353,181** |

| 12. இருப்புக்கள் | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| வியாபார இருப்புக்கள் | 1,527,107,769 | 1,293,964,826 |
| இருப்புக்களின் சேதங்கள் | (198,077,293) | (168,503,904) |
| | **1,329,030,475** | **1,125,460,922** |
| எடுத்துச் செல்லப்படும் இருப்புக்கள் | - | 3,985,398 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் | 32,421,998 | 40,692,396 |
| களஞ்சியசாலைகள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 83,836,328 | 96,933,841 |
| பரிகரிப்புப் பதார்த்தங்கள் | 52,575,012 | 68,263,473 |
| எரிபொருள் மற்றும் எண்ணைய் | 2,985,371 | 3,413,001 |
| காகிதாதிகள் | 12,298,381 | 14,253,913 |
| **கூட்டுத்தொகை** | **1,513,147,565** | **1,353,002,944** |

| 12.1 இருப்புக்களின் பகுப்பாய்வு | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| அரசாங்க காணிக் குற்றிகள் | 937,127,446 | 789,182,275 |
| அரசாங்க காணி மரத்துண்டங்கள் | 243,774,881 | 214,442,149 |
| இறக்குமதி செய்யப்பட்ட மரத்துண்டங்கள் | 44,138,449 | 50,597,751 |
| தனியார் காணிக் குற்றிகள் | 389,594 | 3,819,453 |
| அரசாங்க காணி சிலீப்பர்கள் | 5,076,610 | 1,023,882 |
| தனியார் காணி சிலீப்பர்கள் | 8,701,121 | 6,596,657 |
| அரசாங்க காணி மின் கம்பங்கள் | 27,271,525 | 33,662,444 |
| தனியார் காணி மின்கம்பங்கள் | 25,498,931 | 6,878,655 |
| ஏனையவை | 28,536,736 | 17,156,101 |
| தளபாடங்கள் | 206,592,475 | 170,605,459 |
| **கூட்டுத்தொகை** | **1,527,107,769** | **1,293,964,826** |

| 13. வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை | | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | | |
| வியாபாரக் கடன்பட்டோர் | | 514,979,365 | 755,058,341 |
| பெறுமதி இழப்பு உதவுதொகை | | (80,400,519) | (88,143,065) |
| | | **434,578,846** | **666,915,276** |
| பணிக்குழாத்தினரின் கடன் | 13.2 | 217,112,609 | 175,566,909 |
| வேறு கடன்பட்டோர் | 13.1 | 46,917,602 | 25,711,445 |
| **வைப்புக்கள் மற்றும் முன் கொடுப்பனவுகள்** | | | |
| உள்நாட்டுக் கொள்வனவு முற்பணம் | | 19,331,296 | 13,980,491 |
| முன்கொடுப்பனவுகளுக்கான முற்பணம் | | 4,268,634 | 6,351,577 |
| அரிமர வழங்கல் முற்பணம் | | 13,628,480 | 7,392,962 |
| வைப்புக்களுக்காக கிடைக்க வேண்டிய வட்டி | | 95,438,716 | 50,623,762 |
| திருப்பி அனுப்பப்பட்ட காசோலைகள் | | 1,385 | 47,824 |
| கதிர்காம அஷ்டபல நிதியம் | | 900,000 | 935,000 |
| நீதிமன்ற வைப்புக்கள் | | 8,778,248 | 8,778,248 |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | | 1,661,488 | 2,816,411 |
| வனப் பாதுகாப்பு திணைக்களம் | | 25,785,621 | 20,202,147 |
| துறைமுக அதிகார சபை | | - | 563,698 |
| **கூட்டுத்தொகை** | | **868,402,923** | **979,885,750** |

| 13.1 வேறு கடன்பட்டோர் | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| நானாவிதக் கடன்பட்டோர் | 28,627,258 | 10,338,537 |
| பொது வைப்புக்கள் | 18,656,963 | 15,739,528 |
| ஏற்பாடு | (366,620) | (366,620) |
| **கூட்டுத்தொகை** | **46,917,602** | **25,711,445** |

| 13.2 பணிக்குழாத்தில் கடன்பட்டோர் | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| **பணிக்குழாத்தினர் கிடைக்கவேண்டியவை** | | |
| வாகனக் கடன் | 6,761,200 | 2,757,477 |
| இடர்க் கடன் | 164,575,656 | 139,641,490 |
| மின் உபகரணக் கடன் | 32,765 | 33,078 |
| மிதிவண்டிக் கடன் | 1,121,884 | 577,680 |
| மடிக்கணினி கடன் | 21,922,972 | 26,474,658 |
| தளபாடக் கடன் | 947,924 | 1,223,870 |
| | **195,362,402** | **170,708,253** |
| **முற்பணம் மற்றும் வேறு கிடைக்கவேண்டியவை** | | |
| சம்பளம் மற்றும் படிகள் முற்பணம் | 2000 | 12,000 |
| விசேட சம்பள முற்பணம் | 13,594,971 | - |
| பயணச் செலவு முற்பணம் | 15,827 | 17,950 |
| பண்டிகை முற்பணம் | 3,876,495 | 3,891,100 |
| உள்ளகக் கடன் குறிப்புக்கள் | 73,285 | 405,506 |
| ஊழியர் அறவீடுகள் | 452,226 | 478,942 |
| சலுசல துணிமணிக் கடன் | 3,735,403 | 53,158 |
| | **21,750,207** | **4,858,656** |
| **கூட்டுத்தொகை** | **217,112,609** | **175,566,909** |

| 14. காசு மற்றும் காசுக்கு சமமானவை | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| கையிலுள்ள பணம் | 1,055,500 | 999,500 |
| மாறும் காசு | 24,791,076 | 21,803,106 |
| இலங்கை வங்கி | 47,421,508 | 161,613,910 |
| இலங்கை வங்கி - அழைப்பு வைப்புக்கள் | 273,905,930 | 74,527,443 |
| **கூட்டுத்தொகை** | **347,174,014** | **258,943,959** |

| 15. பங்களிக்கப்பட்ட மூலதனம் | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| இலங்கை அரசாங்க நிதியம் | 25,584,808 | 25,584,808 |
| வன பாதுகாப்பு திணைக்களத்தினால் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்கள் | 10,714,815 | 10,714,815 |
| உலக வங்கி உதவிகள் | 708,202 | 708,202 |
| கனேடிய மற்றும் பிரித்தானிய உதவி நிதியம் | 4,495,843 | 4,495,843 |
| **கூட்டுத்தொகை** | **41,503,668** | **41,503,668** |

| 16. ஊழியர் கடன் சுழல் நிதியம் | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| வருட ஆரம்பத்தில் மீதி | 243,052,926 | 236,650,441 |
| கிடைக்கப் பெற்ற ஊழியர் கடன் வட்டி | 8,009,603 | 6,402,485 |
| வருடத்தில் நிதிய மாற்றம் | 81,000,000 | |
| **வருட இறுதியில் மொத்த நிதியம்** | **332,062,529** | **243,052,926** |
| திசெம்பர் 31ஆந் திகதியில் பயன்படுத்தப்பட்ட நிதியத்தின் பெயரளவிலான பணமதிப்பு | 261,517,246 | 223,163,229 |
| **திசெம்பர் 31ஆந் திகதியில் பயன்படுத்தப்படாத நிதியம்** | **70,545,283** | **19,889,697** |

| 17. ஓய்வூதிய நலக் கடப்பாடுகள் | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| நிதி நிலைமைக் கூற்றில் இனங்காணப்பட்ட பெறுமானங்கள் கீழ்வருமாறு | | |
| வருட ஆரம்பத்தில் மீதி | 438,573,892 | 366,887,129 |
| வருடத்திற்கான அறவீடு | 41,973,758 | 20,134,412 |
| வருடத்திற்கான வட்டி | 39,364,743 | 35,979,362 |
| வருடத்தினுள் குறை /(மிகை) அறவீடு | 323,413,595 | 51,403,312 |
| வருடத்திற்குள் கொடுப்பனவுகள்/ செலுத்தவேண்டியவை | (54,975,364) | (35,830,323) |
| **வருட இறுதியில் மீதி** | **788,350,624** | **438,573,892** |

| இலாபம் அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்பட்ட பெறுமானங்கள் கீழ்வருமாறு | | |
|---|---|---|
| வருடத்திற்கான அறவீடு | 41,973,758 | 20,134,412 |
| வருடத்திற்கான வட்டி | 39,364,743 | 35,979,362 |
| **இலாப அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்பட்ட பெறுமானம்** | **81,338,501** | **56,113,773** |

| விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட பெறுமானங்கள் கீழ்வருமாறு | | |
|---|---|---|
| வருடத்திற்கான (மிகை) அல்லது குறைபாடு | 323,413,595 | 51,403,312 |
| **விபரமான வருமானக் கூற்றில் இனங்காணப்பட்ட பெறுமானம்** | **323,413,595** | **51,403,312** |

2017 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளவாறு டுமுயுளு 19 □ஊழியர் நன்மைகளின்□ தேவைக்கிணங்க இருக்கும் எல்லா ஊழியர்களுக்கும் சூத்திர முறையினைப் பயன்படுத்தி பணிக்கொடைக்கான பொறுப்புக்கள் கணிக்கப்படும். 1983இன் இல 12ஐக் கொண்ட ஓய்வூதியப் பணிக்கொடைச் சட்டத்திற்கு இணங்க தொடர்ச்சியாக 5 வருடங்களுக்கு மேலாக சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த ஊழியர்கள் பணிக்கொடையினைப் பெற உரித்துடையராவர. பின்வரும் முக்கிய அனுமானங்கள் மேற்படி பணிக்கொடை பொறுப்பினை அடைவதற்குப் பயன்படுத்தப்பட்டன..

| | 31.12.2017 | 31.12.2016 |
|---|---|---|
| வட்டிக்கழிவு வீதம் | 10.28% | 10.88% |
| சம்பள அதிகரிப்பு வீதம் | 13.12% | 6% |
| ஊழியர் புரள்வு வீதம் | 5.72% | 4.03% |
| ஓய்வூதியம் பெறும் வயது | 60 | 60 |

| 18. செலுத்த வேண்டிய வருமான வரி | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி | | |
| வருட ஆரம்பத்தில் மீதி | 132,894,534 | 291,486,919 |
| வைப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வரி | (15,948,065) | (10,976,262) |
| பொருளாதார சேவைகள் கட்டணம் | (21,844,701) | (17,087,861) |
| வருடத்திற்குள் கொடுப்பனவுகள் | (217,089,232) | (538,767,780) |
| முன்னைய வருடத்திற்கான வரிகளுக்கான குறை /(மிகை) ஏற்பாடு | (314) | 160,763,556 |
| வருமான வரிக்கான ஏற்பாடு | 390,212,803 | 247,475,962 |
| **வருட இறுதியில் மீதி** | **268,225,025** | **132,894,534** |

| 19. வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவை | 2017<br>ரூபா | 2016<br>ரூபா |
|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| மத்திய வங்கி- ஊழியர் சேமலாப நிதியம் | 18,067,553 | 15,277,705 |
| தொழில் திணைக்களம் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 2,141,317 | 1,833,515 |
| சேரும் செலவினங்கள் | 130,272,172 | 167,949,943 |
| மீளளிக்கவேண்டிய விலைமனு வைப்புக்கள் | 11,590,240 | 5,005,368 |
| பிணை வைப்புக்கள் - பணிக்குழாத்தினர் தவிர | 67,971,065 | 61,610,495 |

| | | |
|---|---|---|
| செலுத்தவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் | 1,823,228 | 3,107,828 |
| தடுத்து வைக்கப்பட்டுள்ள பணம் | 29,738,097 | 20,884,478 |
| ஏனைய கடன்கொடுத்தோர் | 63,191,276 | 64,978,563 |
| வனப் பாதுகாவலர் | 587,972,172 | 368,248,331 |
| உரிமைப்பங்கு- வன ஜீவி திணைக்களம் | 2,614,486 | 810,697 |
| உரிமைப்பங்கு- விவசாயத் திணைக்களம் | 722,648 | - |
| நாட்டைக் கட்டியெழுப்பும் வரி | 7,184,941 | 7,959,651 |
| கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரி | 43,201,698 | 46,525,571 |
| **கூட்டுத்தொகை** | **966,490,894** | **764,192,145** |

**20. உரிய தரப்பினருடனான கொடுக்கல் வங்கல்கள்**

* வன பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதானியும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரான வன பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் கூட்டுத்தாபனத்திற்கு அரிமரங்களை வெட்டுவதற்கு வனப்பயிர்ச் செய்கையினை விடுவிக்கும் பொது தேசிய வன முகாமைத்துவத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்வதுடன், வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் 1,224,025,093.'.- ரூபா பெறுமதியான மரங்களை வருடத்தினுள் கூட்டுத்தாபனத்திற்குப் பெற்றுக் கொடுத்துள்ளது.

* அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகக் கட்டடத்தின் ஒரு பகுதி மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சிற்கு மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அந்நிறுவனங்கள் பாவனைக்கு எடுக்கும் அளவின் படி வாடகை வருமானத்தினைக் கணிப்பிட்டுள்ளது.

| | சதுர அடி அளவு | வாடகைத் தொகை (ரூ) |
|---|---|---|
| வன பாதுகாப்புத் திணைக்களம் | 22,040 | 550,000.00 |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 23,058 | 676,232.50 |

நிதி நிலைமைக் கூற்றுக்களை வெளியிடும் திகதியில் மேற்படிஉரிய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களின் போது ஏற்பட்ட மீதிகள் பின்வருமாறு.

| | 2017 ரூபா | 2016 ரூபா |
|---|---|---|
| திசெம்பர் 31ஆந் திகதியில் | | |
| **உரிய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய** | | |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | 587,972,172 | 368,248,331 |
| | **587,972,172** | **368,248,331** |
| **உரிய தரப்பினருக்கு கிடைக்க வேண்டிய** | | |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | 25,785,621 | 20,202,147 |
| மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 1,661,488 | 2,816,411 |
| | **27,447,108** | **23,018,558** |



# நிதிக் கலைச்சொற்கள்

1. **கணக்கியற் கொள்கைகள்**
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மற்றும் முன்வைக்கும் போது கூட்டுத்தாபனத்தினால் பிரயோகிக்கப்படும் விசேட மூலக்கோட்பாடுகள், அடிப்படைகள், நியமங்கள், சட்டங்கள், மற்றும் செயல் நெறிகள்.

2. **தவணைமுறைக் கடன் கரைப்பு**
அருவச்சொத்துக்களை அதன் விளைபயன்மிக்க ஆயுகாலத்திற்குள் முறையாகப் பகிர்ந்தளித்தல்.

3. **சேரும் செலவு அடிப்படை**
வருமானம் மற்றும் செலவினங்களின் கிடைப்பனவு அல்லது கொடுப்பனவுக் கால அளவைக் கவனத்திற் கொள்ளாது, ஒன்றையொன்று செம்மைப்படுத்தும் மூலக்கோட்பாடு.

4. **காசும் காசுக்கு சமமானவையும்**
3 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான காலப்பகுதியில் திரவத்தன்மையான முதலீடுகளுடனான அசல் முதிர்ச்சிகள்.

5. **வருமான ஒதுக்கீடுகள்**
முதலீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள்

6. **பெறுமதி கூட்டல்**
கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளால் மற்றும் அதன் விநியோகித்தால் உருவாக்கப்பட்ட பணத் தொகை

7. **செயற்படு சுட்டுகள்**
நடைமுறை பொறுப்புக்களிலிருந்து நடைமுறை சொத்துக்களைப் பிரிக்கும் போது கிடைப்பவை.

8. **பெறுமானத் தேய்வுகள்**
சொத்தொன்றின் தேய்வடையக்கூடிய பெறுமானத்தை அதன் விளைபயன்மிக்க ஆயுகாலத்திற்குள் முறையாகப் பகிர்ந்தளித்தல்.

9. **முடுக்கிவிடுதல்**
ஈடுபடுத்திய மூலதனத்திற்கு கடன் பெற்ற தொகை

10. **நியாயமான பெறுமதி**
அறிவுள்ள ஆர்வமிக்க கொளவனவாளர் மற்றும் அறிவுள்ள ஆர்வமிக்க விற்பனையாளருக்கு இடையிலான கொடுக்கல் வாங்கலின் போது சொத்தொன்றை பரிமாற்றம் செய்யக்கூடிய பெறுமதி

11. **சொத்துக்கள் மீதான வருவாய் (சுமுயு)**
தேறிய வருமானத்தை மொத்த சொத்துக்களின் வீதமாகக் காட்டுதலாகும். இது இலாபத்தை அளவிடும் மற்றும் நிகரான வேறு நிறுவனங்களுக்கிடையில் செயலாற்றுகையை ஒப்பிடும் அளவீடாகப் பயன்படுத்தப்படும்.

12. **பிற்போடப்பட்ட வரி**
எதிர்கால திகதியில் வரி வருமானத்தில் சேர்ப்பதற்காக மாத்திரமே தகுதிபெறக் கூடிய இன்னொரு காலப் பிரிவிற்கு/ பிரிவிலிருந்து தள்ளிவைக்கப்பட்ட தற்காலிக வேறுபாடுகளின் வரி விளைவு



அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

முகவரி: 82, “சம்பத்பாய” ரஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை, இலங்கை.

**தொலைபேசி** : +94 11 2866601 - 5 | **தொலைநகல்** : +94 11 2866623 | E-mail : stcfur@gmail.com | **இணையத்தளம்** : www.timco.lk